

வலிகாமம் வலயம் முன்னிலை
பக். 22

# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 197 வள்ளுவர் ஆண்டு: 2045 வைகாசி 28, புதன் 11.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


28°C
தெளிவான வானிலை
நாட்டின் பெரும்பான்மையான கடற்கரைப் பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிக்கக் கூடும்.

# ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குக

## இலங்கையிடம் வலியுறுத்துகின்றன அமெரிக்காவும் பிரிட்டனும்

ஜெனிவா, ஜூன் 11
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுக்கு இலங்கை அரசு ஆதரவு வழங்கவேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் வலியுறுத்தியுள்ளன.
நேற்று ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 26ஆவது அமர்வில்முதல் நாளன்றே அமெரிக்க மற்றும் பிரிட்டன் தூதுவர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளதுடன், விசாரணையுடன் தொடர்புபட்டவர்களை, இலங்கைக்குள் அனுமதிக்கவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

20 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணைக்கு ஒத்துழையோம்

### இலங்கை அரசு திட்டவட்டம்




ஜெனிவா, ஜூன் 11
ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு இலங்கை ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க.
ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 26 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இலங்கையில், 2002 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக தமது ஆணையகத்தினால் குழு நியமிக்கப்பட்டுள்ளது

20 ஆம் பக்கம் பார்க்க



## விசாரணை குழுவில் சில்வியர் கார்ட்ரைட்

ஜெனிவா, ஜூன் 11
இலங்கையின் இறுதிப்போரில் இடம்பெற்றது என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் அலுவலகத்தால் அமைக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவில் நியூஸிலாந்தைச் சேர்ந்த டேம் சில்வியர் கார்ட்ரைட்டும் இணைக்கப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
கேமர் ரூஜ் போர்க் குற்ற விசாரணை நீதிமன்ற நீதிபதியாகப்

20 ஆம் பக்கம் பார்க்க



இலங்கை விவகாரங்களில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலையிடக் கூடாது என்று கூறி, கொழும்பில் நேற்றுப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அரச சார்புக் கட்சி ஒன்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதலமைச்சரின் உருவப்பொம்மை தீயிட்டு எரிக்கப்பட்டது. விரிவான தகவல் 2 ஆம் பக்கத்தில்

## கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துங்கள்

### இலங்கை அரசுக்கு நவிப்பிள்ளை அறிவுரை



ஜெனிவா, ஜூன் 11
உண்மையைக் கண்டறியும் செய்முறையுடன் ஒத்துழைக்க இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.
ஜெனிவாவில்நேற்று ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 26 ஆவது அமர்வின் ஆரம்ப உரையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இலங்கையில் போர் முடிவடைந்ததன் 5 ஆவது ஆண்டு கடந்த மாதம் நிறைவடைந்தது. எனினும் இலங்கையில் பயங்கரவாதத்தாலும், போராலும் உண்டான வடுக்கள் இன்னும் மாறவில்லை. இலங்கையின், பொறுப்புக்கூறுதலையும் அதன் மூலம் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கும் இந்தச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டு, முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கு எமது அலுவலகம் நிபுணர் குழுவை நியமித்துள்

20 ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில் கொல்லப்பட்ட மீனவர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 11
மண்டைதீவுக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை படுகொலை செய்யப்பட்ட 31 கடற்றொழிலாளர்களின் 28 ஆவது ஆண்டு நினைவுதினம் குருநகரில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.
அதில் பொதுமக்கள், வட மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
1986ஆம் ஆண்டு ஜூன் மாதம்

20 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணைக் குழு குறித்து நாடாளுமன்றில் தீர்மானம்

### ஜனாதிபதி தலைமையிலான கலந்துரையாடலில் முடிவு

கொழும்பு, ஜூன் 11
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு குறித்து நாடாளு

20 ஆம் பக்கம் பார்க்க

## பிரச்சினையை ஆராய்ந்த பின் தெரிவுக்குழுவில் பேசுங்கள்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11
தமிழர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்த முன்னைய அறிக்கைகளை நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் விவாதியுங்கள். அதற்கு எமது தமிழ் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள் என்று நம்புகின்றேன் - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
வவுனியா செட்டிகுளம் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியினருக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே

20 ஆம் பக்கம் பார்க்க

## மீளக் குடியமர்த்த கோரி வலி.வடக்கில் போராட்டம்

### கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் திங்களன்று

யாழ்ப்பாணம், ஜூன் 11
வளலாய் மற்றும் வலி.வடக்கு மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துமாறு கோரி எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக வளலாய்க்கு மீளத் திரும்ப முடியாத நிலையில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அந்தரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அந்த

20 ஆம் பக்கம் பார்க்க

# முழுநிலாக் கருத்தாடல்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் முழுநிலாக் கருத்தாடல் நாளை வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி பலாலி ஆசிரியர் பயிற்சிக் காலாசாலைக்கு முன்பாக அமைந்துள்ள செயற்திறன் அரங்க இயக்கத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தொடக்கவுரையை நா.நவராஜ் வழங்கவுள்ளதுடன் கருத் துரையை இளைப்பாறிய அதிபர் ஆ.சபாரத்தினம் வழங்கவுள்ளார்.

கலை, இலக்கிய சமூக விஞ்ஞான அறிவியல் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு-10)

# ராமேஸ்வரம் மீனவர் இன்று கறுப்புத் துணிப் போராட்டம்

இராமேஸ்வரம், ஜூன் 11

இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் நிறுத்தவேண்டும் எனக் கோரி இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் இன்று வாயில் கறுப்புத் துணி கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மீனவர் அமைப்புக்களின் அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்று இராமேஸ்வரம் துறைமுகத்தில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில் மீனவர்களை விடுவிக்க உத்தரவிட்ட இந்திய, மற்றும் இலங்கை அரசுகளுக்கு நன்றி தெரிவித்ததுடன் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுவிக்கப்படுவதுடன் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்.

அத்துடன் இன்று திட்டமிட்டபடி வாயில் கறுப்புத் துணி கட்டிப் பேரணியாகச் சென்று இராமேஸ்வரம் ஆட்சியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும் போராட்டத்தின் முடிவில் மாநிலம் தழுவிய போராட்டத்தை அறிவிக்க உள்ளதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பா.ஜ.க தேர்தல் அறிக்கையில் மீனவர்களுக்குத் தனியாக அமைச்சும் அமைக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆகவே உடனடியாக அமைச்சும் அமைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இன்று இரண்டாவது நாளாகத் தொடரும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் சுமார் 3 கோடி ரூபா வர்த்தகம் பாதிப் படைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-14)

# மோடி, 'ஜெ'க்கு எதிராக கொழும்பில் போராட்டம்

கொழும்பு, ஜூன் 11

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஆகியோர் இலங்கை விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று தெரிவித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்பாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அரச ஆதரவுக் கட்சி ஒன்றின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டது என்று கூறப்படும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பங்கெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது நரேந்திர மோடி மற்றும் ஜெயலலிதா ஆகியோருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், தமிழக முதலமைச்சரின் உருவப் படத்தையும் தீயிட்டு எரித்தனர். ஆர்ப்பாட்டத்தால் அந்தப் பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. சுமார் ஒருமணி நேரப் போராட்டத்தின் பின்னர், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். (ற-10)

# கொடுப்பனவு வழங்காமையால் காடழிப்பை நிறுத்திய ராணுவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வளலாயில் வலி.வடக்கு மக்களை குடியேற்றும் நடவடிக்கைக்காகப் பற்றைக் காடுகளை அழிக்கும் நடவடிக்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருப்பினும் அதற்குரிய கொடுப்பனவுகள் யாழ்.மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இறுதிக் கட்டக் கொடுப்பனவுகள் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படாமையால் இராணுவத்தினர் காடழிக்கும் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமான வளலாயில், வலி.வடக்கு மக்களைக் குடியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வளலாயைச் சொந்த இடமாகக் கொண்ட மக்களின் காணிகளைச் சுவீகரித்து அதில் வலி.வடக்கு மக்களைக் குடியேற்றும் நோக்குடனேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காகக் குறித்த பகுதிகளிலுள்ள காணிகளை அளவீடு செய்வதற்காக, பற்றைக் காடுகளைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தன. இராணுவத்தினரால் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் இதற்குரிய கொடுப்பனவுகள்யாவும் மாவட்டசெயலகத்தினால் வழங்கப்பட்டு வந்துள்ளது. இது வரையில் இராணுவத்தினருக்கு 2 லட்சம் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வளலாயில் வேறு மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இதன் பின்னரும் வளலாயில் வேறு மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு நிலையில், மாவட்டச் செயலகத்தினால் இராணுவத்தினருக்குரிய இறுதிக் கட்டக் கொடுப் பனவுகள் வழங்கப்படாததால் அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த பற்றைக் காடுகளைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளை மாத்திரம் இராணுவத்தினர் இடை நிறுத்தியுள்ளனர். (கு-5)

# கடற்படை டிராக்டர் மோதி இளைஞன் காலில் காயம்

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கடற்படையினரின் டிராக்டர் வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டிருந் தவரை மோதி அதன் சில்லு அவரது காலில் ஏறிச் சென்றமையால் அவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேலணை சுருவில் பகுதியில் நேற்று முன்தினம் காலை இந்த விபத்து இடம்பெற்றது.

கல்முனையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் ரவிகீர்த்தனன் (வயது 19) என்பவரே காயமடைந்தவராவார். டிராக்டர் அவரை மோதிக் காலில் சில்லு ஏறிப் பின்னர் மரத்தில் மோதி நின்றது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (கு-4)

# செட்டிகுளத்துக்கு நேற்று முதலமைச்சர் பயணம்

வவுனியா, ஜூன் 11

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று வவுனியா செட்டிகுளம் பகுதிக்கு பயணம் மேற்கொண்டார்.

வவுனியா செட்டிகுளம் பகுதிக்கு நேற்று முற்பகல் 10 மணிக்கு சென்ற அவர், வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட அட்டவணைப் படுத்தப்படாத ஆளணியினரில் 17 பேருக்கு நியமனக் கடிதங்களை வழங்கியதோடு பிரதேச சபைக்கான கொடியையும் வெளியிட்டு வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பகல் 12.30 மணியளவில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் அமைய உள்ள மஹிந்தோதய தொழிநுட்பப் பீட கட்டடத்துக்கான அடிக் கல்லையும் முதலமைச்சர் நாட்டி வைத்தார். இவ்விரு நிகழ்விலும் அமைச்சர் ரிசாட் பதியுதீனும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான இந்திரராஜா, தியாகராஜா ஆகியோரும் பங்கேற்றனர். (கு-421)


# VACANCY

Lukshmee Group of Companies Looking for Qualified Personnel for the following vacancies:

1) Senior Accountants
2) Accounts Clerks
3) Store Keepers

**Qualifications:**

**1) Senior Accountants**

* Professionally fully Qualified Accountants or Partly Qualified Accountants with Minium 5 years Experience in any reputed Organizations.
* Males are encouraged.

**2) Accounts Clerks**

* AAT/HNDA fully completed
* Experience in the same field is an additional Qualification.
* Age limit 25-35 Years
* Males are encouraged

**3) Store Keepers**

* Minimum A/L 3 Passes.
* Age limit 25-35 Years.
* Experience in the same field preferable.

a) Senior Accountants Salary negotiable But the Right Candidates could expect a high salary.
b) Accounts Clerks/Store Keepers could expect a reasonable salary.
c) But salary and confirmations could be Negotiable after three months Probation period. Possibilities are there to Negotiate for confirmation during probation period.

**4) Office Keeping/Tea Making (Female Only)**

(அலுவலக பராமரிப்பு தேநீர் தயாரிப்பு உட்பட பெண்கள் மட்டும்)

* Minimum O/L Passed.
* Age Limit 30-40 Years.
* Experience in the same Field Preferable

Interested candidates could send their CV by email to gdf@uthayan.com

**Lukshmee** Group of Companies
23/1, 4th Lane Brown Road, Jaffna.


# பொஸன் பௌர்ணமி நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த பங்கேற்பார்

அநுராதபுரம், ஜூன் 11

நாளை இடம்பெறவிருக்கும் பொஸன் பௌர்ணமி தின் வைபவங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ கலந்து கொள்ளவுள்ளார்.

அட்டமஸ்தானாதிபதி வண. பல்லேகம சிரிநிவாச நாயக்க தேரரின் தலைமையில் நடைபெறும் சமய வைபவங்களில் கலந்து கொள்ள வரும் பல லட்சக்கணக்கான பக்தர்களின் நலன் கருதி அனைத்து விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகப் பொஸன் குழு தலைவரும் அநுராதபுரம் மாவட்டச்செயலாளருமான மஹிந்த செனவிரத்ன தெரிவித்தார்.

இம்முறை 20 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் இப்பகுதிக்கு வருவர் என எதிர்பார்க்கப்படுவதால் சுமார் 4000 பொலிசார் பாதுகாப்புக் கடமைகளுக்கென வரவழைக்கப்பட்டுள்ளனர்.


யாழ் நகரில் PIZZA உணவு வகைகள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் நாம் இன்று முதல் எமது புதிய கிளையை நெல்லியடியில் திறந்து வைப்பதில் பெருமை அடைகிறோம்.

The PIZZA FAMILY RESTAURANT





11.06.2014 முதல் 11.07.2014 வரை
விசேட விலைக்கழிவு
PIZZA தயாரிப்பில் 12 வருட அனுபவம்.
யாழ் மக்களின்
சுவைக்கேற்ப தயாரிப்பு

தேவையற்ற இரசாயன பதார்த்தங்களின் கலப்பு அற்றது.

பிரதான கிளை:
229, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0330

கிளை:
82, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
021 226 1330

(4843) (7.6)


# கவுணாவத்தை வேள்வி; நீதிமன்றத் தீர்ப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 11

கவுணாவத்தை வேள்வியை இந்தமுறை நடத்துவதா? தடைசெய்வதா? என்பது தொடர்பான வழக்கின் தீர்ப்பு மல்லாகம் நீதிமன்றினால் இன்று வழங்கப்படவுள்ளது.

மிருக பலியை நிறுத்துமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வரும் நிலையிலும் அது நிறுத்தப்படவில்லை.

எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ள கவுணாவத்தை வேள்வியைத் தடுத்து நிறுத்துமாறு கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனை நிறுத்துமாறுகோரி சமூக நலன்விரும்பி ஒருவரால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம் அது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. அதனையடுத்துத் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது. வழக்குத் தொடுநர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.திருக்குமரன், முன்னேஸ்வரம் காளி கோயிலில் கடந்த வருடம் வேள்வி இடம்பெறவிருந்த நிலையில் அதனை மேன்முறையீட்டு நீதிமன்றம் தடுத்து நிறுத்தியிருந்தது. அது தொடர்பான தீர்ப்பில் வேள்வியின் பின்னர் இறைச்சி விற்பனை சட்டத்துக்கு முரணான செயல். அது குற்றவியல் குற்றம். மிருகவதைச் சட்டத்துக்கு எதிரானது. தவிர இது இந்து சமயக் கோட்பாடுகளுக்கு முரணானது. இந்து மதத்தைப் புண்படுத்தும் செயல் என்று வாதிட்டார்.

எதிர் மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பி.சுந்தரலிங்கம், இது சமய நம்பிக்கை. வேள்வியை நடத்துவது சமய நம்பிக்கைக்கு எதிரானது. இந்த விடயத்தில் தடைசெய்யக்கூடாது. தடை செய்யும் பட்சத்தில் ஆபத்து ஏற்படலாம் என்பது உட்பட பல வாதங்களை முன்வைத்திருந்தார்.

அவற்றைப் பரிசீலித்த நீதிமன்று அது தொடர்பான தீர்ப்பை இன்று அறிவிக்கவுள்ளது. (கு-4)

உதயன்
11.06.2014



# மாற்று ஆற்றல் உடையோருக்கு சமூகத்தில் சம அந்தஸ்து தேவை

## வடமாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 11

கொடிய போரால் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாகவும், குடும்பங்களை இழந்து அனாதைகளாகவும், விதவைகளாகவும் வாழும் குடும்பங்களை முதற் கண்கொண்டு பார்க்க வேண்டியது எமது இன்றைய காலத்தின் தேவையாகும் என்று வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகளின் ஒன்றியத்துக்கும் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து : வர்த்தக வாணிப அமைச்சருக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் மன்னார் மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண மாற்றுத் திறனாளிகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் உரையாற்றும்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

"மாற்றாற்றல் உள்ளவர்களும் சமூகத்தில் சம அந்தஸ்துடன் வாழ வழி செய்யப்பட வேண்டும். எனவே எனக்கு கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. எனவே அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் மாற்றாற்றல் உள்ளவர்களுக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஊடாக முன்னெடுக்கப்படும் திட்டங்களில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், போக்குவரத்தின்போது, பஸ்களில் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ஆசனங்களை வழங்கக் கூடிய வகையிலான ஒழுங்குகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் மாற்றாற்றல் உள்ளவர்களை இனம் கண்டு அவர்களுக்கும் இந்தச்சங்கத்தினூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

வட மாகாணத்தில் இயங்கும் 12 மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வு சங்கங்களில் 9 சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கு வருகை தந்த 9 சங்கங்களின் பிரதி நிதிகளும் முகாமையாளர் களும் தமது தேவைகளை யும், கருத்துக்களையும் முன் வைத்தனர். சுயதொழில், கற்றல் உபகரணங்கள், சீரான போக்குவரத்து, கணினி வசதிகள், புதிய கைத்தொழில் முறைகளை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு தேவைகள் குறித்த கோரிக்கைகள் அவர்களால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-56)



மாற்றுத் திறனாளிகள் ஒன்றியத்துடனான கலந்துரையாடலில் பிரச்சினைகளைக் கேட்டறியும் அமைச்சர்

## நிர்வாணத்துடன் மாணவியை துரத்திய இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 11

நிர்வாணத்துடன் மாண வியை துரத்திய இரு இளை ஞர்களை ஊர்காவற்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காரைநகர் வேலைப்பிட்டி கள்வந்தாழ்வு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 18 மற்றும் 19 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்களே நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் உயர் தரத்தில் கல்வி பயிலும் குறித்த மாணவி மாலை வகுப்புக்கு சென்று வீடு திரும்பும் வழியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆள் நடமாட்டமற்ற வீதியால் வந்த இரு இளைஞர்கள் திடீரென தமது ஆடைகளை களைந்து விட்டு, குறித்த மாணவியை கலைத்துச் சென்றுள்ளனா.

குறித்த மாணவி அலறி அடித்துக் கொண்டு வீட்டுக்கு சென்று பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். குறித்த மாணவியின் பெற்றோர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் அதே இடத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்தனர். விசாரணையின் பின்னர் நீதிமன்றில் அவர்களை முன்னிலைப்படுத்தவுள்ளதாகத் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-106)

## 2,200 குடும்பங்களுக்கு வடக்கு, கிழக்கில் கழிப்பறைகள்

வடமராட்சி, ஜூன் 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களில், குறைந்த வருமானம் பெறும் 2,200 குடும்பங்களுக்கு 2,200 கழிப்பறைகள் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாஸ தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் கழிப்பறை அமைக்க 50 ஆயிரம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதால், இந்தத் திட்டத்துக்கென ஆயிரத்து 400 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் மூலம் வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மீள்குடியேறியவர்கள் பெரிதும் நன்மை அடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது குறிப்பிட்ட மாவட்டங்களில் கழிப்பறைகள் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுவதால் அந்த மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

# ஆலயத் திருவிழாக் காலங்களில் மக்கள் விழிப்பாக செயற்படுங்கள்

## திருட்டுக்களைத் தவிர்க்க அறிவுறுத்துகின்றனர் பொலிஸார்

கொழும்புத்துறை, ஜூன் 11

யாழ். குடாநாட்டில் தினமும் பல்வேறு ஆலயங்களிலும் தேர்த்திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள் நடைபெறுவதால் பெருமளவு மக்கள் திருவிழாக் காலங்களில் கோயில்களில் ஒன்று கூடியுள்ள வேளை இடம்பெறக் கூடிய திருட்டுச் சம்பவங்களை தவிர்த்துக் கொள்ள பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறு பொலிஸ் வட்டாரங்கள் அறிவுறுத்துகின்றன.

**கூடியவரை ஆலயங்களுக்கு அதிகமான நகைகளை அணிந்து செல்வதைத் தவிர்ப்பதோடு வீட்டில் ஒருவராவது இல்லாது எல்லோரும் ஒன்றாக வெளியேற வேண்டாம்**

சன நெருக்கடியைப் பயன்படுத்தி ஆண்கள், பெண்கள் என திருட்டில் ஈடுபடும் கும்பல்கள் தருணம் பார்த்திருந்து தமது கைவரிசையைக் காட்டக்கூடும்.

எனவே ஆலய விசேட திருவிழாக்களில் முண்டியடித்து அர்ச்சனை வழிபாடுகளில் ஈடுபடும்போதும், அங்கு பரிமாறப்படும் உணவு வகைகளைப்பெற சனக் கூட்டத் துக்குள் செல்லும்போதும் தத்தமது தங்க நகைகளை அவதானித்து பத்திரப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கூடியவரை ஆலயங்களுக்கு அதிகமான நகைகளை அணிந்து செல்வதைத் தவிர்ப்பதோடு வீட்டில் ஒருவராவது இல்லாது எல்லோரும் ஒன்றாக வெளியேற வேண்டாமெனவும்அறிவுறுத்தப்படுகிறது.

குடாநாட்டில் களவு, கொள்ளை, வழிப்பறி என்பன நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதையொட்டி பொலிஸார் அதிரடிப் படையினருடன் இணைந்து விசேட ரோந்து சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சந்தேகத்துக்கிடமான புதிய முகங்கள் தொடர்பில் பொது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் கண்ணோட்டமாக செயற்பட்டால் திருட்டு முயற்சிகளை தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. (வ-135)

## நாகபூஷணி அம்மனுக்கு 28 இல் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா நடைபெறம்.

எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி புதன்கிழமை இரவு முத்துச் சப்பறத் திருவிழாவும் ஜூலை 4 ஆம் திகதி இரவு கைலைக் காட்சியும் ஜூலை 6 ஆம் திகதி எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் ஜூலை 7 ஆம் திகதி சிவ பூசைக் கைலைக் காட்சியும் அன்றைய தினம் இரவு திரு மஞ்சமும் ஜூலை 10 ஆம் திகதி பகல் கைலைக் காட்சியும் இரவு சப்பறமும் ஜூலை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தேர்த் திருவிழாவும் ஜூலை 12 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை திருவூஞ்சல், கொடியிறக்கம் என்பனவும் ஜூலை 13 ஆம் திகதி இரவு (பூங்காவனம்) தெப்போற் சவமும் நடைபெறும்.

யாத்திரிகர்களின் வசதிகருதி வழமைபோல் இந்த முறையும் அன்னதான சபையினர், தாகசாந்தி நிலையத்தினர், போக்குவரத்து சேவையினர், மோட்டார் படகுச் சேவையினர், சுகாதார சேவைப் பகுதி, தொண்டர் சபையினர், சாரணர் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினர், செஞ்சிலுவைச் சங்கம், மக்கள் நலன்புரிச் சங்கங்கள் ஆகிய தரப்பினர்கள் தேவையான ஒழுங்குகளை செய்துள்ளதாகவும் ஆலய அறங்காவல் சபையினர் தெரிவித்துள்ளனர்.

(வ-7)

## கேக் கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 11

யோகிஸ் அழகு நிலையத்தின் கேக் கண்காட்சி இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அம்மன் வீதி, நல்லூரில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தக் கண்காட்சி வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும். (க)

## சுற்றுச்சூழல் வாரத்தையொட்டி பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு வடமாகாண கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பொதுமக்களால் சேகரித்து வழங்கப்படும் ஒவ்வொரு கிலோ பாதீனியம் செடிகளுக்கும் 10 ரூபா வீதம் ஊக்குவிப்புத் தொகையாகவும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் இன்று புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை குறிக்கப்பட்ட இடங்களில் கொள்வனவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

புத்தூர் எல்லாளன் சனசமூக நிலையத்திலும், சுன்னாகம் வீதி, புத்தூர் வளர்மதி சனசமூக நிலையத்திலும், சிறுப்பிட்டி மேற்கு சுடலையடியிலும், அச்செழு மலர்மதி சனசமூக நிலையத்திலும், அச்சுவேலி மேற்கு கைத்தொழில் பேட்டையிலும், வயாவிளான் குட்டியப்புலம் பொதுநோக்கு மண்டபத்திலும், ஏழாலைச் சந்தி கிழக்கு சனசமூக நிலையத்திலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பஸ் நிலையத்திலும், கைதடி கிழக்கு பிரதேச சபை பொது மண்டபத்திலும் கோண்டாவில் குமரக் கோட்டம் சன சமூக நிலையத்திலும், மாதகல் பாண வெட்டி அம்மன் ஆலயத்திலும், உடுப் பிட்டி வல்லை நாற்சந்தி கிருஷ்ணன் கோவிலடியிலும் பாதீனியக் கொள்வனவுகள் இடம்பெறவுள்ளன. (வ-14)

## குருநகர் தொடர்மாடி வீடுகள் கையளிப்பு நிகழ்வு 15 இல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

குருநகர் தொடர்மாடி வீடுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி கையளிக்கவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளா மு. ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச வீட்டைக் கையளிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச குருநகர் தொடர் மாடியின் புனரமைப்பு பணியை ஆரம்பித்து வைத் தார்.

இந்தநிலையில், எதிர்வரும் 15 ஆம் திகதி குருநகர் தொடர் மாடி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு, கையளிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

(வ-106)

# மீனவரின் பிரச்சினையை மோடியே தீர்க்க முடியும்

## தமிழகத்தின் நம்பிக்கையும் அதுவே என்கிறார் ராமதாஸ்



சென்னை, ஜூன் 11

இலங்கை அரசுடன் கடுமையான முறையில் நடந்துகொண்டு, மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் மாத்திரமே முடியும் என்று தெரிவித்துள்ளார் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்.

தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுகிறமை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"தமிழக மீனவர்களுக்கு எதிரான இலங்கையின் அட்டூழியங்கள் இடைவிடாது தொடர்கின்றன. தொடரும் கைதுகளால் இந்திய மீனவர்களது வாழ்வாதாரங்கள் சிதைவடைகின்றன. தமிழக மீனவர்கள் படும் துயரங்களை தாம் அறிந்து வைத்துள்ளார் என்று தமிழகத்துக்கு வந்திருந்த போது பிரதமர் நரேந்திர மோடி கூறியிருந்தார்.

இந்திய மத்திய ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கைப் படையினரின் கொட்டம் அடக்கப்படும் என்று மீனவர்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால், ஒருபுறம் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவதைப்போல நாடகமாடும் இலங்கை அரசு, இன்னொருபுறம் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு வருகிறது.

இல்ங்கை கடற்படையினரின் அத்துமீறல்களை கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக எதிர்கொண்டு களைத்து விட்ட தமிழக மீனவர்கள் தற்போது நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசைத் தான் மலைபோல நம்பியிருக்கின்றனர். மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்றுள்ளது. (வ)



சிரமதானத்தில் ஈடுபடும் மாணவர்கள்

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று மன்னாரில்

மன்னார், ஜூன் 11

வடக்கு மாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சால் சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு மன்னார் கல்வி வலயத்தில் விழிப்புணர்வு வார நிகழ்வுகள் அல் அஸ்கார் தேசியப் பாடசாலையில் நேற்று நடைபெற்றன. அதன்போது மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டங்களுக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு ஆணையாளர்களுக்கான நியமனக் கடிதங்களை அமைச்சர் த.குருகுலராஜா வழங்கி வைத்தார்.

அந்நிகழ்வுகளைத் தொடர்ந்து மாணவர்களும் பாடசாலையில் இருந்து பிரதான வீதிகளினூடாக மன்னார் பெரிய பாலம் வரைக்கும் ஊர்வலமாகச் சென்று கடற்கரையைச் சுத்தப்படுத்தும் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் மீ.மு.ஷியான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரும், வடமாகாண சபை உறுப்பினர்கள் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன், அ.அஸ்மின், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட அதிகாரி ஹிமலதா ராஜேஸ்வரன் உட்பட மன்னார் கல்வி வலயத்தின் பல்வேறு பாடசாலைகளையும் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

ஜூன் 5 தொடக்கம் ஜூன் 11 வரையான ஒருவார காலப்பகுதியை வடமாகாணச் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு வாரமாகப் பிரகடனப்படுத்தியதையடுத்து வடமாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.(ர-14)

## கைதான மீனவருக்கு சுகவீனம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் ஒருவர் உடல்நலக் குறைவு காரணமாக யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டு, சிகிச்சைகளின் பின் நேற்றுக்காலை வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளார்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 32 மீனவர்களில், கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானவர் என்று கூறப்படும் மீனவர் ஒருவரே சிகிச்சைகளின் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் அனைவரும் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய இன்று விடுதலை செய்யப்படவுள்ளதோடு, இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற-104)



யாழ்ப்பாணம் வந்துள்ள வியட்நாம் குழுவினர் நேற்று யாழ். பொது நூலகத்தைப் பார்வையிட்டனர். அப்போது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களையும் அவர்கள் கையளித்தனர். (ற-21)

## இராமேஸ்வரம் மீனவர் போராட்டம்

இராமேஸ்வரம், ஜூன் 11

இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படும்வரை தமது வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என்று அறிவித்துள்ளனர் இராமேஸ்வரம் மீனவர்கள்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது கடற்கலங்களையும் விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தற்போது தமிழக மீனவர்கள் இலங்கையால் விடுவிக்கப்படவுள்ள நிலையில், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ர)

## அகதிகள் மீது ஆஸ்திரேலியா அழுத்தம்

மெல்பேர்ன், ஜூன் 11

புகலிடக் கோரிக்கையாளர்கள் மீது ஆஸ்திரேலிய அரசு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் புகலிடக் கோரிக்கையாளர் வள நிலையத்தைச் சேர்ந்த பமிலா குர்.

நாட்டை விட்டு வெளியேறுமாறு ஆஸ்திரேலிய அரசு புகலிடக் கோரிக்கையாளர்களைப் பலவந்தப்படுத்துகின்றது. பல்வேறு வழிகளிலும் இவ்வாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது:-

"அச்சுறுத்துவதன் மூலம் புகலிடக் கோரிக்கையாளர்களை சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்க முயற்சிக்கப்படுகின்றது. புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டு மேன் முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பங்களை ஒடுக்கும் வகையில் அரசு செயற்பட்டு வருகின்றது"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 11

முள்ளிவளை, வள்ளிபுனம் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர், அவரின் வீட்டில் இருந்து உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். 31 வயதுடைய வரதராஜ் ருசாந்தி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.



கோப்புப்படம்

நேற்றுமுன்தினம் 7.30 மணியளவில் குறித்த பெண் அசைவற்றுப் படுத்திருப்பதை அவதானித்த அவரது கணவர், அயலவர்களின் உதவியுடன் அவரை புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளார். அதன்பின்னர் துஷாந்தி அம்புலன்ஸ் மூலம் மாஞ்சோலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவரைச் சோதனை செய்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தனர்.

கிளிநொச்சி சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையில் குறித்த பெண் நஞ்சருந்தி உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் தற்போது உடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, குறித்த பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்படும் என்றும், நேற்றுமுன்தினம் மாலை வற்றாப்பளை ஆலயத்துக்குச் சென்றிருந்த சமயமும் அவ்வாறு சச்சரவு ஏற்பட்டது என்றும் கூறும் உறவினர்கள், குறித்த பெண்ணின் சாவில் சந்தேகம் உள்ளது என்றும் கூறுகின்றனர். (ற-102)

## மாந்தை மனிதப் புதைகுழி குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வசதி செய்க

### மன்னார் நீதிமன்றம் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 11

மன்னார் மாந்தை மனித புதைகுழி தொடர்பில் அறிக்கையைப் பெறுவதற்கு சட்ட வைத்திய அதிகாரிக்கு உரிய வசதிகளைச் செய்துகொடுக்குமாறு உத்தரவிட்ட மன்னார் நீதிமன்று வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. மனிதப் புதைகுழி தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்க உரிய வசதிகள் இல்லை என்று சட்ட வைத்திய அதிகாரியால் மன்றுக்குக் கூறப்பட்டது. அதனையடுத்தே அவருக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மன்று உத்தரவிட்டது.

குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தனர். தொல்பொருள் திணைக்களத்தில் இருந்தும் சட்ட வைத்திய அதிகாரியிடமிருந்தும் அறிக்கை கிடைக்கவில்லை. எலும்புக்கூடுகள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வைத்துப் பரிசோதனை செய்யப்படுகின்றன. அது தொடர்பான அறிக்கையும் கிடைக்கப்பெறவில்லை. இவை கிடைத்த பின்னரே மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்று அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அதனைத் துரிதப்படுத்துமாறு நீதிமன்று குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு அறிவுறுத்தியது.

தொல்பொருள் திணைக்களத்திடமிருந்து கிடைத்த தகவலின்படி எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட இடத்தில் மயானம் ஒன்று இருந்ததற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்றும், அங்கு எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் ஒழுங்கு முறைப்படி மத சம்பிரதாயத்துக்கு உட்படுத்தப்பட்டுப் புதைக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது என்றும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

காணாமற்போனோர் சார்பாக நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளான பிரிமூஸ் சிராய்வா, ஜெபநேசன் லோகு ஆகியோர் பொலிஸாரின் மயானம் தொடர்பான கருத்தை மறுத்துரைத்தனர். அங்கு எந்தவொரு மயானமும் இருந்ததற்கான எந்தவொரு ஆதாரமும் இல்லை என்று மன்னார் பிரதேச சபையினரால் வழங்கப்பட்ட அறிக்கையையும் அவர்கள் மன்றில் சமர்ப்பித்தனர்.

அதன் பிரகாரம் மாந்தை, திருக்கேதீஸ்வரம் இரண்டிலும் இந்துக்களும், கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வருவதாகவும் அவர்களுக்கென்று தனித்தனியான மயானங்கள் உள்ளன என்றும் அங்குள்ள முதியோரின் கூற்றுப்படி அந்த இடத்தில் எதுவிதமான மயானமும் இருக்கவில்லை என்று சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

அதன் பிரதியை தமக்கு வழங்குமாறு குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கேட்டதற்கிணங்க அதன் பிரதி ஒன்று அவர்களுக்கு வழங்கப்பட்டது. (த-4-101)

11 JUN 2014

# மோடிக்கு அளித்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்துவது அவசியம்

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. அறிவுரை

கொழும்பு. ஜூன் 11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்புக்கான 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்த விரும்புவதாக, அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாக்குறுதிகளை காலதாமதமின்றி அரசு நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமானது என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் உருவாக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் தொடர்பில் எவருக்கும்நம்பிக்கை இல்லை. தீர்வு எதனையும் எட்டாது வெறுமனே பேச்சு நடத்து வதில் எவ்வித பயனும் கிடையாது.

அரசமைப்புக்கான 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வித தடைகளும் இல்லை.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரத்தைப் பகிர அரசுக்கு விருப்பம் இல்லாவிட்டால், வேறு மாற்று அதிகாரப் பகிர்வு யோசனைத் திட்டமொன்றை அரசு முன்வைக்க வேண்டியது அவசியமானது.




எனினும் இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்தாது தம்மை விமர்சனம் செய்யும் தரப்பினரை துரோகிகளாக அடையாளப்படுத்துவதில் ஜனாதிபதியும் சில அமைச்சர்களும் கூடுதல் சிரத்தை எடுத்துக் கொள்கின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமர்வுகளில் பங்கேற்று நேரத்தை விரயப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது என்பது குறித்து அரசு எழுத்து மூலமான யோசனைத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும். அவ்வாறு எழுத்து மூல மான யோசனைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எம்மால் பதிலளிக்க முடியும்- என்றார். (ச)

## பாப்பரசரின் வருகை உறுதி



பிரான்ஸிஸ்

கொழும்பு.ஜூன் 11

பாப்பரசர் அடுத்த வருடம் ஜனவரி மாதம் இலங்கைக்கு இரு நாள் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் எதிர்வரும் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். இந்தச் சுற்றுப் பயணத்தின்போது அவர் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கும் செல்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் கத்தோலிக்க திருச்சபையின் அழைப்பின் பேரில் அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று கொழும்பு பேராயர் கூறினார். (ச)

# இணக்கப்பாட்டை ஏற்படுத்த குழுவை நியமித்தது அரசு

## விமல்,சம்பிக்க முரண்பாட்டை அடுத்து

கொழும்பு.ஜூன் 11

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி மற்றும் சம்பிக்க தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள அரசு விசேட குழுவொன்றை நியமித்துள்ளது.

அண்மைக் காலமாக ஆளும் கூட்டணியில் அங்கம் வகித்து வரும் தேசிய சுதந்திர முன்னணியும், ஜாதிக ஹெல உறுமய கட்சியும் அரசைக் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றன.



விமல் வீரவன்ஸ



சம்பிக்க

அரசுக்கும் குறித்த இரண்டு கட்சிகளுக்கும் இடையில் நிலவி வரும் கருத்து முரண்பாட்டைகளையும் நோக்கில் ஐந்து பேர் அடங்கிய விசேட குழுவொன்று அரசினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை விசார ணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பது குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்தி வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உத்தேசித்துள்ளது. (ச)

# சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை மும்மொழிகளிலும் நடத்துங்கள்

## அமைச்சர் வாசுதேவ வேண்டுகோள்

கொழும்பு.ஜூன் 11

சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சையை ஆங்கில மொழியில் மட்டும் நடத்தக் கூடாது, மும்மொழிகளிலும் நடத்தப்படல் வேண்டும் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



வாசுதேவ நாணயக்கார

ஆங்கில மொழி மூலம் மட்டும் சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை நடத்துவது தேசிய மொழிக் கொள்கைகளுக்கு முரணானது என்று அவர் கூறினார்.

சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பரீட்சை நடத்தப்பட வேண்டும். இது தொடர்பில் அமைச்சரவையை தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.


எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டங்களின்போது சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை குறித்து விரிவாகப் பேசப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## பண மோசடியில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு.ஜூன் 11

அமைச்சர்களூடாக வேலை மற்றும் ஒப்பந்தங்கள் பெற்றுத் தருவதாக கூறி பணம் மோசடி செய்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு விசேட விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அவர் நுகேகொடையில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர். (ச)



டெங்கு ஒழிப்புக்கான ஜனாதிபதி செயற்குழு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த, ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் கூடியபோது, அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, பஸில் ராஜபக்ஷ, மஹிந்த அமரவீர உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முக்கிய நாடுகளுடனான உறவை பேணத் தவறியது மஹிந்த அரசு

## ரோசி சேனாநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு.ஜூன் 11

அரசு முக்கிய நாடுகளுடன் உரிய விதத்தில் உறவைப் பேணத் தவறியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

முக்கிய நாடுகளுடன் அரசு பேணி வரும் உறவு திருப்தியடையக் கூடிய வகையில் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்தார்.

போரின் பின்னர் நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று அவர் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக முக்கிய நாடுகளுடனான உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசின் வெளியுறவுக்கொள்கை தொடர்பில் திருப்தி அடைய முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.



ரோசி சேனா நாயக்க

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரை அமுலாக்கம், நல்லிணக்கம் போன்ற விடயங்களில் அரசின் நடவடிக்கைகள் திருப்தியளிக்கும் வகையில் அமையவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# உணவகங்களின் தரத்தை மேம்படுத்த அவகாசம்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உத்தரவு

கொழும்பு.ஜூன் 11

தூர சேவை பஸ்கள் உணவுக்காக நிறுத்தப்படும் உணவகங்களின் தரத்தை மூன்று மாத காலத்தினுள் மேம்படுத்துமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர் ரேணுக பெரேரா உணவக உரிமையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு தமது உணவகங்களின் தரத்தை மேம்படுத்தத் தவறும் உணவகங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தூர சேவை பஸ்கள் உணவுக்காக நிறுத்தப்படும் உணவகங்களின் தரத்தை உயர்த்துவது தொடர்பாக சுகாதார அமைச்சும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் இணைந்து ஏற்பாடு செய்த உணவக உரிமையாளர்களுக்கு அரசின் குறிக்கோளைத் தெளிவுபடுத்தும் செயலமர்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார அமைச்சு மேற்கொண்ட கணிப்பீட்டின்படி தூர சேவை பஸ்கள் உணவுக்காக நிறுத்தப்படும் உணவகங்கள் சி தரத்தில் தான் உள்ளன.

இது மிகவும் குறைந்த தரமாகும். பயணிகளுக்கு சுத்தமான தரம் மிக்க உணவு வகைகளை வழங்க வேண்டும். மலசல கூட வசதிகளும் உரிய தரத்தில் பேணப்பட வேண்டும். சகல தூர சேவை சிற்றுண்டிச்சாலைகளையும் பதிவு செய்யவும் இவற்றின் தரத்தை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

சிற்றுண்டிச்சாலைகளின் தரத்தை 3 மாதகாலத்துக்குள் மேம்படுத்த உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (ச)

# தமிழரை ஓரங்கட்டும் கிழக்கு மாகாண சபை

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

மட்டக்களப்பு.ஜூன் 11

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை முற்றாகப் புறக்கணித்து இனவாத ஆட்சி நடத்திவரும் மாகாண சபையின் நடவடிக்கைக்கு முடிவு கட்ட வேண்டும். அதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

சம்மாந்துறை தமிழ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்மக்கள் அஹிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடி இன்று இராஜதந்திரப் போரை நடத்தி வருகிறார்கள். இந்தப் போருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதுவடிவம் கொடுத்துள்ளது.

இந்த இராஜதந்திரப் போரால் இன்று மாகாணசபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாவது பொலிஸ் அதிகாரம் வழங்க அரசு முன்வந்திருக்கிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் கூட்டமைப்பின் இராஜதந்திர காய்நகர்த்தலே.



இராஜேஸ்வரன்

தமிழ் மக்களின் காணி உள்ளிட்ட உரிமைப் பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்து அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே தகுதி எமது கட்சிக்கே உண்டு. அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்களாலோ ஒட்டுண்ணிகளாலோ தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

கிழக்கு மாகாணசபை தமிழ் மக்களையும் தமிழர் பிரதேசங்களையும் திட்டமிட்டு புறக்கணித்து இனரீதியாகச் செயற்படுகிறது. இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள 10 கிராமிய அபிவிருத்தித் திட்டங்களில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்க் கிராமம் கூட தெரிவு செய்யப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் இன விகிதாசாரம் பேணப்படவில்லை.

கிழக்கு மாகாணசபை என்பது மூவினங்களுக்கும் சொந்தமானது. ஆளுங்கட்சி எதிர்க்கட்சி இரண்டையும் உள்ளடக்கியதே. இதனை முதலமைச்சரும் ஏனையோரும் புரிந்து கொள்ள வேண்டும்-என்றார். (ஏ)



ஆயுதங்கள் மீட்கப்பட்டபோது..

## மீட்கப்பட்டன ஆயுதங்கள்

அம்பாறை.ஜூன் 11

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள வீரச்சோலை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் சில நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டன என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து வீரச்சோலை பிரதேசத்தில் பொலித்தீன் பை ஒன்றுக்குள் இட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த ரீ 56 ரக துப்பாக்கி ஒன்று உட்பட சில ஆயுதங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## விபத்தில் ஒருவர் சாவு; ஐவர் காயம்

மட்டக்களப்பு.ஜூன் 11

மட்டக்களப்பு.ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டானில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை ஏறாவூரில் இருந்து மட்டக்களப்பு நோக்கிவந்த ஓட்டோவும் மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதுடன் பின்னர் வீதி யில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் மீதும் மோதியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஆறு பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதால் அவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாறை வைத்தியசாலைக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதுஎன்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)



உணவு தவிர்ப்புப் போராட்டத்தில்

## நெற் செய்கையை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு போராட்டம்

அக்கரைப்பற்று, வட்டமடு மற்றும் கொக்குளுவ.வேப்பையடி விவசாய காணிகளில் நெற் செய்கையை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோரி அந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நேற்று செவ்வாய்க் கிழமை அக்கரைப்பற்று சந்தை பிரதான வீதியில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தோணிக்கல் தென் விவசாய அமைப்பு , முறாணவட்டி விவசாய அமைப்பு, வட்டமடுகண்ட விவசாய அமைப்பு உட்பட பல விவசாய அமைப்புக்களின் உறுப்பினர்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை, அக்கரைப்பற்று வன இலாகா அதிகாரிகளால் குறித்த பிரதேசங்களில் விவசாயம் செய்வதற்கு தமக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தும், இராணுவ அதிகாரிகளே தம்மைத் தடுத்து வருகின்றனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஏழை விவசாயிகளின் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 - 01 - 1934

இறப்பு 23 - 02 - 2013



திதி: 11.06.2014

அமரர் ருக்மணி கணபதிப்பிள்ளை

ஆண்டு ஒன்று ஆனதோ
ஆறாத் துயரில் தவிக்கின்றோம் அம்மா
உதிரத்தைப் பாலாக்கி
ஊர்போற்ற ஊட்டி வளர்த்தாய்
அம்மா கண்பட்ட காலன்
கவர்ந்தானோ உங்களை
நீங்கள் இன்றி உங்கள் நிழல் இன்றி
எம் வாழ்க்கை சீர்கெட்டு சிதைந்ததம்மா
மீண்டும் உங்கள் வயிற்றில் பிறந்து
உங்கள் மடியில் தவழ்ந்திடத் தவிக்கின்றோம்
தாயே மறுபிறப்பொன்றிருப்பின்
உங்கள் வயிற்றில் பிறந்திட
இறைவனை வேண்டுகின்றோம் அம்மா!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கடந்த 23.02.2013 சிவபதமடைந்த எமது அன்புத் தாய் அமரர் ருக்மணி கணபதிப்பிள்ளை அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (11.06.2014) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

ஆவரங்கால் மேற்கு, சந்தை வீதி. (48831) (5.6.3) 021 373 5126

நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு

16 ஆம் மாதம்





பிறந்தது 11.06.1931 இறந்தது 24.05.2013

பிறந்தது 09.05.1966 இறந்தது 31.12.2012

இளையதம்பி சின்னத்துரை

சின்னத்துரை தயாகரன் (தயா)

ஊர்போற்ற வாழ்ந்த பெருமக்களே!
உமை இழந்து காலங்கள் பலவாயினும்
ஈரவிழிகளாய் செய்வதறியாமல் உம் நினைவில் நாம்
அன்பினால் பெற்ற செல்வப்பேறே பெரும் செல்வப்பேறு
என்பதை எமக்கு வாழ்ந்து காட்டினீர்கள்
இலமென வந்தோர்க்கு உளதென வாழ்ந்தீர்களே
கருணை கூர்ந்த உம் திருமுகத்தைக் காண
தவியாய் தவித்து நிற்கின்றோம்
என்றென்றும் உங்கள் சிந்தனையோடு நாம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.5, கட்டி அம்மன் வீதி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# ஆளுமை மிக்க துணைவேந்தர்

வி.நித்தியானந்தம்,
பொருளியியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட நாள் முதல் தத்தம் நிலைகளில்தனித்துவமான ஆளுமை பெற்ற துணைவேந்தர் வரிசையொன்று அந்தப் பல்கலைக்கழகத்தை அலங்கரித்து வந்துள்ளது. அவர்களுள் பேராசிரியர் துரைராஜா பெற்றிருந்த ஆளுமை மற்றவர்களிலிருந்து சற்று வேறுபட்டுச் சமூக மட்டத்திலிருந்து ஊற்றெடுப்பதொன்றாய் இருந்ததெனக் கூறின் மிகையாகாது. 1988 ஆம் ஆண்டிலிருந்து நோய்வாய்ப்பட்டு அவர் சடுதியாக மறையும் வரை துணைவேந்தர் பதவியை வகித்து வந்தார். தமிழ் மக்கள் இக்கட்டான காலகட்டம் ஒன்றினூடாகச் சென்று கொண்டிருந்த போது அவரது இழப்பு ஈழத்தில் மக்களைப் பொறுத்தவரை ஒரு பேரழிவாகும். பேராசிரியர் துரைராஜா யாழ்.பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகத் தம்மை யாழ்ப்பாணத்துடன் இணைத்துக் கொண்ட நாள் முதல் அவரது சேவையும் பங்களிப்பும் சமூக மட்டத்திலான அவரது மிளிர்வுக்கு மகுடம் வைத்தாற் போல அமைந்திருந்தது. அமரரின் காலத்தை உள்ளடக்கியதாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இன்றுவரை தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் துரைராஜாவின் காலம் ஒரு பொற்காலம் என்று அடிக்கடி நினைவு கூருகின்றனர்.

அவரது சேவையின் முக்கியத்துவத்தை அப்போது நிலவியிருந்த நெருக்கடி காலப் பின்னணியைக் கருத்தில் கொள்ளும்போதுதான் நன்குணர்ந்து கொள்ள முடியும். இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்புக் காலத்தில் ஆரம்பித்த துரைராஜாவின் சேவை முதலாவது ஈழப்போர் என்று இன்று வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் காலமட்டத்தினூடே நகர்ந்து சென்றிருந்தது. சமகாலத்தில் தெற்கில் ஜே.வி.பி.தீவிரவாதிகளின் காலமட்டத்தினூடே நகர்ந்து சென்றிருந்தது. ஜே.வி.பி. கிளர்ச்சிகள் காரணமாகப் பேராதனைப் பல்கலைக் கழகம் உட்பட தெற்கிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களும் மூடப்பட வேண்டிய ஒரு சூழல் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தையும் ஈழப் போரை சாக்குக்காட்டி இழுத்து மூடி விடுவதற்கான ஒரு வாய்ப்பான சூழலை உருவாக்கிவிட்டிருந்தது. எனினும் பேராசிரியர் துரைராஜா துணைவேந்தர் என்ற வகையில் வெளிப்படுத்திய ஈடுபாடும் உறுதியும் கடமை உணர்வும் எத்துணை நெருக்கடிகளின் மத்தியிலும் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதை உத்தரவாதப் படுத்தியிருந்தது. இது விடயத்தில் கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் பரிந்துரைகளை மீறி அவர் செயற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டென்பது நிர்வாக ரீதியாக அவருடன் நெருங்கி ஒத்துழைத்தோருக்கு நன்கு தெரியும்.




ஒரு நெருக்கடி நிலையில் நிறுவனமொன்று எவ்வாறு முகாமை செய்ய வேண்டுமென்பதற்கான ஒரு முன்னுதாரணமாகவே அவர் திகழ்ந்தார். போக்குவரத்து சேவைகள் குறைந்திருந்த அவ்வேளையில் தமது கரவெட்டி வாசஸ்தலத்திலிருந்து சைக்கிள் மூலமாக 35 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரத்தைக் கடந்து கடமைக்கு வருவதுடன் அதற்குக் குறைவான தூரத்திலுள்ளோர் போக்குவரத்தின்மையைக் கூறி சமுகமளிக்காதிருப்பதை முறியடித்தார். பல்கலைக்கழக அத்தியாவசிய தேவைகளுக்கு ஆதாரமாக இருந்த (பெண்) வைத்திய அதிகாரி கடமைக்கு வருவதில் சில நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்கியபோது அந்த அதிகாரி வசித்த அதே பகுதியிலிருந்து வரும் ஊழியர் ஒருவர் அவரைத் தமது சைக்கிளில் ஏற்றி வருவதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்தமை மறக்கமுடியாத சம்பவமாகும். இந்த வகையில் பேராசிரியர் துரைராஜா தமக்குப் பின் வந்த துணைவேந்தர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக இன்று விளங்குகின்றார் என்பதில் சந்தேகமே இல்லை. நெருக்கடிகால முகாமை என்பதில் அவரது இயக்கமும் பங்களிப்பும் மேலும் படிக்கப்பட வேண்டிய ஆய்வுக்களம் என்றால் மிகையாகாது.

பேராசிரியர் அழகையா துரைராஜா இன்றிருந்திருந்தால் அவருக்கு 80 வயது ஆகியிருக்கும். அவர் தமது 59 ஆவது வயதில் 11.06.1994 இல் மறைந்தார். அவர் மறைந்து இருபது வருடங்கள் கடந்தும் பேராசிரியர் அழகையா துரைராஜா எனும் அவர் நாமம் இன்னும் வாழ்கிறது. அவர் புகழ் இன்றும் மங்காச்சுடராக ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

நெருக்கடியான கால கட்டத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியற் பீடத்தின் பீடாதிபதிப் பதவியைத் துறந்து வந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை அவர் பொறுப்பேற்றார். அன்று முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியை இலட்சியமாகக் கொண்டு பல கட்டுமானங்களை உருவாக்கினார். கிளிநொச்சியில் விவசாய பீடமொன்றினை உருவாக்கியமையும் முறிகண்டியில் பொறியியற்பீடமொன்றை அமைக்க பல்கலைக்கழக ஆணைக் குழுவிலிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டமையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தை ஆரம்பித்து வைத்தமையும் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான துணைவேந்தர் நிதியமொன்றை ஆரம்பித்தமையும் பேராசிரியர் துரைராஜாவின் தூரநோக்கை எடுத்துக் காட்டுகின்றன.

வாழ்க பேராசிரியர்
அ.துரைராஜா நாமம்.

## சமய சந்நிதிகளில்....

வடமராட்சி, ஜூன் 11
புலோலி வடமேற்கு வில்லிபாதி அருள்மிகு முருகன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் அலங்கார உற்சவம் நிறைவுபெறும். திருவிழா நாள்களில் தினமும் விசேட சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (க-173)

◆◆◆

வடமராட்சி, ஜூன் 11
மட்டுவில் அருள்மிகு ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
நாளை வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-173)

◆◆◆

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று புதன்கிழமைகாலை 9மணிக்கு நடைபெறும்.
நாளை வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை பூங்காவனமும், சனிக்கிழமை வைரவர் சாந்தியும் இடம் பெறும். (க-17)

◆◆◆

வடமராட்சி, ஜூன் 11
பருத்தித்துறை நாலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிநடைபெற்றுவருகின்றது. நவநாள் ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்றதைத்தொடர்ந்து நாளை 12 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை வழிபாடு நடைபெறும். மறுநாள் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு திருவிழாத் திருப்பலி பருத்தித்துறை பங்குத்தந்தை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனியுடன் வருடாந்த உற்சவம் பூர்த்தியடையும். (க-173)

◆◆◆

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று மாலை நடைபெறவுள்ளது. நண்பகல் சங்காபிஷேகமும் இரவு 7 மணிக்கு வருடாந்த பொங்கல் உற்சவமும் இடம் பெறவுள்ளது. (ஒ-131)

## வாயால் கெட்ட நுணல்



வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் தவறவிடப்பட்ட சந்தர்ப்பத்தை யாழ்ப்பாண மாநகர முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார்.

அந்தச் சந்தர்ப்பமே அவரைச் சிக்கலிலும் மாட்டிவிட்டது. மோடியின் பதவியேற்பு விழாவில் திடீரென அடித்த அதிர்ஷ்டத்தால், ஜனாதிபதியுடன் சென்ற யாழ்.மாநகர மேயர் அங்கு என்.டி. ரீ.வி. என்ற தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டி பெரும் சிக்கலில் மாட்டிவிட்டுள்ளது.

அந்த நேர்காணலில் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மாநகர மேயர்......



(சீ.14730) (6)

## சுற்றுப்புறச் சூழல் தினம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் வேள்ட் விஷன் நிறுவனமும் இணைந்து நடத்தும் சர்வதேச சுற்றுப்புறச் சூழல் தினம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சத்தியகுமார் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவனத்தைச் சேர்ந்த ஐ.மைக்கலும், கௌரவ விருந்தினராக சங்கானை செலான் வங்கி முகாமையாளர் அன்ரனி றூபஸ் ராஜ் உம் கலந்து கொள்வார். (க)

## விரிவுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு "நாள்குறிப்பின் மீதான எதிரொலிப்புகள் முறைமையின் கலை" என்ற தொனிப்பொருளில், மானிடவியலாளர், பேராசிரியர் கமலா விஸ்வேஸ்வரன் விரிவுரை நிகழ்த்துகிறார். பேராசிரியர் கமலா விஸ்வேஸ்வரன் அமெரிக்காவில் உள்ள ரெக்சஸ் பல்கலைக்கழக பேராசிரியர் என்பதுடன் பல்துறைசார் ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர். இந்தியாவில் தமிழ்நாட்டிலும், குஜராத்திலும் தனது ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார் என்பதுடன், பல குறிப்பிடத்தகுந்த நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டடத்தொகுதியில் இந்த விரிவுரை இடம்பெறவுள்ளது. (க)

## நீங்காத நினைவில் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

### இராசேந்திரம் சிவநாதன் (சிவா)



திதி: 11.06.2014 (சதுர்த்தசி)

தோற்றம் - 17.07.1985 மறைவு - 19.05.2008

உணர்வுகள் அத்தனையும் உனக்கே சமர்ப்பணம்.

விதியோடு விளையாடி புயலோடு போராடி
புதைத்தாலும் பூமியிலே எழுந்து நிற்பவன் நீ
அன்றொரு நாள்......
உருகும் மெழுகாக உடைந்து போன கண்ணாடியாக
உருவாகும் களம் கண்டும் உறுதியாக நின்றவன் நீ
உருகினாய் மண்ணில் உறுதியற்றவனாக மாறிவிட்டாய்
காலதேவன் ஆட்சியால் களவாடிச் செல்லப்பட்டது
உனது உயிர் மட்டுமல்ல எமது உணர்வுகளும் தான்

உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.
உழத்தம்பி, வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜுன் 11
யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகத்தின் 'அப்த சுரபி' நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக் கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

கடந்த 2010/2012, 2011/2013 கல்வி ஆண்டுகளில் கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாட நெறியைப் பூர்த்தி செய்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.
இதற்கமைவாக மேற்படி ஆண்டுகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாட நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய ஆசிரிய மாணவர்களுக்கு விண்ணப்பப் படிவம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.
விலாச மாற்றம் காரணமாக கடிதம் கிடைக்காதவர்கள் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அடிக்கல் விழா

யாழ்ப்பாணம், ஜுன் 11
மான[illegible]ய் இந்துக் கல்லூரியின் தொழில்நுட்ப பீடத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.
பாடசாலை அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் மத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாகாண அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (க)

## பட்டிமன்றம்

வடமராட்சி, ஜுன் 11
யாழ்.பட்டிமன்றக் குழு வழங்கும் "இன்றைய குடும்பங்களில் பெரிதும் குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள் உறவினர்களா, அயலவர்களா" என்ற தலைப்பிலான சிறப்புப் பட்டிமன்றம் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் சாவகச்சேரி, நுணாவில் மருதடி விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-173)

♦ ♦ ♦

வடமராட்சி, ஜுன் 11
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் பூங்காவனத் திருவிழாவான எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு 'இன்றைய அறிவியல் வளர்ச்சி ஆக்கத்தைச் செய்கிறதா அழிவைச் செய்கிறதா" என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும்.
பொன்.சுகந்தன் தலைமையிலான யாழ்.பட்டிமன்ற குழுவினர் இந்தப் பட்டிமன்றத்தில் வாதிடுவார்கள். (க-173)

## வ.புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## பதவி வெற்றிடம்

**இதன் கீழ் காணப்படும் பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. விண்ணப்ப முடிவு திகதி : **30.06.2014**
2. விண்ணப்ப படிவங்கள் விண்ணப்பத்தாரியால் சுயமாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-
**தலைவர், வ.புளியங்குளம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

A-9 வீதி, பரசங்குளம, புளியங்குளம்

விண்ணப்பம் அனுப்பும்போது தபால் உறையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.அத்தோடு விண்ணப்ப படிவத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

பதவி
***பொதுமுகாமையாளர்*** 101-11 10450 - 12550
100×10 110×10

அ. கூட்டுறவு ஊழியர் 12ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் ஆகக் குறைந்தது 06ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமை.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்

ஒரு வருட கால அனுபவம்/க.பொ. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது ஒரு வருட சேவையாற்றிய அனுபவம்.

குறிப்பு :
1. பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்
2. வயதெல்லை 18-45
3. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல
4. சங்கங்களில் பணிபுரிவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் அச்சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
5. பதவி நிரந்தரமானது
6. இலாபகரமாக இயங்கும் மாதங்களுக்கு சம்பளத்திற்கு மேலான படிகள் வாழ்க்கைச் செலவுபடி சம்பளத்தின் 15 வீத அதிகரிப்பு என்பனவும் வழங்கப்படும்.
7. வவுனியா மாவட்டத்தை சொந்த முகவரியாக கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வ.புளியங்குளம்
ப.தெ.வ.அபி.கூ/சங்கம் (43343) (7.6.) தலைவர்

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11 advt@uthayan.com



ஸ்ரீ சீரடி சாயி பாபாவின் நூதன உற்ஷவமூர்த்தி
மஹா கும்பாபிஷேகப் பெருவிழா - நாளை 12.06.2014
அன்பான அடியார்களே!
* பால்காப்பு - காலை 8.30 மணி முதல் 10 மணி வரை சாத்தலாம்
* மகாகும்பாபிஷேகம் - முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும்.
மாலை 4 மணிக்கு வசந்த மண்டபபூசை, ஊஞ்சல் இடம்பெற்று பாபாவின் வீதி உலா இடம்பெறும்.
"ஸ்ரீ சீரடி சாயி மந்திர்"
314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P: 077 722 2568, 021 321 1605
(48724)(7.6.3)

யாழ்.நகரில் முதன் முறையாக......
புத்தகத் திருவிழா
மாபெரும் தமிழ்ப் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
வீரசிங்கம் மண்டபத்தில்
காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை
இன்றும், நாளையும் மட்டும்
11ஆம் 12ஆம் திகதிகளில்
பல்லாயிரக் கணக்கான தலைப்புக்களில் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் அதிரடி விலைக்கழிவுகளுடன்
இன்றும், நாளையும் மட்டும்
குறிப்பிட்ட சில புத்தகங்களுக்கு எதிர்பாராத விசேடவிலைக்கழிவு. அரிய சந்தர்ப்பம்
வாசிப்பை நேசிக்க வைப்போம்
அனைவரையும் அழைக்கின்றோம்.
(48887)(12.6)



15 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு
Amãna Takaful




நீங்களும் இன்றே நாடளாவிய ரீதியில் உள்ள எமது அனைத்து கிளைகளிலும் அமானா டக்காபுல் காப்புறுதியை பெற்று இந்த பரிசு மழையை உங்களுக்கே உரித்தாக்குங்கள்
2014 ஜூன் 9 முதல் 14 வரை மட்டுமே
அழைப்பு +94 117 501000
www.takaful.lk
(48841) (7.6.)

## வலி. கிழக்குப் பிரதேச சபை தவிசாளராக துரைசிங்கம்



கணபதிப்பிள்ளை துரைசிங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குப் புதிய தவிசாளராக நியமிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை துரைசிங்கம் நேற்று உத்தியோகபூர்வமாகத் தமது பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார்.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தவிசாளராகக் கடமை யாற்றி வந்த அன்னலிங்கம் உதயகுமார் பதவியிழந்துள்ளார்.

தனது பதவி பறிப்புக்கு எதிராக அவர் கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை 21 உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 16 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பி சார்பில் 5 உறுப்பினர்களும் அதில் அங்கம் வகிக்கின்றனர். 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தோற்கடித்திருந்தனர்.

இதனிடையே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன் னணி சார்பாக தெரிவான 3 உறுப்பினர்களை உடன டியாக நீக்கி பிரதேச சபையின் செயற்பாடுகளை சீராகக் கொண்டு நடத்த உதவுமாறு கட்சியின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மாவை. சேனா திராஜாவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். (வ-101)

# குறைவடைகிறது நன்னீர் அளவு; பயிர்ச்செய்கை பாதிக்கப்படலாம்

### மழை இல்லாததே காரணம் என்கிறார் யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 11

குடாநாட்டில் மழை இல்லாத காரணத்தால் நன்னீரின் அளவு குறைவடைந்துள்ளது. இதனால் பயிர்ச் செய் கையின் அளவு குறை வடைய வாய்ப்பு ஏற்பட் டுள்ளது. எனினும் விவசாயத்தை எவரும் கைவிட வில்லை என்று யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தால் யாழ். மாவட்டத்தின் விவசாய நிலைப்பாடு தொடர்பாக அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் யாழ் மாவட்டத்தின் நீர்வளம் முழுமையாக நிலத்தடி நீர்வளத்தையே நம்பியுள்ளது. ஒவ்வொரு அலகுக்கும் பணம் செலவு பண்ணியே நீர் பெற வேண்டியுள்ளது. விவசாயத்துக்கான நீரும் அவ்வாறே பெறப்படுகிறது. உயர்ந்த உற்பத்தியை எதிர்பார்த்தே விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. அதிக வருமானம் பெறக்கூடிய பயிர்கள் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஒரு வருடத்தில் மீண்டும் மீண்டும் பயிரிடக் கூடிய பயிர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஒரு போகத்தில் குறைந்தது 3 பயிர்கள்உற்பத்திசெய்யப்படுகின்றன.

ஏனைய மாவட்டங்களில் ஒரு பயிரை மட்டுமே உற்பத்தி செய்வர். இதற்குக்காரணம் அங்கு கூடிய நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதாலும் வருமானம்அதிகமாகக் கிடைக்கப் பெறுவதாலும் பிரதானமாக ஒரு பயிருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மழைஇல்லாத காரணத்தால் கிணற்றில் நீர் ஊற்று குறைவாக இருக்கும்.

> ஒரு வருடத்தில் மீண்டும் மீண்டும் பயிரிடக் கூடிய பயிர்களுக்கும் முன்னுரிமை வழங்கப் படுகிறது. ஒரு சீசனில் குறைந்தது 3 பயிர்கள் உற்பத்தி செய் யப்படுகின்றன.

தீவுப்பகுதிகளில் வடமராட்சி கடலை அண்டிய பிரதேசங்களில் நீர் சவர்த்தன்மையுடையதாக மாறும். இதனால் நிலத்தின் நன்னீரின் அளவு குறைவடைந்துள்ளது. பயிர்ச் செய்கையின் அளவு குறையும். சிறுப்பிட்டி, தெல்லிப்பழை, நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் அளவுக்கு மீறி நிலத்தடி நீர் ஆவியாவதால் பயிர்களில் இருந்து ஆவியாதல், ஆவியீர்ப்பு அதிகரித்தல் போன்ற காரணங்களால் கூடியளவு நீர்ப்பாசனம் செய்ய வேண்டி ஏற்படலாம். ஆவியாதலைக் குறைக்க மூடுபடை இடுதல், இலையால் ஊடுருவக்கூடிய நுண் போசனைப் பொருள்களை வழங்கு வதன் மூலம் வறட்சியால் பயிர்களின் ஆரோக்கியம் கெட்டு விடாமல் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம். விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படாது.

எனினும் நீரைப் பெறுவதற்கு செலவு அதிகரிக்கும்; இதற்கு சொட்டு நீர்ப்பாசனம், தூவல் நீரப்பாசனம் என்பவற்றை மேற்கொள்வதன் ஊடாக நீர்ப்பாசனத்தை சிக்கனமாக பயிர்களுக்கு வழங்கலாம். இதனால் உற்பத்திச் செலவைக் குறைக்கலாம்"- என்றார். (வ-14)



போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்த நிலையிலும், இங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு மேலதிகமாக போரின் நினைவுகளை ஞாபகப்படுத்தும் விதத்தில் யாழ். பண்ணையில் அமைந்துள்ள கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களக் கட்டட மதிலில் இராணுவத்தினரால் முன்னர் எழுதப்பட்ட வாசகங்கள் இன்றும் காட்சியளிக்கின்றது. "உங்கள் பிரதேசம் யுத்த பிரதேசம் ஆகும். உங்களைப் பாதுகாத்துக் கொள்வதே எமது கடமையாகும். பாதுகாப்பு படையினர்" என்ற வாசகம் அதில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். (வ-21)

## வீடுகள் எரிப்புச் சம்பவம்; சந்தேகநபருக்கு ம்றியல்

### தொடர்ந்து - 20 ஆம் திகதி வரை

வடமராட்சி, ஜூன் 11

சாவு வீடொன்றில் இரு தரப்பினர் மத்தியில் இடம்பெற்ற முரண்பாட்டைத் தொடர்ந்து துன்னாலைப் பகுதியில் சில வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி துன்னாலை ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் இடம்பெற்ற சாவு வீடு ஒன்றில் இருதரப்பினர் மத்தியில் மோதல் ஏற்பட்டது. இம்மோதலின் எதிரொலியாக அன்றிரவு சில வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஜே. கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட வேளை அவரை கடந்த 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் இருந்து குறித்த சந்தேக நபரை மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்திய போது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-173)

## காணி பிரிவிடுதல் விண்ணப்பங்களை யாழ்ப்பாணத்தில் கையளிக்க அறிவுறுத்து

### தூர இடங்களில் வசிப்போர் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் காணிகள் பிரிவிடுதல் தொடர்பான விண்ணப்பங்களைக் கையளிக்கும் வரியிறுப்பாளர்களை யாழ்ப்பாணத்தில் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்துக்குச் சென்று அதற்குரிய கட்டணத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது. இதற்காக தாம் சிரமப்பட்டு யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளதாக வரியிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி சபைகளில் உள்ள காணிகளை நில அளவையாளர் மூலம் அளந்து வரைபடம் தயாரித்து உள்ளூராட்சி சபைகளில் உரிய படிவத்தைப் பெற்று பிரிக்கப்பட்ட காணி வரை படத்துடன் விண்ணப்பித்து பிரிவிடல் செய்யப்பட்டு பின்னர் வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் புதிய இலக்கங்கள் காணிகளுக்கு வழங்கப்பட்டு வந்தன.

> வரியிறுப்பாளர்களை யாழ். நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்தில் கட்டணத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்தல்.

தற்போது அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் உரிய பிரிவிடல் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து காணி உறுதிகள், நில அளவைப்படம் ஆகியவற்றுடன் யாழ்ப் பாணத்தில் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்துக்குக் கொண்டு சென்று அங்கு உரிய படிவங்களைக் கையளித்து அவற்றுக்குரிய கட்டணங்களைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

முன்னைய காலங்களில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை உள்ளூராட்சி சபைகளில் சமர்ப்பித்து அதற்குரிய கட்டணங்கள் உள்ளூராட்சிச் சபைகள் மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும் நடைமுறை வழக்கில் இருந்து வந்தது. பின்னர் வரியிறுப்பாளர்களை யாழ். நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்தில் கட்டணத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

இதனால் தாங்கள் யாழ்ப்பாணம் சென்று சிரமங்களின் மத்தியில் அலுவலகத்தைத் தேடி பணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் முன்னரைப் போல அந் தந்த உள்ளூராட்சி அலுவலகங்களில் பணம் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் கோரியுள்ளனர். (வ-9)

## இயன் மருத்துவப் பிரிவில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தென்மராட்சி, ஜூன் 11

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை இயன் மருத்துவப் பிரிவுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 248 பேர் இயன் மருத்துவப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாக மருத்துவமனை விளம்பரப் பலகையில் உள்ள புள்ளி விவரக்கூற்று தெரிவிக்கிறது.

யாழ். போதனா மருத்துவமனை இயன் ஆதார மருத்துவப் பிரிவுக்குச் செல்லும் தென்மராட்சிப் பிரதேச மக்களின் நலன்கருதி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இயன்மருத்துவப் பிரிவொன்றை ஆரம் பிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து, 2012 ஆம் ஆண்டு மந்திகை ஆதார மருத்து வமனையில் பணிபுரியும் பயிற்றப்பட்ட ஆண் மருத்துவ உதவியாளர் ஒருவரின் உதவியுடன் வாரத்தில் மூன்று தினங்கள் குறைந்த வளங்களுடன் இயன் மருத்துவப்பிரிவு பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது.

உடற்பயிற்சிகள் மற்றும் சிகிச்சைகளில் கலந்து கொள்ள தென்மராட்சி, பளை, வடமராட்சி, பூநகரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளிலிருந்து பெருமளவு நோயாளர்கள் வருகை தந்தனர்.

அதனை அடுத்து மன்னார் பொது மருத்துவமனையில் பணியாற்றிய இயன் மருத்துவர் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரால் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனைக்கு இடமாற்றம் செய் யப்பட்டார்.

இயன் மருத்துவர் கடமையேற்ற பின்னர் சிகிச்சை பெற வருபவர்களின் எண்ணிக்கையும் நாளாந்தம் அதிகரித்துள்ளது.

இதனை அடுத்து சிகிச்சைப் பிரிவுக்குத் தேவை யான சில விசேட கருவிகள் சுகா தாரத் திணைக்களத்தால் வழங்கப் பட்டதையடுத்து தற்போது அப் பிரிவில் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

## திருட்டு மின்சாரம்; நால்வர் சிக்கினர்

வடமராட்சி, ஜூன் 11

கரணவாய்ப் பகுதியில் சட்ட பூர்வமற்ற விதத்தில் வீடுகளுக்கு மின்சாரம் பெற்ற நால்வர் திடீர் சோதனையின்போது அகப்பட்டுக் கொண்டனர்.

இரகசியத் தகவலொன்றின் பேரில் நெல்லியடிப் பொலிஸாரும் இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்களும் இணைந்து நடத்திய சோதனையின் போதே அவர்கள் அகப்பட்டுக் கொண்டனர்.

குறித்த நால்வரையும் நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்திய போது, தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல அவர்களை அனுமதித்த நீதிபதி மேல் விசாரணையை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ-173)



அனுமதிப்பத்திரம் கையளிக்கப்பட்டபோது...

# மாந்தைப் புதைகுழி வழக்கு ஓக.6 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

## விரிவான அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

மன்னார், ஜூன் 11

மன்னார், மாந்தைப் புதைகுழி வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி செல்வி ஆனந்தி கனகரெட்ணம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அதை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

காணாமற்போனோர் சார்பாக நான்கு சட்டத்தரணிகள் முன்நிலையாகியிருந்தனர். இதன்போது கடந்த தடவை நீதிமன்றத்தால் காணாமற்போனோர் சார்பாக முன்நிலையாகியிருந்த மனித உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் செய்த விண்ணப் பத்தின் அடிப்படையில் இரண்டு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் படி குற்றப்புலனாய்வு அதிகாரிகளிடம் நீதிமன்றம் கேட்டிருந்தது.

> மனித உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் செய்த விண்ணப்பத்தின் அடிப்படையில் இரண்டு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் படி குற்றப் புலனாய்வு அதிகாரிகளிடம் நீதிமன்றம் கேட்டிருந்தது.

அதாவது புதைகுழி அகழப்பட்ட இடத்தை அகலப்படுத்துவது மற்றும் புதைகுழிக்கு அருகிலுள்ள கிணற்றைத் தோண்டுவது சம்பந்தமாகவும் விவரம் கேட்கப்பட்டது.

நீதிமன்றத்தில் முன்னிலையான குற்றபுலனாய்வுப் பிரிவினர் இதற்கான அறிக்கை எதனையும் மன்றில் சமர்ப்பிக்கவில்லை. இதற்கு மாறாக தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்தபடி இந்தப் பகுதியில் 1950ஆம், 1951 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு மயானம் இருந்திருக்கலாம் என்ற ஓர் அறிக்கையை மட்டும் சமர்ப்பித்திருந்தனர்.

அதனை ஊர்ஜிதம் செய்வது போலவே பொலிஸாரும் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தனர். எனினும் மன்னார் பிரதேச சபை தலைவரிடமிருந்து ஒரு கடிதத்தை மனித உரி மைகளுக்கான சட்டத்தரணிகள் பெற்றிருந்தனர். அதில் குறிப்பிட்ட பகுதியில் எந்த வொரு காலத்திலும் மயானமோ, சுடு காடோ, புதைகுழியோ இருந்திருக்கவில்லையென்று கூறப்பட்டிருந்தது.

அந்தக் கடிதமும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அதையடுத்து இதற்கான ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் குற்றப்புலனாய்வு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. வழக்கும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச)

# விடுதி அமைப்பதற்கு காணி கையளிப்பு

மன்னார், ஜூன் 11

சட்டமா அதிபர் திணைக்களத்தின் விடுதியொன்றை மன்னாரில் அமைப்பதற்கு மன்னார், சின்னக்கடை பகுதியில் ஒதுக்கப்பட்ட 30 பேர்ச் அரச காணியை மன்னார் பிரதேச செயலர் எம்.சிறிஸ்கந்தகுமார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கையளித்தார்.

இந்தக் காணிக்கான அனுமதிப் பத்திரத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டா ஜெனரல் சுமதி தர்மரட்னவிடம் மன்னார் பிரதேச செயலர் எம்.சிறிஸ்கந்தகுமார் மன்னார் பிரதேச செயலகத்தில் வைத்து கையளித்தார். (ச-56)

# நிலக்கடலைப் பயிரில் புதிய இன தெரிவுகள்

கிளிநொச்சி, ஜூன் 11

நிலக்கடலை பயிரில் புதிய இனத் தெரிவுகள் விரைவில் விவசாயிகளுக்கு பரீட்சார்த்தமாக வழங்கப்படவுள்ளது என்று விவசாய ஆராய்ச்சி மேலதிகப் பணிப்பாளர் சி.ஜே. அரசகேசரி தெரிவித்தார்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிலக்கடலை பயிரிடப்பட்டு வருகின்றது. திஸ்ஸ, இந்தி, ரிக்கிரி போன்ற குறுகிய கால வயதுடையதும் வளவ என்னும் நீண்டகால வயதுடையதுமான இனங்கள் விவசாயத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டிருப்பினும் இந்தப் பிரதேசங்களில் விவசாயிகளால் நல்ல சுவை தரும் உள்ளூர் இன நிலக்கடலை குறிப்பிடத்தக்களவில் பயிரிடப்படுகின்றது. இந்த இனத்தின் காய்கள் பலதரப்பட்ட கலப்புகளை காண்பிப்பதால் இவ்வினத்தை தூய்மைப்படுத்தலுக்கான ஆராய்ச்சி இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தினரால் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பயனாக மிகவும் பயனுள்ளதும் அதே சுவை உள்ளதும் இரண்டு விதைகளை மட்டும் உடையதுமான இனங்கள் தெரிவாகி உள்ளன.

அவை ஏனைய இனங்களை விட அதிக விளைச்சலை தர வல்லன. இந்தப் புதிய இனத் தெரிவுகள் கூடிய விரைவில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது என்று விவசாய ஆராய்ச்சி மேலதிகப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச)



# போக்குவரத்து சேவையை சீர் செய்யுங்கள்

வவுனியா, ஜூன் 11

வவுனியா, ஓமந்தை அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டப் பகுதியில் வசிக்கும் அரச ஊழியர்கள் நலன்கருதி அவர்களுக்கான போக்குவரத்து சேவையை சீர்செய்து கொடுக்குமாறு வவுனியா இலங்கை போக்குவரத்து சபை சாலை முகாமையாளருக்கு வவுனியா மாவட்ட அரச அதிபர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வீடமைப்புத் திட்டப் பகுதியில் பஸ் தரிப்பிடங்களை நிறுவுவதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஏ-9 வீதியிலிருந்து 3 மைல்கள் தூரத்தில் இந்த குடியிருப்புகள் அமைந்துள்ளதால் அங்கிருந்து அரச ஊழியர்கள் நடந்து சென்றே ஏ-9 வீதிக்கு வந்தே தமது பஸ் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே ஓமந்தை அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டப் பகுதிக்கு போக்குவரத்து சேவை சீர்செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-402)

# காட்டு யானைகள் அட்டகாசத்தால் விவசாயிகள் சிரமம்

வவுனியா, கண்ணாட்டி, கணேசபுரம் பகுதிகளில் யானைகளின் அட்ட காசத்தால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கடந்த ஒரு மாத காலமாக வவுனியா, ஆலங்குளம் காட்டுப் பகுதியில் இருந்து கண்ணாட்டி, கணேசபுரம் பகுதிகளுக்கு வரும் யானைகள் தென்னை, வாழை, சோளம், முருங்கை, பனை போன்ற மரங்களை நாசம் செய்து வருகின்றன.




இந்தப் பகுதியில் பெரும்பாலான வீடுகளுக்கு மின்சார வசதி வழங்கப்படாததால் யானைகள் வருவதை முன் கூட்டியே அறியமுடிவதில்லை என்று மக்கள் கூறினர்.

யானைகளை விரட்ட யானை வெடிகள் கொளுத்தினாலும் யானைகள் அவற்றைப்பொருட்படுத்தாது ஊர் மனைக்குள் புகுவதால் தினமும் தாம் அச்சத்துடன் வாழ வேண்டியுள்ளது என்று மக்கள் கூறினர்.

எனவே யானைகளின் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாக்க உரிய அதிகாரிகள் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்தக்கூடிய வசதியில்லை



வெயிலில் சைக்கிள்கள்

## மாணவர்கள் அசௌகரியம்

கிளிநொச்சி, ஜூன் 11

கிளிநொச்சி கல்வி வலயத்தில் பல பாடசாலைகளில் மாணவர்களின் சைக்கிள்களைக் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கக் கூடிய வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

> சைக்கிள்களின் காற்று வெளியேறிவிடுவதால் மாணவர்கள் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வரு கின்றனர்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் சைக்கிள்கள் காலை தொடக்கம் பாடசாலை முடியும் வரை வெய்யிலிலே நிறுத்தி வைக்கப்படும் நிலை காணப்படுகின்றது.

அதனால் சைக்கிள்களின் காற்று வெளியேறிவிடுவதால் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே பிள்ளைகளின் சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்தி வைக்கக்கூடிய வசதிகளை மாணவர்களுக்குப் பாடசாலை நிர்வாகம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்னர். (ச-18)

# கௌதாரிமுனையில் மணல் அகழ்வு

## தடுக்க இதுவரை நடவடிக்கையில்லை

பூநகரி, ஜூன் 11

கிளிநொச்சி, பூநகரி, கௌதாரி முனையிலிருந்து மணல் வெளி இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதால் அந்தப் பகுதியின் மண்வளம் பாதிப்படைவதாக மக்கள் தெரிவித்தனர்.

இயற்கை எழில் கொண்ட கௌதாரிமுனைக் கிராமத்தில் மணல் தினமும் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்தனர்.

கௌதாரிமுனையில் ஏற்றப்படும் மணல் பரமன்கிராய் பகுதியில் குவிக்கப்பட்டு உள்ளன என்று மக்கள் கூறினர்.

பூநகரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில், கௌதாரிமுனையில் பெருமளவில் மணல் அகழ்வு இடம் பெறுவது குறித்து சுட்டிக்காட்டப்பட்டும், இதுவரை அதனைத் தடுக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறினர். (ச-18)

# தொலைந்த தொலைபேசியை கண்டுபிடிக்க கூச்சலிடுங்கள்




கனடாவைச் சேர்ந்த மாட் வெய்செய் என்ற நபர், காணாமற்போகும் கைத்தொலைபேசியைக் கண்டுபிடிப்பதற்கு புதிய தொழில்நுட்பம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

அதாவது, குரலை அடையாளப்படுத்திக்கொண்டு, பதில் அளிக்கும் தொழில்நுட்பம். இதற்கு மார்கோபோலோ அப் என்று பெயரிட்டுள்ளனர்.

இதன்படி, கையடக்கத் தொலைபேசி தொலைந்து விட்டால் மார்கோ என்று கூச்சலிட வேண்டும். உடனே அந்த கைப்பேசி போலோ என்று பதில் கூச்சல் எழுப்பும். அதன்மூலம் கையடக்கத் தொலைபேசி எங்கிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இதற்காக மார்கோ என்ற வார்த்தையை அந்தக் கையடக்கத் தொலைபேசிக்கு பழக்கி வைக்க வேண்டும்.

> கையடக்கத் தொலைபேசி தொலைந்து விட்டால் மார்கோ என்று கூச்சலிட வேண்டும். உடனே அந்தக் கைப்பேசி போலோ என்று பதில் கூச்சல் எழுப்பும்.



அலுவலகங்களில் வீசப்படும் கழிவுக் கடதாசிகளைப் பயன்படுத்தி நபர் ஒருவர் அழகிய வாத்து உருவமொன்றை வடிவமைத்துள்ளார். கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் கடமை புரிகின்ற எஸ். கிளமன் என்பவரே இவ்வாறு வாத்து உருவ மொன்றை வடிவமைத்துள்ளார்.

இந்த வாத்தை வடிவமைக்க ஒரு கிலோகிராம் கழிவு கடதாசி பயன்படுத்தப்பட்டதாகவும் இதற்கு மூன்று நாள்கள் தேவைப்பட்டதாகவும் கிளமன் தெரிவித்துள்ளார்.

# கழிவுக் கடதாசியில் வாத்து

# வாழ்க்கையில் வெற்றி பெற...

பிடித்த விடயத்தையே செய்ய வேண்டும் என்று நினைக்காதீர்கள். நீங்கள் செய்யும் விடயத்தை பிடித்ததாக மாற்றிக் கொள்ளுங்கள். விரைவில் நீங்களே ஒரு மாற்றத்தை உணர்வீர்கள்.

வாழ்க்கையில் எதற்கும் பயப்படாதீர்கள். வேலை பாதுகாப்பு என்பதைக் கருதி ஒரே இடத்தில் இருந்து விடாதீர்கள். புதிய முயற்சிகளால் மட்டுமே முன்னேற்றத்தை உணர முடியும்.

கீழே விழுவது வேகமாக எழுவதற்காகவே. அதனால் விழுவதைப்பற்றி கவலைப்படாதீர்கள். அது வெற்றியின் ஏணிப்படி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

வெற்றிக்கு நேரம் அவசியம் என்பதால், நேரத்தை உருப்படியாக செலவிடத் தெரிந்து கொள்ளுங்கள்.

வெற்றிக்கான முதல் சாவி உழைப்பு தான். அதனால் தினமும் குறைந்தது 10 முதல் 12 மணி நேரம் உழையுங்கள்.

முடியாது, கஷ்டம், நடக்காது போன்ற சொற்களை உங்கள் அகராதியில் இருந்து தூக்கி எறியுங்கள்.



வாய்ப்புக்களைத் தவற விடாதீர்கள். சரியான நேரத்தில் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் என்னதான் உழைத்தாலும் சில நேரங்களில் அதிர்ஷ்டம் தேவை. இறைவனை நம்புங்கள். உங்கள் வெற்றியை இறைவனுக்குக் காணிக்கை ஆக்குங்கள்.

வாழ்க்கையில் சந்தோஷம் என்பது பணத்தினால் மட்டுமே வருவதில்லை. அதனால், உலகில் அனைத்து விடயங்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

நாளை பார்க்கலாம் என்று எதனையும் தள்ளிப் போடாதீர்கள். அது நடக்காமலே கூடப் போய்விடக்கூடும். துணிச்சலான முடிவுகளை எடுக்கக் கூடிய தைரியம் உங்களுக்கு வேண்டும்.

வெற்றி உடனடியாக கிடைத்து விடாது. ஒவ்வொரு படியாக, மெதுவாக ஆனால் உறுதியாக முன்னேறுங்கள்.

# குறட்டையை தவிர்க்க வழிமுறைகள்



இன்றைய காலத்தில் மக்கள் குறட்டையினால் பெரும் அவஸ்தைக்குள்ளாகின்றனர். இத்தகைய குறட்டையை நிறுத்த நினைத்தாலும், ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது நம்மை அறியாமலேயே குறட்டை வந்துவிடு கிறது.

இதனால் எமது அருகில் படுத்து உறங்குவோர் பல நாள்கள் தூக்கத்தை தொலைத்துவிடுகின்றனர். பொதுவாக குறட்டை என்பது ஒரு கோளாறு. இது குரல் வளையில் காற்று அளவுக்கு அதிகமாக செல்லும் போது, அதிகப்படியான ஒலியை உண்டாக்குகிறது.

அதிலும் காற்றானது வாய் மற்றும் மூக்கின் வழியாக இடையூறுடன் செல்லும்போது அது பலத்த ஒலியை உண்டாக்குகிறது.

குறிப்பாக சளி அல்லது மூக்கடைப்பின் போது இந்த மாதிரியான சப்தம் வெளிவரும்.

> படுக்கும் போது ஒரு தலையணை மாத்திரம் பயன்படுத்திச் சாதாரணமாக படுப்பதற்கு பதிலாக, சற்று அதிக அளவில் தலை யணையைப் பயன்
> படுத்தி தூங்கினால்,
> குறட்டையைத் தவிர்க்கலாம்.

குறட்டை, வயது, அதி கப்படியான உடல் எடை மற்றும் புகைப்பிடித்தல் ஆகியவற்றின் காரணமாகவும் ஏற்படும்.

இப்படிக் குறட்டை விட்டால், அது உடல் நலத்தைப் பாதிக்கும். ஆகவே அந்தக் குறட்டையை நிறுத்துவதற்கு ஒருசில எளிய வழிகளை நோக்குவோம்.

படுக்கும் போது ஒரு தலையணை மாத்திரம் பயன்படுத்திச் சாதாரணமாகப் படுப்பதற்குப் பதிலாக, சற்று அதிக அளவில் தலையணையைப் பயன்படுத்தி தூங்கினால், குறட்டையைத் தவிர்க்க்லாம்.

பக்கவாட்டில் தூங்கவும் இப்படி இரவு முழுவதும் படுப்பது சாத்தியம் இல்லை. எனினும் இப்படி பக்கவாட்டில் படுத்தால், அது குறட்டையைத் தடுக்கும்.

ஆவி பிடித்தாலும், குறட்டை வருவதைத் தவிர்க்கலாம். ஏனெனில் இது மூக்கில் உள்ள அடைப்புக்களை நீக்கி, காற்று எளிதாகச் செல்ல வழி வகுக்கும்.

மது அருந்துதலை நிறுத்தினால் குறட்டை விடுவதைத் தவிர்க்க முடியும். மது அருந்துவது, தூக்க மாத்திரைகளை உட்கொள்வது போன்றவற்றை நிறுத்தினால், அது தசைகளைத் தளர்வடையச் செய்து சுவாசக் குழாயில் காற்று எளிதாகச் செல்ல உதவும்.

சளிக்கு இருந்தால் அதற்கு உடனே சரியாகச் சிகிச்சை அளித்து வந்தால், குறட்டை விடுவதைத் தவிர்க்கலாம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உடனடியாகப் பதில் காணப்படவேண்டிய கேள்விகள்

வடக்கில் உள்ள மக்களில் 60 விழுக்காட்டினர் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகிய வருமானம் தரும் வழிகளிலேயே தங்கியுள்ளனர். அப்படி இருந்தபோதும் கால்நடை வளர்ப்பு சவாலை எதிர்நோக்கியுள்ளது என்று தெரிவித்திருக்கிறார் வடமாகாண கால்நடை உற்பத்தித் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.வசீகரன்.

வடக்கில் ஏற்கனவே மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் வருகையாலும், மீன்பிடிக்கான நவீன உற்பத்திச் சாதனங்களைக் கையாள்வதில் உள்ள பற்றாக்குறை காரணமாகவும், போர் முடிந்த பின்னரும்கூட மீன்பிடியில் முன்னேற்றம் அதிகளவில் ஏற்படவில்லை.

1980களில் நாட்டின் மொத்த மீன்பிடி உற்பத்தியில் மூன்றிலொரு பாகத்தை வழங்கிய, மயிலிட்டி போன்ற வளம் நிறைந்த கடற்பகுதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருப்பதும் அதற்கான மற்றொரு காரணம். தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பும் சட்டவிரோத நடவடிக்கைகளும் கூடுதல் காரணங்கள்.

இவை உள்ளிட்ட காரணங்கள் பலவற்றால் போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும்கூட, போருக்கு முன்னர் இருந்த உற்பத்தியளவைக் கூட மீன்பிடியில் வடக்கால் எட்ட முடியவில்லை.

விவசாயத்தின் நிலைமையோ அதிலும் மோசம். போர் முடிந்த பின்னர் நெற்செய்கைப் பரப்பும், தோட்டச் செய்கைப் பரப்பும் அதிகரித்துள்ளபோதும் விவசாயிகளின் வருமானம் பெருமளவில் அதிகரித்தது என்று சொல்லிவிட முடியாது. வறட்சி விளைச்சலைப் பாதிக்கிறது என்றால், சந்தைக்கு வரும் இராணுவத்தினரின் காய்கறி உற்பத்தியும், தெற்கிலிருந்து வரும் மலிவான காய்கறிகளும் விவசாயிகளின் வயிற்றில் அடிக்கிறது. உற்பத்திகளுக்கான உரிய விலையை - பயனை - வடக்கு விவசாயிகளால் பெற முடியவில்லை.

எஞ்சியிருந்த கால்நடை உற்பத்தியும் சவால்களின் மத்தியில்தான் நகரவேண்டியிருக்கிறது என்ற உண்மையை பணிப்பாளர் எஸ்.வசீகரன் இப்போது வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

இதன் அர்த்தம், வடக்கில் உள்ள பெரும்பான்மையான மக்கள் - அரச ஊழியம் செய்வோர் தவிர ஏனையோர்- வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு ஒவ்வொரு நாளும் போராட வேண்டியிருக்கிறது என்பதுதான். தெற்கு அரசு போட்ட 'காப்பெற்' வீதிகளோ, இந்திய அரசின் நிதி உதவியில் அமைக்கப்பெற்ற ரயில் பாதைகளோ வடக்கில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவில்லை என்பது இங்கு கண்கூடு.

போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டபோதும், வடக்கு மக்கள் தமது வாழ்வாதாரத்துக்காகப் போராடும் நிலைமையே தொடர்கிறது என்பது அச்சமூட்டும் உணர்வைத் தருகிறது. வடக்கில் பெரும் உற்பத்திச் சாலைகளை அமைப்பதிலோ, பெரு நிறுவனங்களை ஏற்படுத்துவதிலோ கொழும்பு அரசு அக்கறை கொள்ளாமல் இருக்கும் நிலையிலும், மாகாண அரசு செயற்படு திறன் அற்று இருக்கும் நிலையிலும் வேலையின்மை இளைஞர்களை எதைநோக்கித் தள்ளிச் செல்லப்போகிறது என்கிற கவலை எழுகிறது.

வருடா வருடம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறுகிறார்கள். அவர்களுக்கான வேலை வாய்ப்பு என்ன? 60 வீதமானவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி இருக்கும் நிலையில் அதற்கு மாற்று ஏற்பாடு என்ன? இந்த மக்களின் துயர் துடைக்கப் போகிறவர்கள் யார்? நிலைமை இப்படியே நீடிப்பதால் ஏற்படக்கூடிய சமூக, அரசியல் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கான வழிகள் உண்டா? வேலையின்மை, வாழ்வாதாரப் பிரச்சினை என்பன மீண்டும் வன்முறையைத் தூண்டுவதற்கான முதன்மைக் காரணியாக அமைவதைத் தடுக்கத் திட்டம் ஏதாவது இருக்கிறதா? இவை இன்று எம்முன் எழுந்து நிற்கும் பூதாகரமான கேள்விகள்.

# அரசின் பங்காளிக் கட்சிகளின் முரண்பாடு முற்றுகிறது

## வீரவன்ஸவும் தனிவழியில்

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
கோகுலன்

கடந்த வாரம் வியாழக்கிழமை அமைச்சரவை கூட்டத்துக்குப் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களை சற்று தாமதித்துச் செல்லும்படி ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். அவர்களுக்கு சில கடும் எச்சரிக்கைகளை வழங்குவதற்காக இந்த ஏற்பாடு. அரசில் இருக்கும் மற்ற பங்காளிக் கட்சிகள் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளுக்கு செல்லுமுன்னர் அவை பற்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் விசாரித்து விவரம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி எச்சரிக்கை செய்தார். அவைகளில் சர்ச்சைக்குரிய விடயங்கள் இருப்பது தெரிந்தால் மேலிடத்துடன் கலந்து செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரசின் பங்காளிகட்சிகள் சிலவற்றின் நிகழ்ச்சிகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் கலந்து கொள்ளக்கூடாது என்று தாம் ஏன் கூறினார் என்பதை ஜனாதிபதி விளக்கவில்லை. அவ்வாறு கலந்து கொண்டிருந்தவர்களுக்கு மட்டுமே அது புரிந்திருக்க முடியும். இந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர்தான் ஜே.எச்.யுவின் தலைவரான வண அதுரலியேரத்ன தேரர் ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பித்திருந்தார். அதற்குப் (பிவித்துரு ஹெட்டாக்) ஒரு பரிசுத்தமான நாளைய தினம் என்று அதற்கு பெயர் சூட்டியிருக்கிறார். அதன் தேசிய ஒருங்கிணைப்பாளராக அவரே இருக்கின்றார். கடந்த செவ்வாய்க் கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த இயக்கத்தின் முக்கிய கோரிக்கையானது ஜனாதிபதியானவர் அவருக்கென அரசமைப்பில் குறிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பானவைகளைத் தவிர ஏனைய பதவிகள் அனைத்தையும் கைவிட வேண்டும் என்பதாகும்.

இப்பொழுது வீரவன்ஸவுக்கு இரண்டு தெரிவுகள் இருப்பதாகத் தெரிகிறது. ஒன்று ராஜபக்ஷவுடன் நேரில் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவது அல்லது அவரும் அவர்கட்சி யும் வேறு வழியைப் பார்த்துக் கொண்டு போவது

இந்த அமைப்பு ஜாதிக ஹெல உறுமயவை விட வேறுபாடானது என்று கூறும் ரத்ன தேரர் பல முக்கிய நிறுவனங்கள் ஜனாதிபதியின் அதிகாரத்துக்குள் வரலாகாது என்று கூறுகிறார். அது முறையற்றது என்று கூறும் தேரர் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். இந்த இயக்கத்தின் தேசிய கொள்கையானது (றட்ட களயுது கம) நாடு மேற்கொள்ள வேண்டிய மார்க்கம் என்பதாக அறிவிக்கப்பட்டது. இந்தத் தேசிய சபையானது வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் கூடி நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை அறிவிக்கும் என்றார். எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். அதேபோலவே அரசு சார்ந்த அமைச்சர்கள் ராஜித சேனாரட்ண மற்றும் றெஜினால்ட்குறே ஆகியவர்களும் கலந்து கொண்டிருந்தனர். இன்னொரு முக்கியமான பிரமுகர் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஆவார். அமைச்சர் விமல் வீரவன்ச அழைக்கப்பட்டிருந்தாலும் அவர் வருகை தந்திருக்கவில்லை. பிவித்துரு ஹெட் டக்கிற்கும் ஜே.எச். யுவுக்கும் இடையில் தொடர்புகள் கிடையாது என்று கூறப்பட்ட போதிலும் ஜாதிக



ஹெல உறுமயவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணிக்கும் இடையில் உறவு கள் நன்றாய் இல்லையென்பது இரகசியமன்று. மூன்று ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு மிக முக்கிய நிறுவனங்களுக்குரிய அந்தஸ்து வழங்கும் சட்ட முன்வரைவுக்கு எதிராக அவ்வியக்கம் வாக்களித்தமையால் இந்த உறவு முறிவு ஏற்பட்டது. வெளிநாட்டு கசினோக்கள் இலங்கை மண்ணில் செயற் படுவதற்கான வசதி களை வழங்கும் செயலாகும் இது என்று ஜாதிக ஹெல உறுமய கருதுகின்றது. சட்டத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன் ரத்ன தேரருடன் தொடர்புகொள்ள ஜனாதிபதி பல தடவை கள் முயன்றிருந்த போதிலும், அது முடியாமல் போயிற்று. அதன்பிறகு ஜாதிக ஹெல உறுமயவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்களுக்குமிடையில் உறவுகள் பலவீனமடையத் தொடங்கின. தங்கள் சார்பில் முன்வைக்கப்படும் முக்கிய யோசனைகளாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சை மட்டுமே அவர் பொறுப் பேற்க வேண்டும். அமைச்சர்களை நியமிக்க வேண்டும். பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் அவருக்கு இருக்கலாகாது. மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நினைத்த காலத்தில் என்றில்லாமல் ஒரே சமயத்தில் சகல சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தேரர் கூறினார்.

### 5 ஆவது தடவையும் வீரவன்ஸ வரவில்லை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் இது மட்டுமல்ல தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ அமைச்சரவைக் கூட்டங்களில் இருந்து 5 ஆவது தடவையாகவும் கடந்த வியாழக்கிழமையுடன் கலந்து கொள்ளாமல் விடுத்துள்ளார்.

முன்னணி உயர் தலைவர்களையும் திறைசேரிச் செயலாளர் பி.வி.ஜயசுந்தரவையும் அமைச்சர் வீரவன்ஸ கண்டித்திருப்பது தொடர்பாக அமைச்சரவையில் பலவிதமான பிரதிபலிப்புகள் காணப்பட்டன. ராஜபக்ஷ குடும்பத்தின் மீது கண் மூடித்தனமாக அவர் கொண்டிருந்த விசுவாசம் காரணமாக ஆரம்பத்தில் பலரும் தலைமைப்பீடத்தின் மீது அவர் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்களை பெரிய பிணக்காகக் கருத விரும்பவில்லை. ஆனால் இப்பொழுது ஜாதிக ஹெல உறுமய போலவே இ[...]ருக்கிடையிலும் உறவுகள் பெ[...]தாக விரிசலடைந்து வரு[...]தற்கான அறிகுறிகள் அதிகரி[...]துள்ளன. கடுவெல அபிவிருத்தி[...] சபைக் கூட்டத்தில் தலைமை[...]வகிக்கும் சந்தர்ப்பம் அவருக்[...] வழங்கப்படாமல் கட்சியின[...] செயலாளர் சுசில் பிரேமச் சந்திர[...]வுக்கு வழங்கப்பட்டிருப்ப[...] கண்டு அவர் அதிர்ச்சியடை[...] நேர்ந்தது. சுமார் ரூ.450 மி[...]லியன் பெறுமதியான அபி[...]ருத்தி வேலைகளை இச்சபை[...] கையாள்கின்றது.

இப்பொழுது வீரவன்சவுக்[...] இரண்டு தெரிவுகள் இருப்பதாக[...] தெரிகிறது. ஒன்று ராஜப[...]ஷவுடன் நேரில் கலந்து பேசி ஒ[...] முடிவுக்கு வருவது அல்லது அவரு[...] அவரது கட்சியும் வேறு தனி வழியை[...] பார்த்துக் கொண்டு போவது. கடந்த வார[...] வாராந்த தமது அமைச் சர்கள் கூட்ட[...] நடந்து கொண்டிருந்தபோது அமைச்சின[...] அலுவலர் ஒருவரின் திருமணத்தில் அவ[...] கலந்து கொண்டி ருந்தார். அடுத்த[...] கூட்டத்துக்கும் அவர் வராது விட்டால[...] இன்னும் மோசமான எதிர்நடவடிக்[...]கைகளை அவர் எதிர்பார்க்கலாம். அவரது[...] கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பின[...] ஒருவர் கூறுகையில் ஒருவேளை அடுத்[...] அமைச்சர்கள் கூட்டத்தில் அவர்கள் கலந்து[...] கொள்ளக் கூடும் என்றார்.

### விசாரணைக் குழுவில் மதிப்புமிக்க நிபுணர்கள்

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொட[...]பான விசாரணைகளை நடத்தும் நிபுண[...] குழுவை அமைக்கும் நட வடிக் கைகளை[...] கடந்த வாரம் ஐ.நா. மனித உரிமைக[...] சபை துரிதப்படுத்தியிருந்தது.

கடந்த மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட மனித[...] உரிமைகள் சபை தீர்மானத்துக்கு அமை[...]வாக மனித உரிமைகள் சபை மே[...] கொள்ளவிருக்கும் செயற்பாடுகள் தொட[...]பாக ஆணையாளர் நவிப்பிள்ளை[...] அங்குள்ள இலங்கைப் பிரதிநிதி ரவினா[...] ஆரிய சிங்கவுக்கு கடந்த வெள்ளியன்[...] விளக்கப்படுத்தியிருந்தார். ஆரிய சிங்[...] அதுபற்றி ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு[...] வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிசிற்கு[...] அறிவித்திருந்தார்.

சர்வதேச விசாரணைகளை நடத்து[...] குழுவில் இரண்டு மதிப்பார்ந்த நிபுணர் க[...] மற்றும் மூன்று சிறப்பு அறிக் கையாள[...]களும் ஏனையவர்களுடன் உள்ளடக்க[...]பட்டிருப்பார்கள் என்று ஆரிய சிங்கவுக்[...] அறிவிக்கப்பட்டிருந்தது. இவை மற்று[...] விவரங்களை நவிப்பிள்ளை இந்த மாத[...] 10 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை[...] நடைபெறவிருக்கும் மனித உரிமைக[...] சபையில் அறிவிப்பார். ஆரம்பநாளி[...] இரண்டாவது விடயமாக பட்டியலி[...] குறிக்கப்பட்டிருப்பது மனித உரிமைகளி[...] இன்றைய நிலை தொடர்பான ஆணை[...]யாளரின் அறிக்கை யாகும். விசாரணை[...] குழு பல்வேறு தலைநகரங்களில் தனது[...] விசாரணை அமர்வுகளை நடத்து[...] இலங்கைக்கு வருவதற்கு அனுமதி[...] கோரும். ஆனால் அவர்களை[...] இலங்கைக்குள் வர அனு மதிக்க[...] போவதில்லையென்று ஏற்கனவே அரசு[...] தீர்க்கமாக அறிவித்துள்ளது. என் றாலு[...] ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்[...]கப்பட்டதன் பின்னரே அரசின் பிரதிபலிப்[...] வெளிவரும்.

புலனாய்வுக்கான குழு நியமிப்பதில[...] எதிர்பார்க்கப்பட்டதற்கு மேல் காலதாமத[...] ஏற்பட்டதற்கு - இதில் அடங்கியுள்ள[...] பணிகளின் அளவு, உள்ளடங்கியுள்ள[...] விடயங்களின் விஸ்தீரணம் மற்றும்[...] புலனாய்வுக் குழுவினரை ஒன்றாக[...] இணைப்பது போன்றவையே காரணம்[...] என்று தெரியவந்துள்ளது.

# போரடித்த சுற்றுச்சூழல்

**உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை சுற்றுச் சூழல் விழிப்புணர்வு வாரம் வடமாகாணத்தில் அனுஷ்டிப்பு**

மக்கன்

உலகளவில் சுற்றுச்சூழல் சார் பிரச்சினை பெரும் ஆபத்தை எட்டியுள்ளது. திண்மக் கழிவுகளும் திரவக் கழிவுகளும், ஆவிக்கழிவுகளும் எஞ்சியிருக்கின்ற இயற்கை நிலைகளையும் சூறையாடுகின்ற காலத்தில் நாம் வாழ்கின்றோம். எதிர்கால சந்ததியின் நலன் குறித்தோ, எமது வாழ்வின் சுபீட்சம் குறித்தோ எவ் வித கரிசனையும் இன்றி சூழலை மாசுபடுத்தும் நடவடிக்கைகளில் தாராளமாகவே அனைவரும் கை நனைக்கின்றோம்.

இலங்கையின் வடக்கு- கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரையில் ஏனைய மாவட்டங்களை விட அவை அதிகளவான சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருக்கின்றது. ஏனைய மாவட்டங்களில் மனித நடவடிக் கைகளாலும் அதனால் விளைந்த இயற்கை சமநிலை குழப்பங்களினாலுமே சுற்றுச்சூழல் பாதிப்பு நிகழ்ந்திருக்கிறது. ஆனால் வடக்கு கிழக்கில் போர் மிக முக்கியமான கருவியாக நின்று மரங்களையும், இயற்கை நீர் நிலை களையும் புல்வெளிகளையும், வயல்களையும் சேதப்படுத்தியிருக்கின்றது. போரில் ஈடுபட்ட தரப்புகள் மனிதர் களையே கணக்கெடுக்காத நிலையில் இயற்கை சார்ந்த நிலைகளை எப்படி கணக்கில் எடுப்பார்கள்?

போரில் வடக்கில் - கிழக்கில் இருந்த பெரும் மரங்கள் முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டன. இப்போது எந்தச் சாலை ஓரத்திலும் 50 வருடம் கடந்த வைர மரத்தைக் காண முடிவதில்லை. வேப்ப மரத்தையோ, பாலை மரத்தையோ, புளிய மரத்தையோ, ஆல மரத்தையோ காண்பது அரிது. போரில் எறிகணைகள் பட்டு அழிந்தவைகளும், முறிந்தவைகளும் போக எஞ்சியவைகளை காவலரண்களின் பாதுகாப்புக்காக வெட்டி எடுத்தனர். பயன்தரு மரங்களான தென்னை, பனை கூட விதி விலக்குக் குட்படவில்லை. முகமாலை பனை வெளி இப்போது வெட்ட வெளியாகக் காட்சிதருகிறது.

> வேப்ப மரத்தையோ, பாலை மரத்தையோ, புளிய மரத்தையோ, ஆல மரத்தையோ இன்று காண்பது அரிது. போரில் எறிகணைகள் பட்டு அழிந்தவைகளும் முறிந்தவைகளும் போக எஞ்சியவைகளை காவலரண்களின் பாதுகாப்புக்காக வெட்டி எடுத்தனர். பயன்தரு மரங்களான தென்னை, பனை கூட விதி விலக் குக்குட்படவில்லை. முக மாலை பனை வெளி இப்போது வெட்ட வெளியாக காட்சிதருகிறது.

போருக்குப் பின்னர் நிகழ்கின்ற அபிவிருத் தியும் மரங்களை கவனத்தில் எடுக்கவில்லை. அபிவிருத்தி என்ற போர்வையில் முதல் வேலையாக தெருவோரமும் நடுத்தெரு விலும் நிற்கும் வைர மரங்களை தறித்து வீழ்த்துவதையே மேற்கொள்கின்றனர். அது எத்தனை நூற்றாண்டுகள் பழைமையானதாக இருந்தாலும், கதைகள் பல அறிந்ததாக இருந்தாலும் முதல் வேலை தறித்து வீழ்த்துவது தான். அதே போல நாம் இப்போது புதிதாக அபி விருத்தி அடைந்த நாடுகளின் பாணியில் வீடுகளை அமைத்துக் கொள்ள ஆர்வம் கொண்டிருக்கிறோம். அதிலும் முதல் வேலை அருகிலிருக்கும் பெரு மரங்களை வெட்டி வீழ்த்துவதுதான். ஏனெனில் மரங்களின் வேர் சிமெந்துச் சுவரை உடைத்துவிடும் என்ற ஞானக் கணிப்பு நம்மை ஆட்கொண்டு விடுகிறது. இலங்கையின் தெற்கில் இந்த அபத்தம் நிகழ்வதில்லை. நடுவீதியில் மரம் இருந்தாலும் அதை வாழவிட்டு, அதைச் சுற்றியே வீதி அமைத்துக் கொள்கின்றனர். அநேக சிங்களவர்களின் வீட்டுக்குள்ளேயே பெரு மரங்கள் முளைத்திருப்பதை தெற்குப் பக்கம் பேருந்தில் பயணம் செய்யும் ஒருவர் அவதானிக்க முடியும். நல்ல விடயங்களை எதிரியிடமிருந்து கூடக் கற்றுக் கொள்ளலாம் என்பதற்கு இது சரியான உதாரணம்.

நிலமும், வயல் வெளியும் போரினால் அழிவுக்குள்ளாகி இருக்கின்றன. வீசப்பட்ட எறிகணைகள் மனிதர்களைத் தாக்கியனவோ இல்லையோ நிலத்தை, வயலைப் பிளந்தன. நூற்றாண்டுக் கணக்கான இரசாயன விளைவுகளையே ஏற்படுத்தக்கூடிய பாதிப்பை அந்த குண்டுத்துகள்கள் நிகழ்த்தி யிருக்கின்றன. இப்போதும் வன்னிக்குள்ளால் பயணம் செய்யும் போது வயல் நிலங்கள் பலவும் மேய்ச்சல் தரைகளும் கைவிடப்பட்ட நிலையில் காய்ந்து வறண்டு கிடப்பதை அவதானிக்க முடியும். இதே நிலங்கள் சற்று முன்னரான காலத்தில் பச்சைப் பசேலென நெற்பயிர்களையும், எக்காலத்திலும் மந்தைகள் மேயும் புற்தரைகளையும் கொண்டிருந்ததை மறக்க முடியாது. ஆனால் இப்போது அந்த நிலம் பாலை.

போர் நீர் நிலைகளையும் வறட்சியடையச் செய்திருக்கிறது. மண் அணைகள் பரவலாகக் கட்டப்பட்டு அவற்றுக்கு மேலேயே பதுங்கியிருந்து போரிட்டுக் கொண்டார்கள். ஆறு, குளம், குட்டை, விவசாய நிலம் என எவ்வித இயற்கை அமைவுகளையும் கவனத்தில் கொள்ளாது கண்ட இடங்களிலெல்லாம் மண் அகழப்பட்டது. வேறு இடத்தில் அணை கட்டப்பட்டது. இயற்கையாக சம அளவில் ஆங்காங்கே தோன்றியிருந்த நீர் நிலைகள் இப்போது பல்கிப் பெருகிவிட்டன. நீர் எல்லா இடங்களிலும் தேங்கும் நிலை உருவாகியிருக்கின்றது. அதனால் ஓரிடத்தில் நீர் சேமிக்கப்படும் இயற்கைசார் முறை குழம்பி யிருக்கின்றது. பரவலாக எல்லா இடங்களிலும் சிறிது சிறிதாக மண்ணில் தேங்கும் மழை நீர் விரைவாகவே ஆவியாகி விடு கிறது. இதனால் மிச்ச சொச்சமுள்ள விவசாயமும் பாதிக்கப்படுகிறது.

போர் இப்படியாக மனிதர்களை மட்டும் படுகொலை செய்தது என்று வாதிடுவதை ஏற்க முடியாது. மாறாக மனித வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றான சுற்றுச் சூழலையும் படுகொலை செய் திருக்கிறது.

என்றுமே ஆறாத விழுப்புண்களை மண்ணின் ஒவ்வொரு மூலையிலும் முளைக்க விட்டுள்ளது. ஆனால் நாம் அவற்றைப் பற்றிக் கவனம் எடுப்பதில்லை. நான், எனது குடும்பம், எனது சொந்தக்காரர் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலைக்குள் உழல்பவர்களாக மாறிவிட்டோம்.






# வளமான வாழ்வு தரும் வைகாசி விசாகம்

இராசையா ஸ்ரீதரன்

முருகப் பெருமானுக்குரிய சிறப்பான திருநாள் இன்றைய வைகாசி விசாகம் என்ற பெருநாளாகும். மிக விசேடமான புனிதமும், புண்ணியமும், மகிமையும், மகத்துவமும் பொருந்திய இந்த வைகாசி விசாக நன்னாள் சைவ சமயிகளின் ஒரு பொன்னான விரதத் திருநாளாகும்.

முருகப் பெருமானுடைய அவதார தினம் என்ற பெருமையையுடைய இன்றைய வைகாசி விசாகம் இந்துக்களின் புனித விரத நாள். இந்த வைகாசி விசாக விரதத்தை அனுஷ்டித்தால் நிறைந்த கல்வியறிவும், ஞானமும் குறைவில்லாத செல்வமும், புத்திரபாக்கியமும் கிடைக்கும். இந்த வைகாசி விசாகம் முருகன் ஆலயங்களில் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. சிவ பெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து பொறிகளாகப் புறப்பட்டு சரவணப் பொய்கையிலே ஆறு குழந்தைகளாக உதித்து திருவிளையாடல் புரிந்த போது, உமையவள் வந்து ஆசையும், ஆவலும் மீதூரப் பெற்று அள்ளி அரவணைத்தவேளை ஆறு முகங்களுடன் ஷண்முகப் பெருமான் தோன்றிய நாளே இன்றைய வைகாசி விசாகம்.

வைகாசி மாதத்திலே விசாக நட்சத்திர நாளில் பௌர்ணமியும் வருகின்ற இந்தப் புண்ணிய விரதத்தை அனுஷ்டிக்க விரும்புவோர் இன்று காலை எழுந்து காலைக் கடன்முடித்துப் புனித புண்ணிய நீராடிச் சந்தியாவந்தனம் செய்து அருகிலுள்ள ஏதாவது ஒரு முருகன் கோயிலுக்குப் போய் ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். இன்று பகல் முழுவதும் சிவசிந்தனையுடன் உலக லௌகீகத்தில் மனதை அலைய விடாது அடக்கி, ஒரு மனதாக முருகப் பெருமானுடைய தோத்திரங்களைப் பாடிக் கொண்டிருக்க வேண்டும். மதியம் ஒரு பொழுதுண்டு யாராவது ஓர் அடியாருக்கும் உணவு கொடுத்து, முடியுமாயின் வஸ்திரதானமும் செய்து வழிபாடு ஆற்றுதல் நல்லது. இரவு பால் பழம் அருந்தலாம். முருகனின் திவ்ய அருட்கடாட்சம் பெறுவதற்கு இன்றைய நாளே உகந்த நன்னாளாகும் என்று நம் முன்னோர்கள் கூறிச் சென்றிருக்கின்றார்கள்.

ஞானமே வடிவானவன் முருகன். அவனிடமிருந்து நாம் ஞான அறிவைப் பெற்றுக்கொள்ள இன்றைய வைகாசி விசாகத்து நன்னாளில் விரதங்காத்து உபவாசமிருத்தல் வேண்டும். சிவ பெருமானும் முருகனும் ஒரே தன்மையையுடையவர்கள். தந்தைக்கே உபதேசித்து "தகப்பன் சுவாமி" என்று பெயர் பெற்றவர் முருகன். 'ஓம்' என்ற பிரணவப் பொருளை சிவபெருமானுக்குக் குருவாக இருந்து சொல்லிக் கொடுத்த முருகன் ஞான பண்டிதனாவான். அந்த ஞானமே வடிவான வள்ளல் அழகன் முருகனின் அருள் பெற்றுய்ய வழி காட்டும் வைகாசி விசாகம் வளமான வாழ்வு தரும் வல்லமையுடைய ஒரு நல்ல நாளாகும். இதை நாம் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் இன்பமும் 'துன்பமும் அவர்கள் செய்த வினைக்கேற்ப மாறி மாறிவரும். அதைக் கண்டு நாம் மனம் தளர்ந்து போகக் கூடாது. மனம், மொழி, மெய் மூன்றினாலும் நல்லதையே சிந்திக்க வேண்டும். இந்த வாழ்க்கை வண்டி இன்பம், துன்பம் என்ற கரடுமுரடான மேடு பள்ளங்களைத் தாண்டி ஓட வேண்டுமாயின் இன்றைய வைகாசி விரதத்தை முறையாக அனுஷ்டித்து முருகனருள் பெற்றுய்யலாம்.

எமது வாழ்க்கையில் வரும் வேதனைகளையும், சோதனைகளையும் தாங்குகின்ற மன வலிமையை எமக்குக் கொடுப்பவன் தமிழ்க் கடவுளான முருகனே. "தமிழ் தமிழ்" என்று தொடர்ந்து சொல்லும் போது அது "அமிழ்து அமிழ்து" என்று கேட்கும் ஞான பண்டிதனான முருகனே தமிழ்த் தலைவன். இன்றைய வைகாசி விசாக நன்னாளில் தமிழ் மக்களாகிய நாம் முறைப்படி முருகனை வழிபட்டு பேரானந்தப் பெருவாழ்வு வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.



## உறுதியான திட்டமேதும் மோடி அரசிடம் இல்லை

காங்கிரஸ் குற்றச்சாட்டு



வீரப்பமொய்லி

புதுடில்லி, ஜூன் 11

மோடி அரசிடம் உறுதியான திட்டங்கள் எதுவும் இல்லை என்பதை குடியரசுத்தலைவரின் உரை வெளிப்படுத்துகிறது என்று காங்கிரஸ் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான வீரப்ப மொய்லி கூறுகையில், பா.ஜ.க. தலைமையிலான அரசு நிர்வாகம், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மக்களின் விருப்பங்களை 60 மாதங்களில் நிறைவேற்றுவோம் என்று கூறியிருக்கிறார்கள். அதனை எப்படி நிறைவேற்றுவோம் என்று கூறுவில்லை. குடியரசுத்தலைவரின் உரை மோடி அரசிடம் உறுதியான திட்டங்கள் எதுவும் இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது என்று தெரிவித்துள்ளார். (த)

# இந்திய விமான நிலையங்களின் பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவு

## கராச்சி விமான நிலைய தாக்குதல் எதிரொலி

**மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையின் விரைவு நடவடிக்கைக் குழுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். பாதுகாப்புப் படையினர் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்**

புதுடில்லி, ஜூன் 11

பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்தில் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, இந்தியாவில் உள்ள விமான நிலையங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

விமான நிலையங்களில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், உளவுத்துறை இயக்குநர் ஆசிப் இப்ராஹிம் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையின் விரைவுநடவடிக்கைக் குழுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். பாதுகாப்புப் படையினர் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். விமான நிலையங்களை எளிதாக சென்றடையும் வகையில் பாதுகாப்புப் படை வீரர்களை அருகிலுள்ள முகாம்களில் தங்க வைக்க வேண்டும். விமானக் கடத்தல் தடுப்புப் பிரிவினரை அவ்வப்போது ஒத்திகைப் பயிற்சியில் ஈடுபடுத்தவேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கராச்சித் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அறிக்கையை கோரியுள்ள உள்துறைஅமைச்சர், அது போன்ற தாக்குதல் சம்பவங்கள் இந்திய விமான நிலையங்களில் நடைபெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கராச்சியில் நிகழ்ந்த தீவிரவாதிகள் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து டில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

டில்லி பொலிஸாரும், மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையினரும் இணைந்து ரோந்துப் பணியை மேற்கொண்டு வருகின்றனர். பயணிகளையும், அவர்கள் கொண்டு வரும் பொருள்களையும் சோதனையிடுவதில் மிகவும் கவனத்துடன் இருக்கும்படி பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

விமான நிலையங்களுக்கு வெளியே தடுப்புக்களை அமைத்து, வாகன சோதனையைத் தீவிரப்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த)

## அத்வானிக்கு மீண்டும் தனி அறை ஒதுக்கீடு

சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி



அத்வானி

புதுடில்லி, ஜூன் 11

அத்வானியின் தனி அறையில் இருந்து அவரது பெயர்ப் பலகை நீக்கப்பட்டதை அடுத்து எழுந்த பல்வேறு சர்ச்சைகளுக்கு முற்றப்புள்ளி வைக்கும் விதததில், அத்வானிக்கு மீண்டும் தனி அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவர் அத்வானிக்கு நாடாளுமன்றத்தின் 4ஆம் எண் அறை ஒதுக்கப் பட்டிருந்தது. திடீரென அவரது அறையின் வாயிலில் இருந்து அவரது பெயர்ப் பலகை நீக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் நடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் அறையிலேயே ஓய்வெடுத்து வந்தார்.

இந்த நிலையில், தற்போது அத்வானி 10 ஆண்டுகளாக பயன்படுத்தி வந்த அறைக்கு வெளியே மீண்டும் அவரது பெயர்ப்பலகை பொருத்தப் பட்டுள்ளது. (த)




ஹிமாச்சல் பிரதேசத்தில் ஆற்று நீரால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த மாணவர்களின் உடல்கள் அவர்களின் பிரதேசங்களுக்கு விமானப்படை ஹெலிமூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

## மகாராஷ்டிர வன்முறையில் வலதுசாரி அமைப்புக்குத் தொடர்பு?

புதுடில்லி, ஜூன் 11

மகாராஷ்டிர மாநிலத்தில் வெடித்த வன்முறைச் சம்பவங்களுக்கும், வலதுசாரி அமைப்புக்கும் தொடர்புகள் இருக்கலாம் என பொலிஸ் உளவுப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களுக்கும் சாம்பாஜி பிரிகேட்டுக்கும் தொடர்புகள் இருக்கலாம் எனப் புலன் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அதிகாரி ஒருவர் அளித்த பேட்டியில், வன்முறைச் சம்பவங்கள் நடந்த விதத்தை உற்றுக் கவனித்தால் சில விடயங்கள் உறுதியாகின்றன. வன்முறைச் சம்பவங்கள் சாம்பாஜி பிரிகேட் அமைப்பினரின் ஆதிக்கம் நிறைந்த மேற்கு பகுதியிலேயே நடைபெற்றிருக்கிறது. எனவே அவர்களுக்குத் தொடர்பு இருக்க அதிக வாய்ப்பிருக்கிறது என்றார்.

பெயர் குறிப்பிட விரும்பாத மற்றொரு ஐ.பி.எஸ். அதிகாரி கூறுகையில்; சாம்பாஜி பிரிகேட் அமைப்பினர் நடமாட்டம் தீவிரமாகக் கண்காணிக்கப் பட்டு வருகிறது என்றார்.

மகாராஷ்டிரத்தில் கடந்த வாரம் மராட்டிய மன்னர் சிவாஜி, சிவசேனைத் தலைவர் பால் தாக்கரே, அம்பேத்கர் ஆகியோரை இழிவுப்படுத்தும் விதமாக பேஸ்புக்கில் சில படங்கள்கசியவிடப்பட்டிருந்தன. ஆட்சேபனைக்குரிய படங்களை சிலர் பேஸ்புக்கில் பரப்பியதால் மகாரஷ்டிராவில் மீண்டும் வன்முறை வெடித்தது.

கடந்த 2004 ஜனவரியில், பந்தர்கர் ஓரியண்டல் ஆய்வு மையம் தாக்கப்பட்டதாக சாம்பாஜி பிரிகேட் மீது ஏற்கெனவே வழக்கு உள்ளது.

இந்த ஆய்வு மையத்தைச் சேர்ந்த அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் மராட்டிய மன்னர் சிவாஜி குறித்து வெளியிட்ட தகவல்களுக்கு கண்டனம் தெரிவித்து தாக்குதல் நடத்தப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (த)

## பிரமோஸ் சோதனை வெற்றி

புதுடில்லி, ஜூன் 11

போர்க் கப்பலிலிருந்து 290 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கப்பலைத் தாக்கி அழிக்கும் திறனுடைய பிரமோஸ் ஏவுகணை கடந்த திங்கட் கிழமை வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

15-ஆல்பா திட்டத்தின் ஒரு பகுதியாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் மிகப் பெரும்போர்க் கப்பலான ஐ.என்.எஸ் கொல்கத்தாவிலிருந்து பிரமோஸ் ஏவுகணை ஏவப் பட்டது. கர்நாடகாவின் கார்வார் கடற்பகுதியிலிருந்து ஏவப் பட்ட பிரமோஸ் தனது இலக்கை வெற்றிகரமாகத் தாக்கியது.

இந்தச் சோதனையின் அனைத்துப் படிநிலைகளையும் பிரமோஸ் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தது என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மாறன் சகோதரர்களிடம் விசாரணை நடத்த முடிவு

**தற்போது இந்த வழக்கு விசாரணை மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. டில்லி சி.பி.ஐ. அதிகாரிகளான ராஜேஷ், மகேந்தர் உட்பட 4 பேர் சென்னையில் முகாமிட்டு இந்த வழக்குத் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.**

புதுடில்லி, ஜூன் 11

பி.எஸ்.என்.எல். தொலைபேசி இணைப்புக்களை முறைகேடாகப் பெற்று பயன்படுத்தியமை தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிமாறன், சன் தொலைக்காட்சிநிர்வாக இயக்குநர் கலாநிதிமாறன் ஆகியோரிடம் சி.பி.ஐ. விசாரணை நடத்த இருப்பதாகக் கூறப்படுகிறது.

மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சராக தயாநிதிமாறன் இருந்தபோது, சென்னையில் உள்ள அவரது வீட்டுக்கு 323 அதிநவீன வசதி கொண்ட புரோட்பாண்ட் பி. எஸ்.என். எல். தொலைபேசி இணைப்புகள் கொடுக்கப்பட்டன.

அவர்களது குடும்ப தொலைக் காட்சியான சன் தொலைக் காட்சியின் வளர்ச்சிக்கு அதைப் பயன்படுத்திக்கொண்டதாகவும், இதனால் பி.எஸ்.என்.எல். நிறுவனத்துக்கு ரூபா 440 கோடி இழப்பு ஏற்பட்டதாகவும் 2011 ஆம் ஆண்டு சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தியது. இந்த வழக்கில் தயாநிதி மாறன், பி.எஸ்.என்.எல். முன்னாள் பொது மேலாளர்கள் பிரேமானந்த், வேலுச்சாமி ஆகியோரின் பெயர்கள் சேர்க்கப்பட்டன.

முதலில் பரபரப்பாக பேசப்பட்ட இந்த வழக்கு விசாரணை, முன்னேற்றம் இல்லாமல் இருந்தது. தற்போது இந்த வழக்கு விசாரணை மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. டில்லி சி.பி.ஐ. அதிகாரிகளான ராஜேஷ், மகேந்தர் உட்பட 4 பேர் சென்னையில் முகாமிட்டு இந்த வழக்குத் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

சன் வலையமைப்பு முன்னாள் அதிகாரிகள் சரத்குமார், ஹன்ஸ் ராஜ் சக்சேனா ஆகியோரிடம் கடந்த வாரத்தில் 3 நாள்கள் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர். பி.எஸ்.என்.எல். முன்னாள் பொது மேலாளர்கள் பிரேமானந்த், வேலுச்சாமி மற்றும் சில அதிகாரிகள், ஊழியர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தயாநிதி மாறனிடமும், அவரது சகோதரர் கலாநிதி மாறனிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தவுள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்துவதற்கான அனுமதிக் கடிதத்தில் சி.பி.ஐ. இயக்குநர் ரஞ்ஜித் சின்ஹா கையெழுத்திட்டுவிட்டார் என்று கூறப்படுகிறது. விசாரணைக்கு வருமாறு மாறன் சகோதரர்களுக்கு விரைவில் கடிதம் அனுப்பப்படும் என்றும் கூறப்படுகிறது. (த)

## குழந்தையுடன் விளையாடிய ஒபாமா



நியூயோர்க், ஜூன் 11
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, தாம் ஒரு சிறு குழந்தையுடன் சிரித்து விளையாடும் புகைப் படத்தைத் தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டுள்ளார்.
உலகில் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவரான பராக் ஒபாமா, தனது ஓவல் அலுவலகத்தில் முன்னாள் துணை ஊடகச் செயலாளரான ஜேமி சுமித்தின் குழந்தை லிங்கன் ரோஸ் பியர்ஸ் சுமித்துடன் சிரித்து மகிழ்ந்து விளையாடியுள்ளார். இருவரும் கை கோர்த்துக் கொண்டு, சிரித்து விளையாடும் இந்தக் காட்சியை ஒபாமா தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்தக் காட்சி அனைவரின் மனதையும் கவர்ந்துள்ளது. (த)



மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுக்கும் ஒரு கட்டமாகப் பாப்பரசர் பிரான்சிஸ் இஸ்ரேல் ஜனாதிபதி சிமொன் பெரஸ், பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் ஆகியோரை வத்திக்கான் மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அதன் பின்னர் வத்திக்கான் வளாகத்தில் சமாதானத்தின் அடையாளமாக ஒலிவ் மரக் கன்று நாட்டப்பட்டது. (த)

# ஷியா யாத்திரிகர்கள் 25 பேர் படுகொலை

## பாகிஸ்தானில் தீவிரவாதிகள் வெறிச் செயல்

இஸ்லாமாபாத், ஜூன் 11
பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில், ஈரானில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த ஷியா யாத்திரிகர்கள் 23 பேர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.
ஈரானுக்குப் புனித பயணம் மேற்கொண்ட ஷியா முஸ்லிம் யாத்திரிகர்கள், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 10 பஸ்களில் பாகிஸ்தான் திரும்பிக் கொண்டிருந்தனர். ஈரான் எல்லைக்கு அருகில் உள்ள டப்டான் நகரில் ஒரு ஹோட்டல் முன்பு பஸ்களை நிறுத்தினர்.
யாத்திரிகர்கள் ஹோட்டலுக்குச் செல்வதற்காகப் பஸ்களில் இருந்து இறங்கி வரும்போது, அங்கு கும்பலாக வந்த தீவிரவாதிகள், யாத்திரிகர்களை நோக்கி கண் மூடித்தனமாகச் சுட்டனர். மேலும் கையெறி



காயமடைந்தோருக்குச் சிகிச்சை

குண்டுகளையும் வீசினர். இந்தக் கொடூரத் தாக்குதலில் 25 யாத்திரிகர்கள் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் மேலும் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர்.
இதனிடையே, தீவிரவாதிகளின் தாக்குதல் பற்றி அறிந்து, துணை இராணுவப் படையினர் அங்கு விரைந்தனர். அவர்கள் கடும் சண்டைக்குப் பிறகு 6 தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்றனர்.
இந்தத் தாக்குதலுக்கு சன்னி பயங்கரவாத அமைப்பான ஜெய்ஷ் உல் இஸ்லாம் பொறுப்பேற்றுள்ளது. இந்த இயக்கத்தின் செய்தித் தொடர்பாளராக அறிமுகம் செய்துகொண்ட ஆசாம் தாரிக் என்ற நபர், குவெட்டாவில் உள்ள பத்திரிகையாளர்களைத் தொடர்பு கொண்டு இதனைக் கூறினார்.
பலுசிஸ்தான் மாகாண உள்துறை செயலாளர் அக்பர் துராணி கூறுகையில், முகமூடி அணிந்திருந்த தீவிரவாதிகள் பெருமளவு ஆயுதங்களுடன் வந்திருந்தனர். ஹோட்டலை அவர்கள் முற்றுகையிடத் தயாரானபோது, பாதுகாப்புப் படையினர் அவர்களை இடைமறித்துத் தாக்கினர். சிலமணிநேர மோதலுக்குப்பிறகு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றார். (த)



தீவிரவாதிகள் கைவிட்டுச் சென்ற ஆயுதங்கள்

## கராச்சியில் நேற்றும் தீவிரவாதிகள் அதிரடி

இஸ்லாமாபாத், ஜூன் 11
கராச்சி விமான நிலையம் அருகே தீவிரவாதிகள் நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்புப் படையினர் நடத்திய பதில் தாக்குதலில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
பாகிஸ்தானின் கராச்சி விமான நிலைய வளாகத்திலுள்ள சோதனைச் சாவடி மீது தீவிரவாதிகள் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தியதை அடுத்து, பாதுகாப்புப் படைவீரர்கள் அவர்களை எதிர்த்து பதில் தாக்குதல் நடத்தினர்.
தீவிரவாதிகள் விமான நிலையத்தின் சுற்றுப்பகுதியில் உள்ள கட்டடத்திலிருந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர். அங்கிருந்து சோதனைச் சாவடியின் இரண்டாவது அறையை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அந்நாட்டின் பெஹல்வான் தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.
தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே சுமார் 2 மணி நேரம் நீடித்த கடும் சண்டையில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், சிலர் அங்கிருந்து தப்பித்து ஓடியதாகவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகின. சம்பவ இடத்திலிருந்து எழுந்த பயங்கரச் சத்தம், கராச்சி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. தீவிரவாதத் தாக்குதலை அடுத்து விமான நிலையத்தில் விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. மேலும், தப்பித்துச் சென்ற தீவிரவாதிகள், கராச்சி நகரில் மட்டுமே பதுங்கி இருக்கவாய்ப்புஉள்ளதால், பாகிஸ்தான் இராணுவ விமானம், தீவிரவாதிகளைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. கராச்சி விமான நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் ஏற்கனவே 29 பேர் உயிரிழந்ததை குறிப்பிடத்தக்கது. (த)

## செல்வந்தருக்கு வியட்நாமில் 30 ஆண்டு சிறை

கோடிக்கணக்கான டாலர்கள் மோசடியில் ஈடுபட்ட குற்றத்துக்காக, வியட்நாமின் மிகப் பெரிய செல்வந்தர்களில் ஒருவரும், ஆடம்பரம் மிக்க தொழிலதிபர்களில் ஒருவருமான ங்யுயென்டுக்கியெனுக்கு 30 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
ஹனோய் நகரின் தலைசிறந்த உதைபந்தாட்ட அணியின் உரிமையாளராக இருக்கின்ற கியென் வரி ஏய்ப்பு செய்ததாகவும் சட்டவிரோத வர்த்தகத்தில் ஈடுபட்டதாகவும் குற்றங்காணப்பட்டுள்ளது. (த)

## சூறாவளிப் பயணத்தை ஆரம்பிக்கிறார் ஹிலாரி

### தனது புத்தகத்தை விளம்பரப்படுத்த

வாஷிங்ரன், ஜூன் 11
அமெரிக்க முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரான ஹிலாரி கிளின்ரன் முக்கிய நகரங்களில் தனது சூறாவளிச் சுற்றுப் பயணத்தைத் தொடங்க உள்ளார்.
ஹார்ட் சொய்சஸ் என்ற பெயரில் ஹிலாரி எழுதியுள்ள புத்தகம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்படுகிறது.
இந்தப் புத்தகத்தை விளம்பரப்படுத்துவதற்காக நியூயோர்க், சிக்காக்கோ, வாஷிங்ரன் புறநகர் என பல்வேறு நகரங்களுக்கு ஹிலாரி சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.



ஹிலாரி கிளின்ரன்

2016 இல் நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்ரன் அதிபர் வேட்பாளராகப் போட்டியிடக் கூடும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.
இதற்கு முன்னோட்டமாக புத்தக விளம்பரத்தோடு தேர்தல் பரப்புரையையும் அவர் மறைமுகமாக மேற்கொள்வார் என்று தெரிகிறது.
அதிபர் ஒபாமா ஆட்சியில் 4 ஆண்டுகள் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த போது எடுத்த முடிவுகள், முக்கிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஹிலாரி தனது புத்தகத்தை எழுதியுள்ளார்.
இப் புத்தகத்தின் ஒவ்வொரு வார்த்தையும் மிகவும் கவனமாகக் கையாளப்பட்டிருப்பதாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (த)

## ஆப்கானிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் வான் தாக்குதல்

### 15 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், ஜூன் 11
ஆப்கான் எல்லைப்பகுதில், பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் 15 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.
ஆப்கானிஸ்தானில் உள்ள திராஹ் பள்ளத்தாக்கில் கைபர் இனப் பழங்குடியினர் வசிக்கின்றனர். இங்கு அல் கொய்தா மற்றும் தனியே இயங்கும் சில தீவிரவாதிகளின் நடமாட்டம் அதிகம் இருப்பதாக வந்த தகவலை அடுத்து, அந்த பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன் தினம் வான்வழித் தாக்குதல் நடத்தியது.
இந்தத் தாக்குதலில் அங்கு மறைந்திருந்த 15 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.
கராச்சியில் உள்ள விமான நிலையத்தில் தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட அடுத்த 36 மணி நேரத்தில் இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயற்றிட்டங்களைப் பற்றி கூறுவதைத் தவிர்ப்பது நல்லது. கடன் பிரச்சினை தீரும். எதிர்ப்புகள் அகலும், தொழில், வியாபாரம் தொடர்பான போட்டிகளும் நீங்கும்.

**இடபம்:** பெரியவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதும் நன்மை தரும். மனக்குறைகள் நீங்கி மனதில் நம்பிக்கை உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் விடா முயற்சியுடன் செய்வதன் மூலம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும்.

**மிதுனம்:** எந்த ஒரு வேலையும் மன திருப்தியுடன் செய்வீர்கள். புத்திசாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கப் பெறுவார்கள்.

**கடகம்:** வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகள் கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களுக்கு தேவையான துணி போன்றவைகளை வாங்குவீர்கள். தம்பதிகளிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும்.

**சிங்கம்:** உங்களைப் பற்றி யாராவது வீண் அவதூறு பேசினால் கண்டுகொள்ளாமல் ஒதுங்கி விடுவது நல்லது. விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ருசியான உணவை உண்பீர்கள். எந்த ஒரு வேலையையும் மனதிருப்தியுடன் செய்வீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும்.

**கன்னி:** உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் இருக்கும். காரிய வெற்றி உண்டாகும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்களைத் தரும். திடீரென்று அவசர முடிவை எடுக்க வேண்டியிருக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமுகமான நிலை நீடிக்கும்.

**துலாம்:** மனை, வீடு வாங்க எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதமாக நடக்கும். எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைபட்ட பணவரத்து தடைநீங்கி கைக்கு வந்து சேரும்.

**விருச்சிகம்:** தொழில் ஸ்தானத்தில் இருக்கும் குருவினால் மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். பிள்ளைகள் பற்றிய மனக்கவலை நீங்கும். நீங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற பாடுபடுவீர்கள்.

**தனுசு:** எதிலும் சாதகமான பயன் கிடைக்கும். கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும். பூர்வீக சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும்.

**மகரம்:** தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும்.

**கும்பம்:** எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து சாதாரணமாக பேசுவது நல்லது. வாழ்க்கைத் துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும்.

**மீனம்:** வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பயன் தரும். செலவு அதிகரிக்கும். தேவையான உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

## நாளை

**வைகாசி-29 வியாழக்கிழமை | 12.06.2014**

திதி: சதுர்த்தசி மு.ப.11.47 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.ப.02.38 வரை
சுபநேரம்: 07.22-08.52 வரை
இராகுகாலம்: 01.22-02.52 வரை
பூரணை விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## ஆன்மா, இயற்கை, இறைவன்

வேதாந்தக் கொள்கைப்படி மனிதன் மூன்று பொருள்களால் ஆனவன் என்று கூறலாம். வெளியே உள்ளது தூல உடல்; இதில்தான் கண், மூக்கு, காது போன்ற புலன் உணர்ச்சிக் கருவிகள் இருக்கின்றன. வெளியே தெரியும் கண் என்ற இந்த உறுப்பு, பார்வையின் மூல காரணம் அல்ல; இது வெறும் கருவிதான். இதற்குப் பின்னால்தான் புலன் (Organ) இருக்கிறது; இது போலவேதான் காதும். வெளியே தெரியும் உறுப்பு வெறும் கருவிதான்; இதற்குப் பின்னேதான் புலன் உள்ளது. இந்தக் கால உடலியல் விஞ்ஞானிகள் இதை 'மையம்' என்கிறார்கள். வடமொழியில் புலன்களை 'இந்திரியங்கள்' என்கிறார்கள்.

கண் என்ற கருவிக்குப் பார்க்கும் சக்தி தரும் 'மைய'த்தை அழித்துவிட்டால், கண்கள் பார்க்கும் சக்தியை இழந்து விடும்; எல்லாப் புலன்களின் விடயமும் இப்படித்தான். புலன்களும் தாமாகவே உணர்வதில்லை. இவற்றுடன் இன்னொன்றும் இணைய வேண்டும். இந்த இன்னொன்றுதான் மனம். பல வேளைகளில் உங்கள் மனம் எதிலாவது ஆழ்ந்திருக்கும்போது உங்கள் அருகில் கடிகார மணி அடிப்பதுகூட உங்களுக்குக் கேட்பதில்லை; ஏன்? காது இருக்கிறது, மணி ஓசை அலைகள் காதினுள் புகுந்து, ஒலி நரம்புகள் வழியே மூளைக்கும் சென்றன. என்றாலும் அந்த ஓசை உங்களுக்குக் கேட்கவில்லை. ஏனெனில் மனம் புலனுடன் இணையவில்லை. வெளிப் பொருள்களின் பதிவுகள் புலன்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அப்போது புலன்களுடன் மனம் இணைந்திருந்தால், இந்தப் பதிவுகளை உள் வாங்கி அதற்கு மனம் ஒரு நிறத்தை, ஒரு பொருளைக் கொடுக்கிறது. இந்த நிறம் அல்லது பொருளையே 'அகங்காரம்' அல்லது 'நான்' என்கிறோம்.

# மிகச் சிறிய பேஸ்மேக்கர் பொருத்தி பிரிட்டன் மருத்துவர்கள் சாதனை



உலகிலேயே மிகவும் சிறிய இதயமுடுக்கியினை (Pacc-maker) நோயாளி ஒருவருக்குப் பொருத்தி பிரிட்டன் சவுத்தாம்டன் பொது மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

இலத்திரனியல் தொழில் நுட்பத்தைக் கொண்ட இதயத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தவல்ல இந்தச் சாதனம் சாதாரண அன்டிபயோட்டிக் வில்லைகளை விடவும் சிறியவை என இதய சத்திர சிகிச்சை நிபுணர் ஜோன் மோர்ஹன் தெரிவித்துள்ளார்.

அளவில் சிறியதாகக் காணப்படுவதுடன் வயர்லெஸ் தொழில் நுட்பத்தை இந்தச் சாதனம் கொண்டுள்ளமை விசேட அம்சம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலகை அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | 4 | | | | |
| | 4 | 8 | 1 | 3 | | | | 9 |
| 1 | | | | | 2 | 7 | 4 | 3 |
| | | 3 | 2 | 1 | | | 8 | |
| | | 5 | | | | 1 | | |
| | 7 | | | 5 | 8 | 6 | | |
| 3 | 1 | 7 | 8 | | | | | 4 |
| 8 | | | | 9 | 4 | 5 | 7 | |
| | | | | 7 | | 3 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 9 | 5 | 2 | 7 | 1 | 4 | 6 |
| 2 | 6 | 4 | 9 | 3 | 1 | 5 | 8 | 7 |
| 7 | 5 | 1 | 8 | 6 | 4 | 9 | 3 | 2 |
| 6 | 9 | 8 | 7 | 4 | 2 | 3 | 5 | 1 |
| 4 | 2 | 7 | 1 | 5 | 3 | 8 | 6 | 9 |
| 5 | 1 | 3 | 6 | 8 | 9 | 2 | 7 | 4 |
| 1 | 4 | 5 | 3 | 9 | 6 | 7 | 2 | 8 |
| 9 | 3 | 2 | 4 | 7 | 8 | 6 | 1 | 5 |
| 8 | 7 | 6 | 2 | 1 | 5 | 4 | 9 | 3 |

## பெருவிழா

வடமராட்சி, ஜூன் 11

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வருடம் தோறும் நடத்தும் வைகாசிப் பெருவிழா நாளை மறுதினம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதி கோயிலில் இடம்பெறும் விசேட பூசையுடன் ஆரம்பமாகின்றது.

பேரவையின் உப தலைவர் அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பெருவிழாவுக்கான சிறப்புரையை கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் க.லலீசன் நிகழ்த்துவார். தொடர்ந்து தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். அதனையடுத்து மகேஸ்வர பூசை நடைபெறும்.

(க-173)

## குருபூசைகள்

வடமராட்சி, ஜூன் 11

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநீல கண்டயாழ்ப்பாணர் சுவாமிகள் ஆகியோரின் குருபூசைகள் நாளை மறுதினம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் கோயில்கள், மடாலயங்களில் இந்தக் குருபூசை தினத்தை ஒட்டி விசேட பூசைகள், வழிபாடுகள், அன்னதானம் என்பன இடம்பெறவுள்ளன.

(க-173)

## சிறுவர் கலைவிழா

வவுனியா, ஜூன் 11

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் 20 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் சிறுவர் கலைவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் கலை இலக்கிய நண்பர்கள் வட்ட தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜாவும், சிறப்பு விருந்தினராக வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க தலைவர் நா.சேனாதிராஜா மற்றும் கௌரவ விருந்தினராக கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கிருபாகரி யோகராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

(க-402)

## கருத்தாடல் நிகழ்வு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஐ.கதிர்காமசேகரன் தலைமையில் "போட்டிகளும், நடுவர்களும்" என்னும் தலைப்பில் இடம்பெறும் கருத்தாடல் நிகழ்வில் கருத்தாடலை மூத்த விரிவுரையாளர் பொ.சத்தியநாதன் தொடக்கி வைக்க தனது அனுபவங்களை கலாநிதி தமிழ்மணி அகளங்கன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

(க-421)

நீங்காத நினைவில்

### 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள் அறிமுகம் 26.03.1964 — தெய்வத்துள் சங்கமம் 07.06.1990

திதி: சதுர்த்தசி (11.06.2014)

செல்வி

### நர்மதா கனகரட்ணராஜா

(முன்னாள் ஆசிரியை, யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை)

எங்கள் அன்பின் திருவுருவே! பாசதீபமே! ஆசையின் மணிவிளக்கே!
பாசத்தின் பிறப்பிடமே! குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எங்கள் குடும்பத்தில் முதல் சொத்தாக பிறந்த முத்தான முத்தே!
எம்மை எல்லாம் ஆறாத் துயரில் விட்டு விட்டு
மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று சொல்ல உங்கள் உயிர் இல்லையம்மா
ஆண்டுகள் இருபத்து நான்கு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டகலாதம்மா!

உங்கள் பிரிவால் துயருறும்,
அம்மா, மாமாமார், மாமிமார்,
சித்திமார், சித்தப்பா, தம்பிமார், தங்கைமார்.

சந்தையடி,
மானிப்பாய்.

## மரண அறிவித்தல்

### அப்பையா முத்தையா



கோப்பாய் வடக்கு, பூதர் மடத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா முத்தையா (09.06.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தன்- சின்னம்மா தம்பதியரின் மருமகனும் அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும் றஞ்சனா, கீதா, இனிதா, அனிதா(செல்வி),கார்த்திகா(உசா-குடும்பநல உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை),றஜிபன் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2014) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதர்மடம், கோப்பாய் வடக்கு,கோப்பாய். (48842)(5.6) தகவல்: குடும்பத்தினர்.

**Personal Class** தரம் 3- முதல் A/L மற்றும் சகலருக்குமான English Class உம் அடிப்படையில் இருந்து Spoken with Grammar கற்க விரும்பு பவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். எமது நிறுவனத்தில் குழுவாகவும் தனியாகவும் வந்து கற்கமுடியும் அரியவாய்ப்பு தவறவிடாதீர்கள்.
தொடர்பு:பிரபல ஆசிரியர்,
(48894)(12.3.6) மானிப்பாய் வீதி, யாழ் 072 599 5167

**கடைகள் வாடகைக்கு**
யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் இரு கடைகள் வாடகைக்கு, களஞ்சிய பாவனைக்கும் உகந்தது.
(நீளம் 30 அகலம் 14) (48891)(7.6)
தொடர்பு: 077 909 6190

**பெண்களுக்கான நிரந்தர தொழில் வாய்ப்பு**
வவுனியாவில் அமைந்துள்ள எமது சுப்ரீம் மார்கட்டிங் கம்பனியில் O/L மேல் கல்வி கற்ற 18-28 வயதுக்கு இடைப்பட்ட பெண்களுக்கு முகாமைத் துவம் சம்பந்தமாக ஆறு மாதகாலம் பயிற்சியளிக்கப்பட்டு பயிற்சியின் பின் டிப்ளோமா சான்றிதழு டன் அவர்கள் விரும்பும் மாவட்டத்தில் 40,000/= சம்பளத்துடன் நிரந்தர தொழில் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.(43342)(5.6)
தொடர்பு:071 495 7582/077 367 8472

## கண்ணீர் அஞ்சலி



Ram Builders உரிமையாளர்
த.விஸ்ணுவர்த்தன்
அவர்களின் தந்தை

### சு.தர்மராஜா

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

துயரில் இணையும்
பணிப்பாளரும், பணியாளர்களும்.
Mary Construction
Engineer & Contractor
(48890) (45.6) Koolavadi East, Anaicoddai, Jaffna.

## மரண அறிவித்தல்

### திருமதி புஷ்பாதேவி (குட்டி) நற்குணநாதன்



சுன்னாகம், பருத்திக்கலட்டியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி பத்தமேனி, சுவிஸ் ஆகிய இடங்களை வதிவிடமாகக் கொண்ட திருமதி புஷ்பாதேவி (குட்டி) நற்குண நாதன் 04.06.2014 புதன்கிழமை சுவிஸில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பழனித்துரை -மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகளும், நற்குணநாதனின் அன்பு மனைவியும், அரிகரன், அனுஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கௌதமியின் அன்பு மாமியும், நகுலேஸ்வரி, சறோஜினிதேவி, மல்லிகாதேவி, சர்வா ணந்தன் மற்றும் காலஞ்சென்ற சத்தியதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பஞ்சாட்சரம், சிவஞானம், சுப்பிரமணியம், விஜிதா, தேவநாதன், சுபாஷினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், றெஜீனா, சிவஞானம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், பவளம்மா, காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை, பொன்னம்பலம், கனகம்மா, நல்லம்மா, இராசம்மா, தனலக்ஷிமி ஆகியோரின் பெறாமகளும், தனேஸ்வரி காலஞ்சென்றவர்களான ரோகினியம்மா, ராஜேஸ்வரி, நாகராஜா, சுப்ரமணியம் ஆகியோரின் மருமகளும், லட்சிய பாலன், மயூரபாலன், பானுரேகன், ஜெயராம், தனுஜா, துஷிஜா, கனுஷியா, கௌசிஜா, மதிவண்ணன், சஞ்சயன், ஆர்த்திகா, நிவேகா, சந்துரு, காருஜன், மாருஜா ஆகியோரின் சிறியதாயாரும், கீர்த்தனா, தர்சனா, யாதவன், சுஜீவா, ஜீவனா, தச்சரூபி, கல்யாணி, சாந்தகுமார், கிரிகரன், கேதீஸ்வரன், பிரபாகரன், ஸ்ரீதுர்க்கானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கபிஷன், கர்ணிகா, ஜனனிகன், தர்ஷிகன், சயந்தவி, கேஷிகன், விபூஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2014) வியாழக்கிழமை மு.ப. 11.00-2.00 பி.ப மணியளவில் சுவிஸில் Burgdorp Oberburg இல் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
0041 796 599 187 கணவர் (சுவிஸ்)
021 224 0580 குடும்பத்தினர் (சுன்னாகம்) (48843)(7.6)

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து நடராஜா



யாழ்.கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Krefeld ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்ரர் மோசஸ் தம்பிமுத்து நடராஜா அவர்கள் 04.06.2014 புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-தில்லைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், அருளையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஸ்ணானந்ததேவி அவர்களின் அன்புக் கணவரும், சசிகரனின் பாசமிகு தந்தையும், கார்த் திகாவின் அன்பு மாமனாரும், தங்கராணி (இலங்கை), அரியராணி (மணி-ஜேர்மனி), நவரத்தினராசா (ஜேர்மனி), நேசராணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு (கிராமசேவகர்), கண்மணி, தையல்நாயகி, ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மருமகனும்,நளாயினி (இலங்கை), சிவமலர் (இலங்கை),கவிதா (இலங்கை) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், கௌரிதாசன் பிரியதர்சினி (ஜேர்மனி), காலஞ்சென்ற கௌரிமாலா மற்றும் கௌரிதாசினி சிவானந்தன் (சுவிஸ்), கௌரீபன் றோஜி(ஜேர்மனி), கௌதமன் கோமதி(இலங்கை), செந்தூரன் (ஜேர்மனி), ஜீவந்தி (ஜேர்மனி), கஜன்(கனடா), சிந்துஜா(இலங்கை), சுதன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும்,நவரத்தினராசா(இலங்கை), விவேகானந்தன் (ஜேர்மனி), யசோதா(ஜேர்மனி), தனபாலசிங்கம்(இலங்கை), அழகானந்ததேவி (வவா- இலங்கை), யோகானந்ததேவி(தேவி-இலங்கை), இந்திராதேவி(இந்திரா- லண்டன்), கந்தசாமி (பிரான்ஸ்), கிருஸ்ணசாமி (இலங்கை), குணராஜசிங்கம்(இலங்கை), ஆகியோரின் அன்பு மைத்துனரும், ராஜகிளியன், கந்தசாமி, தயாபரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலரும், காலஞ்சென்ற மகேஸ்வரன் (ஜேர்மனி), சபேஸ்வரன் (கனடா), சுதேஸ்வரன் (கனடா), ரவீஸ்வரன்(கனடா), மகிந்தினி(கனடா), சுகந்தினி (லண்டன்), ரவிந்தினி (லண்டன்), காலஞ்சென்ற லோகாம்பிகை, லலிதாம்பிகை (லண்டன்), மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அத்தானும்,தபோதரன்(தபோ-ஜேர்மனி), மயூரன்(ஜேர்மனி), தர்சினி (ஜேர்மனி), விந்துஜன் (இலங்கை), தனுசா(இலங்கை) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும்,வினித்(ஜேர்மனி), துசிபா(ஜேர்மனி), சாரங்கன் (சுவிஸ்), சாருஷன் (சுவிஸ்), வினோஜா(இலங்கை), சீருஷன்(இலங்கை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (12.06.2014)வியாழக்கிழமை Trauerhalle Friedhof Fischeln, Kölner Straße 730, 47807, Fischeln, Krefeld, Germany இல் நடைபெறும்.

குறிப்பு: 12.06.2014 எமதில்லத்தில் அன்னாரின் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.


தகவல்: ந.அருளையா குடும்பத்தினர். (மாமன்)

கைதடி [illegible], கைதடி.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் தர்மராஜா

## (பெற்றா அண்ணை)



சரவணையைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தர்மராஜா 04.06.2014 புதன்கிழமை சுவிஸில் காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், வாழைத் தோட்டம் நவாலி வடக்கைச் சேர்ந்த கந்தையா- இராசமுத்து தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவறூபன் (றூபன்- ஸ்ரீராம் ஒயில் மாட்), மதுசூதனன் (மதன்- பிரான்ஸ்), மதுரா (தொழில் நுட்ப உத்தியோகத்தர், யாழ் மாநகர சபை), விஸ்ணுவர்த்தன் (Ram Builders) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுஷா, கேதீஸ்வரன் (Commercial Credit Jaffna Branch) ஆகியோரின் பாசமிகு மாமனும், பிருந் தாபன், அஷ்விதா, கௌசிகா ஆகி யோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2014) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12 மணிக்கு நவாலி ஆரியம் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

**தகவல்:**
**சிவறூபன் (றூபன்-மகன்)**
**(ஸ்ரீராம் ஒயில் மாட்)**
**077675 8760**

**"சிறிரங்கம்",**
**நவாலி வடக்கு, மானிப்பாய்.**

(48845)(10.6)

## மகா கும்பாபிஷேகம்

தென்மராட்சி, ஜூன் 11

தனங்கிளப்பு வீதி, கேரதீவில் அமைந்துள்ள ஐயனார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன் கிழமை காலை 6.15 மணி முதல் 7.15 மணிவரை இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதம குருவாக இருந்து சிவஸ்ரீ க.வீரபத்திரக் குருக்கள் கிரியைகளை நிறைவேற்றி வைப்பார். (க)

◆◆◆

காரைநகர், ஜூன் 11

காரைநகர் சத்திரந்தை ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை முற்பகல் 10.27 மணிமுதல் 11.27 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயம் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் முற்று முழுதாகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வி. ஈஸ்வரக்குருக்கள் தலைமை தாங்கி மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க உள்ளார். (க-250)

## புதிதாக நியமித்த கிராம அலுவலர்கள் 10 பேருக்கு பயிற்சி

வடமராட்சி, ஜூன் 11

புதிதாக நியமனம் பெற்ற கிராம சேவை அலுவலர்கள் பத்துப் பேருக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடந்த சில மாதங்களாகப் பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சியை முடித்துக் கொண்ட 10 பேரும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வெற்றிடமாக உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் கிராம சேவை அலுவலர்களாக நியமிக்கப்படவுள்ளனர். (வ-173)

# மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நல்லூரில்

யாழ்ப்பாணம் ஜூலை 11

நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நினைவு விழாவை முன்னிட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விளையாட்டுப் போட்டிநிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போட்டி நிகழ்வில் தொடராக எதிர்வரும் சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியும்

ஞாயிறு காலை 7 மணிக்கு யாழ்.மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# ஆள்களற்ற வீட்டில் திருட முயன்றவர் கைது

தென்மராட்சி, ஜூன் 11

ஆள்களில்லாத வீட்டினுள் பட்டப்பகலில் புகுந்து 66 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றைத் திருடிய நபரொருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பகல் நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டப் பகுதியில் இந்தத் திருட்டு இடம்பெற்றது.

திருட்டுத் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

குறித்த நபரை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

# 50,000 அபராதம்


வடமராட்சி, ஜூன் 11

குடத்தனைப் பகுதியில் சட்ட விரோதமாக மணலை ஏற்றிக் கொண்டு வந்த கனரக வாகனம் ஒன்றின் உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையின்போது குடத்தனைப் பகுதியில் இருந்து சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்த கனரக வாகனம் ஒன்று சிக்கியது.

இது தொடர்பாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மணலைப் பறிமுதல் செய்த நீதிவான் கனரக வாகனக்காரருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ-173)

# மாணவருக்கு சைக்கிள்கள்



கோப்பாய் பகுதியில் பெற்றோரை இழந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு சர்வதேச லயன்ஸ் கழக ஆளுநர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவின் முயற்சியால் ஆஸ்திரேலியாவில் வதியும் எஸ்.கணேசலிங்கம் சைக்கிள்களை உதவியாக வழங்கினார். மாணவி ஒருவருக்கு கணேசலிங்கம் சைக்கிள் வழங்குவதையும் லயன் வை.தியாகராசா மற்றும் லயன்ஸ் கழகத்தினரையும் படத்தில் காணலாம். (வ-7)

# தென்மராட்சி பிரதேச மட்ட கலாசார போட்டியில் வெற்றியீட்டியோர்

தென்மராட்சி, ஜூன் 11

தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட இந்த வருடத்துக்கான பிரதேச மட்ட இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த போட்டிகளாக தமிழ், ஆங்கில மொழிகளில் கவிதை பாடுவது, கையெழுத்துப் போட்டி, கட்டுரை கவிதை (தமிழ்), கவிதை (ஆங்கிலம்), சிறுகதை சிறுவர் கதையாக்கம், பாடலாக்கம், நாட்டார் கலை கற்றல், இலக்கிய விவரணம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:

பாலர் பிரிவு

**கவிதை பாடும் போட்டி**

ச.கஜானன், ச.சங்கீதா- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. சி.வனோஜா- சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட.

**கையெழுத்துப் போட்டி (தமிழ்)**

மா.தமிழந்தி, ஜெ.சம்ஷிக்கா, இ.டிலக்ஸன்-சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

**கனிஷ்ட பிரிவு கட்டுரை**

பா.கௌசிகா, த.லதிசனா, கு.கம்சிகா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**கவிதை (தமிழ்)**

நா.அருண், கு.கம்சிகா, இ.அனுசூயா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அபிலா-மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாட.

**கவிதை (ஆங்கிலம்)**

ச.நிலோஷிகா, சி.சிவரம்யா, அ.மேனகா-சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**கவிதை பாடும் போட்டி (தமிழ்)**

கு.கஜனி, அ.சாம்பவி, பா.கௌசிகா-சாவகச்சேரி இந்து.

**கவிதை பாடும் போட்டி (ஆங்கிலம்)**

ம.கீதாஞ்சலி, கௌசிகா- சாவகச்சேரி இந்து.

**சிரேஷ்ட பிரிவு கட்டுரை**

ப.திலக்ஸன்-நாவற்குழி ம.வி., இ.இராஜப்பிர சாந்தன்- மீசாலை வீரசிங்கம் ம.க., வி.சோபிகா-நாவற்குழி ம.வி.

**கவிதை**

ச.வர்ணிகா-மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாட., ஞா.ஞானராஜ்- மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., நா.ஜனனி, ம.சோனந்த்-சாவகச்சேரி இந்து.

திறந்த பிரிவு

**கவிதை (தமிழ்)**

ந.பிருந்தாவனிதை-கண்டிவீதி சாவகச்சேரி, ந.ரஞ்சனா- நுணாவில் மேற்கு, ச.அகிலன்-கல்வயல்.

**கவிதை(ஆங்கிலம்)**

ந.சஞ்சேயன்-சாவகச்சேரி, திருமதி ச.உருத்திராதேவி- டச்சு வீதி சாவகச்சேரி.

**சிறுகதை**

ந.ரஞ்சனா-நுணாவில் மேற்கு, ந.பிருந்தாவனிதை- சாவகச்சேரி, ஜெ.சோபனா- நாவற்குழி தெற்கு.

**சிறுவர் கதையாக்கல் (தமிழ்)**

ந.பிருந்தாவனிதை, ந.லோசனா வனிதை, ந.சஞ்சேயன்- சாவகச்சேரி.

**சிறுவர் கதையாக்கம் (ஆங்கிலம்)**

திருமதி ச.உருத்திராதேவி- டச்சுவீதி சாவகச்சேரி.

**பாடலாக்கம் (தமிழ்)**

பதி.லக்ஸன்-நாவற்குழி கிழக்கு, ந.சஞ்சேயன்-கண்டி வீதி சாவகச்சேரி, த.சிந்துஜா- மட்டுவில் கிழக்கு.

**பாடலாக்கம் (ஆங்கிலம்)**

மா.விவேகானந்தன்-டச்சுவீதி சாவகச்சேரி.

**நாட்டார் கலை கற்றல்**

ந.பிருந்தாவனிதை, கண்டி வீதி, சாவகச்சேரி.

**இலக்கிய விவரணம்**

ச.அகிலன்- கல்வயல், ந.பருந்தாவனிதை- கண்டி வீதி, சாவகச்சேரி, ந.லோசன வனிதை- கண்டி வீதி, சாவகச்சேரி. (வ-9)

# நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் 175 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு "The Torch Bearer" என்னும் நூல் வெளியீடு இன்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் தலைமையில் பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நூலை வெளியிட்டு வைக்க தொழிலதிபர் ஈ.எஸ். பி. நகரத்தினம் முதற் பிரதியை பெற்றுக் கொள்வார். (க)

## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் முதல்வர்
உயர்திரு சி.க. எழில்வேந்தன்
(B.A(Hons,)Dip.in Ed.,M.Ed.,SLPS-I,SLEAS - III)
அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை III பெற்றதையிட்டு அவரை மனதார பாராட்டி வாழ்த்துவதோடு, அவரின் சேவை மேன்மேலும் உயர்வடையவும், எதிர்காலத்தில் மேன்மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்றுச் சிறப்படையவும், எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.



கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
(48850)(5.6)

## NSB மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.04.2013 இல் அடகு வைத்து 31.05.2014 வரையிலும் மீட்கப்படாத நகைகள் 21.06.2014 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அந்தந்தக் கிளைகளில் நடைபெறும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

கிளை விவரம்:

| இல. | கிளை |
|---|---|
| 01 | யாழ்ப்பாணம் |
| 02 | பருத்தித்துறை |
| 03 | வவுனியா |
| 04 | மானிப்பாய் |
| 05 | திருநெல்வேலி |
| 06 | சங்கானை |

இந்த ஏல விற்பனையை இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

பிராந்திய முகாமையாளர் (வடக்கு) (48900)
தேசிய சேமிப்பு வங்கி (7.6)

## வீடு வாடகைக்கு

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 034 1356 (48847) (12.3.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி
பிறேமலதா பற்றிக் குணசீலன்




கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 29.05.2014 அன்று இடம்பெற்ற திறந்த பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் எமது பாடசாலை ஆசிரியை பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றதைப் பாராட்டி மேலும் சிறப்புக்களைப் பெற வாழ்த்துகின்றோம்.

அதிபர்
நல்லுறவு மன்றம்,
யா/நவாலி மகா வித்தியாலயம்
(48846)(7.6)

## இரவு வணிக நிலைய பாதுகாப்பு சேவைக்கான விண்ணப்பம்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் இரவு வணிக பாதுகாப்பு சேவைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

விண்ணப்பிப்போர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 12.06.2014, 13.06.2014, 14.06.2014 ஆகிய திகதிகளில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை மன்றப் பணியகத்திற்கு வருகை தரவும்.

(சி/7706) (7.6)

செயலாளர்,
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### விசாரணைக்கு

என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்றைய அமர்வின் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளித்து உரையாற்றிய ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, **ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவினரின் விரிவான விசாரணைகளுக்கு தாம் ஒத்துழைப்பு வழங்க போவதில்லையென குறிப்பிட்டுள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் முற்றாக அழிக்கப்பட்டிருந்தாலும், சர்வதேச ரீதியில் அந்த அமைப்பின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், முழுமையான விசாரணை எனத் தெரிவிக்கப்படும் விடயத்திற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்காது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை அரசு தொடர்ந்தும் அர்ப் பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்றும், இலங்கை மக்களின் நலன்கள் தொடர்பில் இதய சுத்தியுடன் ஆர்வம் கொண்டுள்ள நாடுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுடன் பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றி வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

### கிடைத்த

ளது. இந்தக் குழுவினருக்கு பல நிபுணர்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்டவர்களும் உதவி வழங்குவதற்கு தயாராக உள்ளனர்.

நம்பகமான உண்மையினை கண்டறியும் செய்முறையுடன் ஒத்துழைக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை அரசை கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் அதில் குறிப்பிட்டார்.

இதேவேளை– சில நாடுகளின் மனித உரிமை பிரச்சினைகளை சுட்டிக்காட்டியதால் தான் முகங்கொடுத்த விமர்சனங்களை பற்றி தனது உரையில் குறிப்பிட்ட நவநீதம்பிள்ளை, பூகோள விழுமியங்களின் கொள்கை ரீதியான அமைப்பை பாதுகாப்பதால் ஒவ்வொரு நாட்டுக்கும் முக்கிய நன்மை உண்டாகுமென தெரிவித்தார். கடந்த ஆறு வருடங்களில் தனக்கு அறிவூட்டும் முழுமையான அனுபவங்கள் கிடைத்திருக்கின்றன என்று கூறிய அவர் மனித உரிமைசபைவழங்கிய வாய்ப்புகளுக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

ஒரு மாற்றத்துக்கு தான் உதவியதாகவும், பலமான ஒரு பரப்புரையாளராக இருந்ததுடன், பயம் அல்லது பாரபட்சமின்றி பேசிய ஒருவராக தான் செயற்பட்டதாக நம்புகின்றேன் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-5)

### விசாரணைக் குழு

மன்றத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடந்த சந்திப்பின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

அதன்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விளக்கமளித்துள்ளார். அதையடுத்து இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தால் தீர்மானம் எடுக்க முடியும் என்ற யோசனை ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டது என்று தெரியவருகின்றது.

அதேவேளை, தேசிய சுதந்திர முன்னணிமற்றும்ஜாதிகஹெல உறுமய ஆகிய கட்சிகள் சமர்ப்பித்த யோசனைகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஐவர் கொண்டகுழுவொன்றைநியமிப்பது என்றும் கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### ஐ.நா.விசாரணைக்கு

இதுகுறித்துத் தனது உரையில் குறிப்பிட்ட ஜெனிவாவுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராகப் பொறுப்பேற்ற ஹெய்த் ஹாப்பர், தமது அலுவலகத்தின் ஊடாக, இலங்கை குறித்த விசாரணைக் குழுவை ஒழுங்கமைத்ததற்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு நன்றி தெரிவித்ததுடன், இலங்கையில் நீதி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பனவற்றை ஊக்குவிக்க, விசாரணைச் சமிக்ஞைகள் முக்கியமானவை என்றும் குறிப்பிட்டார்.

விசாரணையாளர்களை அனுமதித்தும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்குத் தகவல்களை வழங்குவோர் மீதான பதிலடிகளைத் தவிர்த்தும் விசாரணைக்கு இலங்கை அரசு முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். பிரிட்டன் தூதுவரும் இவ்வாறான கருத்தையே பிரதிபலித்தார்.

அதுவேளை, நவநீதம்பிள்ளை ஆற்றிய தலைமையுரையில், ஏற்கனவே வெளியான வரைவு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது போலவே, விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொண்டிருந்தார். (ஐ-5)

### பிரச்சினையை

அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

"எமது கட்சியின் கருத்தாக இல்லாமல் எனது கருத்தாக தெரிவுக்குழு விடயத்தில் சில வற்றை செல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சென்றால்அது எமக்குநாமே, பிரச்சினையை உருவாக்கி கொள்வதாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் இதுவரை காலமும் பல விதமான குழுக்கள் தமிழர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.

சந்திரிகா காலத்தில் அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டது. அந்த வரைவை முன்வையுங்கள். திஸ்ஸவிதாரண குழு ஒரு அறிக்கையை வழங்கியுள்ளது. அதனையும் முன்வையுங்கள். இன்னும் வேறு வேறு அறிக்கைகள் இந்த பிரச்சினைகள் சம்பந்தமாக தரப்பட்டுள்ளன அவற்றையெல்லாம் முன்வைத்து அதனை மையமாகக் கொண்டு அதனை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்ற தெரிவுக்குழு விவாதிப்பதாக இருந்தால் எமது தமிழ் மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று நம்புகின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் பொது நன்மை கருதும் அரசியல்வாதிகளுக்கும் சுய நன்மை கருதும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் பகையும் முரண்பாடுகளும் எழுவதை நாங்கள் பார்க்கக் கூடியதாக உள்ளது. பொது வாழ்க்கையில் இருந்து கொண்டு பொது மக்களின் வளங்களைச் சிலர் சூறையாடுவது தெரிகின்றது.

சூறையாட எத்தனிப்பதும் புரிகின்றது. சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் சேராது என்பார்கள். எனவே அவ்வாறு சுயநலம் கருதி வாழ்பவர்களுடன் மற்றையவர்கள் சேர்ந்து வாழ்வது கடினமே.

ஆனால் பொதுவாக சுயநலத்துடன் மக்கள் அபிலாசைகளை உதாசீனம் செய்து சுய நலத்துடன் வாழும் மக்கள் தலைவர்களை விரைவில் மக்கள் வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள். இதுதான் ஜனநாயகத்தின் சக்தி அதன் வலு. இன்று இந்தியாவில் நடந்துள்ளது. மக்களுக்காக வாழ்கின்றோம் என்று பாசாங்கு செய்து தமக்கென வாழ்ந்த ஒரு கட்சியை மக்கள் எடுத்தெறிந்து விட்டார்கள்.

வடமாகாணத்துக்குரிய அதிகாரங்களை முடக்க மத்திய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தாலும் எது சரியோ அதைச் செய்ய நாம் பின்நிற்க மாட்டோம். பதவிகளுக்கு நாங்கள் ஆளணி சேர்க்கும் போது அதற்கென ஒரு படிமுறை உள்ளது. அதன்படி உரியவாறு வேலைக்கு ஆள் சேர்க்கப்பட்டால் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் வராது. சில நேரங்களில் அவசரத்தின் நிமித்தம் நாம் ஆள் சேர்க்கின்றோம். தேவைக்கு ஏற்ப அது நடைபெறுகிறது. குறித்த அவசரம் முடிந்த பின் அவர்களின் பதவி நிலைபெற வேண்டுமா? இல்லையா? நிலைபெற வேண்டுமானால் சட்டப்படி என்ன செய்யவேண்டும் என்று நாம் சிந்திப்பதில்லை. காலம் கடந்த பின் பல இடர்களையும் தாமதங்களையும் இப்பேர்ப்பட்ட தற்காலிக அவசர ஆளணியினர் எதிர்நோக்குகின்றார்கள்."– என்று தெரிவித்துள்ளார். (ஐ-5-4)

### மண்டைதீவில்

10 ஆம் திகதி குருநகர் பகுதியில் இருந்து மண்டைதீவுக்கு கடற்றொழிலுக்குச் சென்ற போது 31 கடற்றொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் நினைவாக, நேற்று காலை 6 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து குருநகர் சனசமூக நிலைய முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நினைவுத் தூபியில் ஈகைச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர். அதேபோன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், மு. பரஞ்சோதி, மாநகர சபை உறுப்பினர்களான மரியகொறற்றி மேரியம்மா ஆகியோர் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர். (ஐ-5)

### மீளக்

மக்களுக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரித்து அதில் வலி.வடக்கு மக்களை குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வலி.வடக்கு மக்களின் காணிகளை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கையகப்படுத்தியுள்ள இராணுவத்தினர், அந்தக் காணிகளைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அதற்குரிய நடவடிக்கைகளையும் வேகமாக முன்னெடுத்துள்ளனர்.

இந்தநிலையில் வலி.வடக்கு மற்றும் வளலாயிலிருந்து இடம்பெயர்ந்து 24 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டும், தமது சொந்தக் காணிகளிலேயே தம்மைக் குடியேற்ற வேண்டும் என்று கோரியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் எதிர்வரும் 16 ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அச்சுவேலி மத்திய நகர பேருந்து நிலையத்தில் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் காலை 8 மணியிலிருந்து முன்னெடுக்கப்படவுள்ளது. அதில் பல்வேறு தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-5)

### விசாரணை

பதவி வகித்த சில்வியாவுடன், சூடானைச் சேர்ந்த வேறொருவரும் இந்தக் குழுவில் அடங்கலாம் என்று 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஊடகம் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடந்து முடிந்த ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் குற்றங்கள் குறித்து விசாரணை செய்ய குழு ஒன்றை அமைத்துள்ளது. அந்தக் குழு எதிர்வரும் வாரங்களில் தமது விசாரணைகளை முன்னெடுக்க ஆரம்பிக்கவுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ஐ)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் அங்கத்தவரான
திரு. தர்மராஜா விஸ்ணுவர்த்தன்
(Ram Builders)
அவர்களின் தந்தை

**சுப்பிரமணியம் தர்மராஜா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை தேசிய கட்டட நிர்மாணிகள் சங்கம்**
**வடமாகாணம், யாழ்ப்பாணம்.**

(48903) (10)

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறிவித்தல்

### தற்காலிக கடைகள், திருவிழாக்கால உடை தேங்காய் ஏலம்

மேற்படி ஆலய வருடாந்த உயர் திருவிழா 28.06.2014 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 13.07.2014 ஆம் திகதி நிறைவு பெறும். இக்காலத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினால் சுட்டிக் காட்டப்படும் இடங்கள் 21.06.2014 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். உயர்திருவிழாக் காலத்தில் சேரும் உடைதேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் அன்றைய தினத்திலேயே கூறப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம். பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:

01. வியாபாரம் செய்பவர்கள் பிரதேச சபை பொது சுகாதாரப் பிரிவினரின் முறையான அனுமதி பெறப்பட வேண்டும்.
02. குளிர்பான நிலையம் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரம் பெறப்படவேண்டும்.
03. சுகாதாரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
04. ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் அன்றையதினம் ஏலத்தொகையில் 1/3 பங்குத் தொகையைச் செலுத்திப் பற்றுச் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.
05. மிகுதித் தொகையினை பத்தாம் (10)ஆம் திருவிழாவுக்கு இடையில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**அன்னையின் சேவையில் அறங்காவலர் சபையினர்**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.**

(சி/14734) (10)

## மறு அறிவித்தல்

மன்னார், செல்வநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேக நிகழ்வுக்காக 14.04.2014 அன்று விற்பனையாகிய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் மறு அறிவித்தல்.

வெற்றியீட்டிய இலக்கங்கள்

01 பரிசில் - 01490
02 பரிசில் - 10940
03 பரிசில் - 13527

10 ஆறுதல் பரிசில்கள் இலக்கம்

| | |
|---|---|
| 01 - 14921 | 06 - 06080 |
| 02 - 18453 | 07 - 03009 |
| 03 - 03893 | 08 - 07478 |
| 04 - 02758 | 09 - 11733 |
| 05 - 08641 | 10 - 09863 |

இதன் முடிவு திகதி: 14.04.2014 இல் இருந்து 14.07.2014 ஆகும்.

## மூன்றாம் ஆண்டு நினைவு

### இரத்தினம் இதயராசா



| மண் மகிழ | கண் கலங்க |
|---|---|
| 27.06.1983 | 16.05.2011 |

திதி: 11.06.2014
(வைகாசி வளர்பிறை சதுர்த்தசி)

ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
ஆழ்மன நினைவலைகள் ஓயவில்லை
ஆரவாரமான உந்தன் நடைமுறைகள்
ஆணி அடித்தாற் போல் எம் மனதில்
ஆறாத்துயரை எமக்குத் தந்து
ஆண்டவன் காலடி சென்றாயே
ஆறுமோ என்றும் எம் இதயமே!

மானாவளவு,
கரணவாய், கரவெட்டி.

(சி-14737)

குடும்பத்தினர்.

# கட்டார் உலகக் கிண்ண உதைபந்து தொடர்பில் புதிய குற்றச்சாட்டுகள்

2022 ஆம் ஆண்டின் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும் உரிமையை கட்டாருக்கு வழங்கியமை தொடர்பில் மீண்டும் புதிய ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதனால் இப்போட்டிகளை கட்டாரில் நடத்தும் தீர்மானத்தை மீளாய்வு செய்யும் நிர்ப்பந்தத்தைச் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் (பீபா) எதிர்கொண்டு வருகிறது.

இப்போட்டிகளை நடத்தும் உரிமையைப் பெறுவதற்காகக் கட்டார் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளன முன்னாள் த்லைவருமான மொஹமட் பின் ஹம்மாம் 50 லட்சம் டொலர்களை லஞ்சமாக வழங்கியதாக பிரிட்டனின் சண்டே ரைம்ஸ் பத்திரிகை கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தது.

தற்போது ஆசிய வாக்குகளைப் பெறுவதற்காக தனது சொத்துக்களைப் பின் ஹம்மாம் பயன்படுத்தியமைக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தாய்லாந்து உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவர் வொராவி மகுடி கட்டாருக்கு பயணம் செய்தபோது கட்டாருக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான எரிவாயு உடன்படிக்கை தொடர்பான பேச்சுக்குப் பின்னர் ஹம்மாம் இதற்கு ஏற்பாடு செய்ததாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. ஆனால், 2022 ஆம் ஆண்டின் உலக கிண்ணப் போட்டிகள் தொடர்பில் கட்டாருக்கு ஆதரவளிப் பதற்கான வெகுமதியாக அந்த வாயு உடன்படிக்கை ஏற்படுத்தப்படவில்லை என வொராவி மகுடி தெரிவித்துள்ளார்.

அதேவேளை 2010 ஒக்டோபர் மாதம் ரஷ்யாவுக்கும் கட்டாருக்கும் இடையிலான விளையாட்டு உறவுகள் குறித்து கலந்துரையாடுவதற்காக அப்போதைய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் பின் ஹம்மாம அழைப்பு விடுத்திருந்தார் எனவும் பிரிட்டனின் சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையின் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பதிலளித்துள்ள கட்டார் 2022 உயர்குழுவினர், இச்சுற்றுப்போட்டியை நடத்தும் உரிமையை கட்டார் முற்றிலும் தகுதி அடிப்படையிலேயே வென்றது. இதில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளது. பின் ஹம்மாம இவ்விடயத்தில் எவ்வித பங்கையும் வகிக்கவில்லை எனவும் அக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகள் கட்டாரிலிருந்து வேறிடத்துக்கு மாற்றப்பட்டால் பீபாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து கட்டார் அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இச்சுற்றுப்போட்டிகள் தொடர்பாக சுமார் 4000 கோடி டொலர் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கட்டார் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ய)

## சவாலை எதிர்கொள்ள இலங்கை அணி தயார்

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் பந்து வீச்சாளர்களின் சவாலை எதிர்கொள்ள இலங்கைத் துடுப்பாட்ட வீரர்கள் தயார்நிலையில் உள்ளதாக இலங்கை அணியின் ஆலோசகர் கிறிஸ் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

லோட்ஸ் மைதானத்தின் ஆடுகளமே இலங்கை அணி வீரர்களுக்கு சவாலாக அமையும் என கிறிஸ் அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்

இருப்பினும் ஒருநாள் தொடரில் மிகச் சிறப்பான முறையில் தமது திறமையை வெளிப்படுத்தி இலங்கை அணி வீரர்கள் சிறந்த மனநிலையில் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆடுகள்ங்கள் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாகக் காணப்படுமானால் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் மிகச் சிறந்த முறையில் தனது திறமையை வெளிப்படுத்துவார் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஸ்டுவட் புரோட் மற்றும் அண்டர்சன் ஆகியோரைத் தவிர இங்கிலாந்து அணியின் ஏனைய பந்து வீச்சாளர்கள் அனுபவமற்றவர்கள் என கிறிஸ் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டெஸ்ட் தொடரில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டி கணிசமான ஓட்டங்களை இலங்கை அணி பெற்றுக் கொள்ளுமேயானல் இங்கிலாந்து அணிக்கு அது பெரும் சவாலாக அமையும் என கிறிஸ் அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)



கிறிஸ் அடம்ஸ்

## உலகக் கிண்ணத்தில் களமிறங்கும் இங்கிலாந்தின் வீரர்களுக்கு ஐபாட்



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை முன்னிட்டு இங்கிலாந்து வீரர்களுக்கு இலவசமாக ஐ பாட் கொடுக்கப்பட்டுள்ளது. உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை ஆரம்பமாகின்றன. இதையடுத்து எதிர் அணிகளின் வீரர்களை பற்றி அறிய இங்கிலாந்து அணி வீரர்களுக்கு ஐபாட் வழங்கப்பட்டுள்ளது.

இதில் பிற அணி வீரர்களின் விவரங்கள் இடம் பெற்றுள்ளன. அந்த அணி வீரரின் பெயரை கொடுக்கப்பட்டுள்ள ஐ பாட்டில் கிளிக் செய்தால் போதும் அவர் சிறப்பாக ஆடிய ஆட்டத்தின் வீடியோ தொகுப்பு உள்ளிட்ட பல விவரங்களை பார்த்து அறிந்துகொள்ளலாம்.

பிரேசில் நாட்டு தட்பவெப்பம், அதை எதிர்கொள்ளும் வழிமுறைகள் குறித்தும் இதில் விவரமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தை விடவும் பிரேசில் வெப்பம் நிறைந்த பகுதி என்பதால் அதை எதிர்கொள்ள மனதளவில் பல தயார்படுத்தல்களும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் காரணத்தால் பிரேசிலின் வெப்ப நிலையைச் சமாளிக்க அமெரிக்காவின் மியாமி கடற்கரை நகரில் இங்கிலாந்து வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வெப்பத்தில் வீரர்களை வைத்து வாட்டி எடுப்பதால் அதிகப்படியான வியர்வை வெளியேறுகிறது

மேலும் வெப்ப பயிற்சி காரணமாக இங்கிலாந்து வீரர்கள் 2 கிலோ அளவுக்கு உடல் எடையை இழந்துள்ளனர். (ய)


## தந்தைக்கும் மகனுக்கும் விருது

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணிக்கான ... நதுகளை அந்த அணியின் கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது.
டரன் பிராவோ சிறந்த கிரிக்கெட் வீரருக் ... ருதைப் பெற்றுக் கொண்டார். அவரது சகோதரரான டுவைன்
பிராவோ சிறந்த ஒரு நாள் போட்டிக்கா ... ருதையும், சிறந்த டெஸ்ட் போட்டி வீரர் விருதையும் சிவ்நரைன்
சந்தர்போலும் பெற்றுக் கொண்டனர். சிற ... 0/20 போட்டிகளின் வீர்ர் என்ற விருதை சுனில் நரைன் பெற்றுக்
கொண்டார்.

150 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சி ... ந்நரைன் சந்தர்போல் மற்றும் 100 போட்டிகளில் விளையாடியுள்ள
கிறிஸ் கெயில் ஆகியோருக்குச் சிறப்பு விரு ... ள் வழங்கப்பட்டன.
மகளிருக்கான சிறந்த வீராங்கனை விருதை ... டெபனி டெய்லர் பெற்றுக்கொண்டார். இதேவேளை சிவ்நரைன்
சந்தர்போலின் புதல்வர் ரஜிநரைன் சந்தர்போல் 19 வயதுக்குட்பட்ட சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதைப்
பெற்றுக் கொண்டார்.

கிரிக்கெட் விருது ஒன்றைத் தகப்பனும் மகனு ... ஒரே தடவை பெற்ற முதல் சம்பவம் இதுவாகத்தான் இருக்கலாம்
என நம்பப்படுகின்றது. இன்னும் பல ... துகள் உள்ளக கிரிக்கெட் வீரர்களுக்கும் அணிகளுக்கும்
வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த)



சந்தர்போல் - ரஜிநரைன்




வடமாகாண பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற யாழ். மத்திய கல்லூரி.




மூன்றாம் இடத்தைப் பெற்ற மன்னார் சென். லூசியஸ் மகா வித்தியாலயம் அணிகளைப் படத்தில் காணலாம். (து-23-86)

## தாச்சியில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ். மாவட்டதாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணிக்கும் அளவெட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அளவெட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி 9:5 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் மடத்தடி வைகறை விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக 'ஏ' அணி 10:4 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அளவெட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணிக்கும் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி 8:6 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (து-23)

# பெரு விளையாட்டுப் போட்டிகளில் வலிகாமம் வலயம் முன்னிலையில்

வலி. வடக்கு, ஜூன் 11

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை அணிகளுக்கு இடையே இதுவரை நடத்தப்பட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அரை மரதன் ஓட்டப் போட்டிகளின் அடிப்படையில் வலிகாமம் கல்வி வலயம் முன்னிலையில் உள்ளது.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் யாழ். மாவட்டம் பெற்றுக் கொண்டுள்ளது.

வலயங்கள் பெற்றுள்ள புள்ளிகள் வருமாறு:-

வலிகாமம் கல்வி வலயம்-215 புள்ளிகள், வடமராட்சி கல்வி வலயம்-214 புள்ளிகள், யாழ்ப்பாணம் கல்வி வலயம்-198 புள்ளிகள், கிளிநொச்சிக் கல்வி வலயம்-102 புள்ளிகள், தென்மராட்சிக் கல்வி வலயம்-58 புள்ளிகள் முல்லைத்தீவு கல்வி வலயம்-51 புள்ளிகள், வவுனியா வடக்கு கல்வி வலயம்-50 புள்ளிகள், வவனியா தெற்கு கல்வி வலயம்-40 புள்ளிகள், தீவக கல்வி வலயம்-36 புள்ளிகள், மன்னார் கல்வி வலயம்-35 புள்ளிகள், துணுக்காய் கல்வி வலயம்-08 புள்ளிகள். (து-86)

## ஞானமுருகன் நடத்தும் உதைபந்தாட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங்ஸ் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்துநாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (து-23)

## கிண்ணம் வென்றது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம், ஜூன் 11

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120 ஆவது ஆண்டு நிறைவை முன்னீட்டு ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 6பேர் பங்கு பற்றும் 5பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்த வரோதயக்கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி அணியினர் 5 பந்துப் பரி மாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனலக்ஸ்சன் 41 ஓட்டங்களையும் டினேஸ் 12 ஓட்டங்களையும், தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தவரோத யக்கல்லூரி அணி சார்பில் விதுஷன், சுஜீதரன் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

68 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி அணி 4 இலக்கை இழந்து 45 ஓட்டங் களை மட்டும் பெற்றது. இதில் சயந்தன், விதுஷன் ஆகியோர் 10 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் ஜனலக்சன், டிரேன் ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (து-23)

## வெற்றி பெற்ற அணிகள்



யாழ்ப்பாணம், ஜூன் 11

மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற காலிறுதியாட்டம், அரையிறுதியாட்டம் ஆகியவற்றில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

முதலில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

3 செற்களைக் கொண்ட காலிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி புத்தூர்கலைமதிவிளையாட்டுஅணியுடன் மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (து-23)


புலமைச்சுடர் நடாத்தும்

இலவசக் கருத்தரங்கு - தரம் 5

வடமராட்சிப் பிரதேசத்தில்

இடம் : யாழ் / பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்

திகதி : 15 / 06 / 2014 (ஞாயிற்றுக்கிழமை), காலை 08.30 மணி

வளவாளர்கள் : என். எஸ். தீபன் (வவுனியா), ரீ. திலீப்குமார் (கொழும்பு)

இறுதியாக வெளிவந்த ஐந்து புலமைச் சுடர் வினா பதிவுகளை மேற்கொள்ளுநர் இடத்திற்கு நேரடியாக எடுத்துவரவேண்டும்.

அனுசரணை : யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகம்

முற்பதிவு செய்பவர்கள் மட்டும் பங்குபற்ற முடியும்.
பதிவுகளுக்கு : உதயன் பணிமனை நெல்லியடி.
தொ. பே - 021 5673377



கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் முத்துராசா ஜென்சிலா அவர்களின் அன்புத் தந்தை

செய்யது முஹம்மத் முத்துராசா

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(48906) (10)



மரண அறிவித்தல்



திருமதி ருசாந்தி

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் குருநகரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ருசாந்தி நேற்றுமுன்தினம் (09.06.2014) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தேவசகாயம் துரைமணி - மலர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - திரேசம்மாவின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நிறோ, குமார் மற்றும் லக்ஷ்மன் உதயகுமார் (சூட்டி - பிரான்ஸ்), வீஜிதா, அசோக் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரீனா (பிரான்ஸ்), றமேஷ் ஆகியோரின் மைத்துனியும், கிதுஷன், யதுஷா ஆகியோரின் சிறியதாயும், பிளஷியாவின் (பிரான்ஸ்) மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (11.06.2014) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புதுக்குடியிருப்பு புனித குசையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தினர் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை மின்னொளியில் நடத்தவுள்ளனர்.
இதற்கான விண்ணப்பங்கள் கரப்பந்தாட்ட அணிகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# கராத்தேயில் தங்கம் வென்றார் செந்தூரன்

வடமராட்சி, ஜூன் 11
தெற்காசிய சர்வதேச கராத்தே சங்கத்தால் நடத்தப்பட்ட கராத்தே போட்டியில் 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் பருத்தித்துறை தற்காப்பு கலையக கராத்தே வீரன் எஸ்.செந்தூரன் சம்பியனாகி தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.
கொழும்பு சென்.தோமஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் திறந்த முறையில் இந்தப் போட்டி இடம்பெற்றது.
இவர் இலங்கை சோட்டோகான் கராத்தே சங்கம் பேராதனை பல்கலைக்கழக விளையாட்டரங்கில் நடத்திய கடந்த வருடத்துக்கான ஆண் களுக்கான திறந்த போட்டியிலும் , சோட்டோகான் கராத்தே சம்மேளனம் கொழும்பு சுகத தாச விளையாட்டரங்கில் நடத்திய ஆண்களுக்கான 21 வயதுக் குட்பட்ட போட்டியிலும் சம்பியனாகி தங்கப் பதக்கங்களைத் தனதாக்கிக் கொண்டவர் ஒருவராவார். (த-173)



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ். மாவட்டதாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளியிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை இரவு 7மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 11 -
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவகுரு நாதர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம் ஜுன்.11
யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 4 மணிக்கு இடம் பெறும் 17வயது பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.
மாலை 6மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.
யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மாலை 5 மணிக்கு இடம் பெறும்15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.
உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் 4.30 மணிக்கு இடம் பெறும் 17 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணி மோதவுள்ளது.
15வயதுப் பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி (பச்சை) அணி மோதவுள்ளது
உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3.30 மணிக்குஇடம் பெறும் ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணி மோதவுள்ளது.
கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி (வெள்ளை) அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 11
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.சேவியர் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து நாகதீபம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில்,அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கட்டையடம்பன் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# பருத்தித்துறை ஐக்கியத்தை வென்றது வல்லை ஆதிசக்தி

கரணவாய், ஜூன் 11
செந்தில்குமரனின் அதிரடியான கோல் போடுகை மூலம் வல்லை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 6:1 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் வல்லை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.
ஆட்டத்தில் ஆரம்பம் முதல் இறுதிவரை ஆதிக்கம் செலுத்திய ஆதிசக்தி அணியினர் போட்டி ஆரம்பமாகி 3 ஆவது நிமிடத்தில் செந்தில் குமரனின் உதவியுடன் முதலாவது கோலைப் பெற்றனர்.
தொடர்ந்து அபாரமாக விளையாடிய செந்தில் குமரன் 15 ஆவது நிமிடத்தில் மேலும் ஒருகோலைப் போட்டு அசத்த 2:0 என்ற கோல் அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.
இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமானதும் ஆதிசக்தியின் கௌரிகாந் 2 கோல்களையும் செந்தில் குமரன் ஒரு கோலையும், செல்வராஜ் ஒரு கோலையும்போட்டனர்.
இருந்தபோதும் ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்கள் இருக்கும்போது பருத்தித்துறை. ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர் சீலன் ஒரு கோலைப் போட 6:1 என்ற கோல் அடிப் படையில் வென்று ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
இதேவேளை அதற்கு முன்னர் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் 'மைக்கல்' விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் அடிப்படையில் வல்லை விளையாட்டுக்கழக 'பி' அணியைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (த-108)

# யாழ்.மாவட்ட அணி வென்றது



வெற்றிபெற்ற அணியினர்

யாழ்ப்பாணம் ஜூன் 11 ·
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்று போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
கிளிநொச்சி உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி * மோதிக் கொண்டது.
அதில் யாழ். மாவட்ட அணி 60:8 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ற-23-86)

# வென்றது கலைமதி

யாழ்ப்பாணம், ஜூன் 11
மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளி கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இணுவில் அமராவதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



# பாடுமீன்,அண்ணாஸ்ரார், றோயல் உதைபந்தாட்டத்தில் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவகுரு நாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணிக்கும் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி 8:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.
அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் நவசக்தி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 6 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன
அதில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 4:3என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கலைவாணி விளையாட்டுக்கழக அணிக்கும் றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் றோயல் விளையாட்டுக்கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

11 JUN 2014



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி பிரேஸிலில் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், யானைகளுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியொன்று தாய்லாந்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அயுத்தயா நகரில் நடைபெற்ற இப்போட்டிகளில் பல நாடுகளை குறிக்கும் வகையில் தேசிய கொடிகள் வரையப்பட்ட யானைகள் பங்குபற்றின. (கு)

# ஷேவாக்கின் பலம் எது ?



ஷேவாக் விளையாடும் விதம் அவரது மனதைரியத்தை மிகப் பெரிய அளவில் பிரதிபலிக்கிறது என்று ராகுல் டிராவிட் கூறியுள்ளார்.
இந்திய அணியில் அதிரடி ஆரம்ப ஆட்டக்காரர் என்றாலே அந்தப் பெருமை ஷேவாக்கை தான் போய் சேரும். யார் என்ன சொன்னாலும் சரி நான் எனது பாணியில் தான் விளையாடுவேன் என்றவாறு அதிரடி காட்டுவார். அதே சமயம் இக்கட்டான நிலைமையில் அதிரடி காட்ட நினைத்து ஆட்டமிழந்து அனைவரின் விமர்சனத்துக்கும் உள்ளாவார்.
இது பற்றி இந்திய அணியின் முன்னாள் வீரர் டிராவிட் கூறுகையில்; சேவாக் தனது உடற்தகுதியில் ஏற்றங்களையும், தாழ்வுகளையும் கொண்டிருந்தாலும் அவர் தனது பாணி ஆட்டத்தை மாற்றிக் கொள்ள மாட்டார். இதனைத் தொடர்ந்து செயற்படுத்த ஒருவிதமான மனத் தைரியம் வேண்டும்.
விளையாடும் போது மட்டுமல்ல ஆட்டமிழந்து வரும்போது ஓய்வு அறையில் துடுப்பு, கையுறை அனைத்தையும் கழற்றி விட்டுச் சிறிது நேரத்துக்கெல்லாம் ஜோக் அடித்துக் கொண்டு சகஜ நிலைக்குத் திரும்பி விடுவார்.
ஆட்டமிழப்பு சிறிது நேரத்துக்கு அவருக்கு வருத்தமளிக்கவே செய்திருக்கும். ஆனால் அவர் அதனை பெரிதுபடுத்தமாட்டார்.
மேலும், அவர் பாணியில் ஆடுவதற்கும் அதற்கே உரிய பொறுமை வேண்டும். அதனால்தான் அவரால் சதங்களை எடுக்க முடிகிறது என்று கூறியுள்ளார். (கு)

# சோதனையில் சேனநாயக்க



இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் சேனநாயக்கவின் பந்து வீச்சில் சந்தேகம் இருப்பதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து அவருக்குச் சோதனை நடத்தப்படுகிறது.
இங்கிலாந்துக்கெதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் இவரது பந்துவீச்சு முறை குறித்து நடுவர்களான எராஸ்மஸ், இயான் கோல்ட் சந்தேகப்பட்டனர்.
இதைத் தொடர்ந்து சேனநாயக்கவுக்கு, கார்டிப் மெட்ரோ பொலிற்றன் பல்கலைக்கழகத்தில் பயோ மெக்கானிக்கல் சோதனை நடத்தப்படவுள்ளது. (கு)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்
பிரான்ஸ் செல்வோர் அனுமதிகளுக்கு முந்துங்கள் 14.6.2014 11am
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

**மிக குறைந்த விமான கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –16500 | RTN |
| கொழும்பு – சென்னை | –21900 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – பெங்களூர் | – 27600 | RTN |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சிங்கப்பூர் | –30200 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு – லண்டன் | –44800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – கனடா | –105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
**Nation Popular Travels & Tours**
#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
**0214 920 920**
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

**Chartered Orientation Programme @ Spectra Skills**
காலம் : 12th June 2014
இடம் : Spectra skills hall
நேரம் : முற்பகல் 10 மணி
* A/L 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் அனைவரும் இந்த இலவச அறிமுகக் கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.
* ஏற்கனவே Chartered கற்கைநெறியை பயிலுபவர்களும் பங்குபற்றலாம்.
தொடர்புகளுக்கு: **Spectra skills**
19, Stanley Road, Jaffna.
Tel: 021 222 1422 / 1423, 0775 748095
(48902)(10)

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
veta
Spoken English
யாழ்ப்பாணம் Sat, Sun 8.30 a.m.
நெல்லியடி Sat, Sun 2.00 p.m.
சாவகச்சேரி Sat, Sun 3.30 p.m.
சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
City & Guilds A1, A2, B1, B2 (ESOL) Diploma International English for Speakers of other Languages
சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.
IELTS (Duration: 50 hrs with 5 mock exams)
- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
- Depend on individual needs, the student can access other English Modules FREELY.
விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்.
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி. Tel.:021-226 2470
சாவகச்சேரி கண்டி வீதி. (HNB அருகில்) Tel.:021-227 0775
கன்னாகம் Tel.:021-224 1970

**தேவை**
150 Ltr, 200 Ltr, 250 Ltr, 300 Ltr கொண்ட 3 phase 3hp மோட்டர் பொருத்தப்பட்ட நல்ல நிலையில் உள்ள எயர் கொம்பிரசர் (Air Compressure) உடன் தேவை.
தொடர்பு: 071 617 2172
(C/14736) (10)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES** BCHS
அனைத்துக் கற்கை நெறிகளும் விசேட கட்டணக்கழிவில் 25%
**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months
**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- UK. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
இச்சலுகை June 15 முன் பதிபவர்களுக்கு மட்டுமே
Batch1 11-06-2014 @08.00am ★ Batch2 12-06-2014 @08.00am ★ Batch3 13-06-2014 @04.00pm ★ Batch4 14-06-2014 @11.00am
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை A

உதயன் ஜூன் 11 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

நீ புகழுடன் இருக்க விரும்பினால் படிப்பதற்குத் தகுந்த புத்தகங்களை எழுது. அல்லது உன்னைப் பற்றி எழுதுவதற்குத் தகுந்தபடி உன் செயல்களை மாற்றிக்கொள்.
-ஃபிராங்க்ளின்

# ஆசையும் அளவோடு தான்

ராஜராஜன்



ஆசை இல்லாத மனிதர்கள் இல்லையென்றே கூற முடியும். ஒவ்வொரு மனிதர்களிடத்திலும் அவர்களின் இயல்புக்கு ஏற்ற வகையில் ஆசை துளிர் விட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஞானிகள் கூட ஆசைப்படாதே என்று கூறவில்லை. ஆசைப்படு அடைந்துவிடு என்றுதான் கூறுகின்றார்கள். ஆகவே மனிதர்கள் ஆசை கொள்வதில் தவறில்லை. ஆனால் பேராசை தான் கூடாது.

ஆனால் இன்றைய மனிதர்கள் தமது சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் பேராசை கொள்வதுதான் சிக்கல்களுக்கு வழிவகுக்கின்றது. முயற்சி எதுவும் இல்லாத ஒருவன் பெரும் செல்வந்தனாக மாறுவதற்கு ஆசை கொள்வதும், சிறிது கூட அழகில்லாத, அவலட்சணமான உருவத்தைக் கொண்ட ஒருவன் பேரழகி ஒருத்தியை மணம் முடிப்பதற்கு ஆசைப்படுவதும், கல்வியறிவு சிறிதும் இல்லாத ஒருவன் பண்டிதனாக மாறுவதற்கு ஆசை கொள்வதும் பேராசையின் வெவ்வேறு வடிவங்கள் ஆகும்.

நாம் எம்மால் அடைந்துவிடக்கூடிய தொரு இலக்கை அடைவதற்கு ஆசை கொள்வதில் தவறில்லை. அதற்கு அப்பால் செல்லும் போதுதான் உள்ளதையும் இழக்கும் பரிதாப நிலை தோன்றுகின்றது. இதற்கு உதாரணமாக ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லரைக் கூற முடியும். உலகம் முழுவதையும் தனது காலடியின் கீழ் கொண்டு வருவது என்பது ஹிட்லரின் குறிக்கோளாகவும், ஆசையாகவும் காணப்பட்டது. ஆரம்பத்தில் ஐரோப்பிய நாடுகள் பல இவனிடம் சரணாகதி அடைந்தன. வெற்றிக் களிப்பில் மூழ்கிய ஹிட்லரின் ஆசை பேராசையாக மாறியது. ரஷ்யாவையும் பணிய வைப்பதற்கான போர்த் திட்டங்களை அவன் தீட்டினான். அந்த நாட்டின் மீது படைகளையும் ஏவினான். ஆனால் போரின் முடிவு அந்தக் கொடுங்கோலனின் உயிருக்கே உலை வைத்தது. ஐரோப்பிய நாடுகளை அடிமைப்படுத்தியதுடன் அவனது ஆசைத் தீ அணைந்திருந்தால் இந்த அவலம் நிகழ்ந்திருக்காது.

அமெரிக்காவின் புகழ்பூத்த முன்னாள் ஜனாதிபதிகளில் பில் கிளின்ரனுக்கு எப்போதுமே தனியிடம் உண்டு. அவரது ஆட்சிக்காலத்தில் அமெரிக்க நாட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல வெளிநாடுகளுடனான உறவுகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இவரது சிறந்த ஆளுமை மிகுந்த செயற்பாடுகள் அமெரிக்காவை உலக அளவில் முதலிடத்துக்குக் கொண்டு வந்தன. ஆனால் தனது அலுவலகத்தில் பணி புரிந்த மோனிக்கா என்ற பெண் மீது இவர் கொண்ட ஆசையால் ஏற்பட்ட தகாத உறவு இவரது நற்பெயருக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்தியது. அதன் தாக்கம் இன்று வரை காணப்படுகின்றது. சொந்தமாக மனைவி இருக்க வேறொரு பெண் மீது கொண்ட ஆசை ஒரு மிகப்பெரிய நாட்டின் ஜனாதிபதிக்கே களங்கத்தை ஏற்படுத்தி விட்டது.

இன்று எம்மில் பலர் தமது வருமானத்துக்கு மீறிய வகையில் வாழ்வதற்கு ஆசைப்படுவதால் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர். உணவு மற்றும் இதர தேவைகளை எமது வருமானத்தின் அடிப்படையிலேயே நாம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதை விடுத்து செல்வத்தில் திளைப்பவர்களைப் பார்த்து நாமும் அவ்வாறே வாழ வேண்டுமென நினைத்தால் இறுதியில் மீள முடியாத துயர நிலைக்கு நாம் தள்ளப்பட்டு விடுவோம். சைக்கிளில் செல்வதற்குரிய வசதிகள் தான் எம்மிடம் உண்டென்றால் அதைத் தான் செய்ய வேண்டும். அதை விடுத்து காரில் செல்ல வேண்டுமெனப் பேராசை கொண்டால் இறுதியில் கால் நடையாகத் தான் செல்ல வேண்டி நேரிடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கம்பராமாயணத்தை எடுத்துக் கொண்டால் இராமனின் மனைவியான சீதையிடம் இலங்கை வேந்தன் கொண்ட ஆசையே இறுதியில் அவனது முடிவுக்குக் காரணமாக அமைந்தது. அழகிய மனைவி அருகில் இருக்க வேறு பெண்களிடம் மனதை அலைபாய விடும் இன்றைய ஆண்களுக்கு இராவணனின் அவல முடிவு ஒரு பாடமாகவே அமைந்துள்ளது. எம்மில் சிலர் உணவு விடயத்தில் அதிக ஆசையுடையவர்களாகக் காணப்படுவார்கள். உணவு வகைகளைக் கண்டதும் காணாததைக் கண்டவர்கள் போன்ற வேட்கையுடன் ஒரு பிடிபிடிப்பார்கள். வயிறு நிறைந்தாலும் இவர்கள் விட்டபாடில்லை. தொடர்ந்து எப்படியோ சாப்பிட்டுக்கொண்டே இருப்பார்கள். இறுதியில் பல்வேறு நோய்கள் இவர்களை அணுகுவதால் கால் வயிறு கூட நிறையாத உணவை உண்ண வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டு விடுவார்கள். எப்போதும் மருந்தும் கையுமாக இருப்பதே இவர்களின் வேலையாக ஆகிவிடும்.

ஆடை விடயத்தில் கூட நாம் எமது மனதைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் விலை உயர்ந்த ஆடைகளை அணிகின்றார்கள் என்பதற்காக நாமும் அவ்வாறே அணிவதற்கு ஆசைப்படக்கூடாது. எமக்கு அதற்கான நிதி வசதி இருந்தால் அணிவதில் தவறில்லை. ஆனால் சக்திக்கு மீறி ஆசை கொள்வது தான் தவறானதாகும்.


தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்களில் ஒருவரான காமராஜர் நேர்மையின் வடிவமாகவே போற்றப்பட்டார். புதிய பாடசாலைகள் பலவற்றை ஆரம்பித்து ஏழைச் சிறுவர்களின் கல்விப் பசியையும், வயிற்றுப் பசியையும் போக்கிய பெரிய மகான் அவர். ஆனால் முதலமைச்சர் பதவியை அலங்கரித்த காமராஜர் தமது பதவியைப் பயன்படுத்திப் பொருள் சேர்ப்பதில் ஆசை கொள்ளவில்லை. தமக்குக் கிடைத்த ஊதியத்தின் ஒரு பகுதியைத் தமது தாயாருக்கு அனுப்பிவிட்டு மீதியில் தமது தேவைகளைக் கவனித்துக் கொண்டார். ஒரு சில கதராடைகள் மட்டுமே அவரிடம் இருந்தன. அவர் தமது பதவியை விட்டு விலகிய போது தமது வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கு ஒன்றுமே அவரிடம் இருக்கவில்லை. ஆனால் இவருக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த சிலர் பெரும் கோடீஸ்வரர்களாக மாறியமை அவர்களின் பேராசையின் வெளிப்பாடு என்றுதான் கூற வேண்டும். இவர்கள் தற்போது நீதிமன்றப் படிகளை ஏறி இறங்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சிறைச்சாலைகளில் புகலிடம் தேட வேண்டிய நிலையும் இவர்களுக்கு ஏற்படலாம்.

இன்று வர்த்தகத்தில் ஈடுபடுவோர் மக்களின் நலன்களைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. தமது கைகளை நிரப்ப வேண்டுமென்ற பேராசையுடன் செயற்பட்டு வருகின்றனர். குளிர்பானங்கள், பால்மா வகைகள், திடீர் உணவுப் பொருள்கள் ஆகியவற்றில் மனிதர்களின் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் கலக்கப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்துவோர் பல்வேறு நோய்களுக்கும் ஆளாகின்றனர். தற்போது சந்தைகளில் விற்பனையாகும் பழ வகைகள் கூட மனிதர்களுக்கு உகந்தவையாகக் காணப்படவில்லை. வர்த்தகர்களின் பேராசை மனிதர்களுக்குத் தீங்கை விளைவிக்கின்றன.

ஆகவே நாம் தீங்கற்ற இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அளவோடு ஆசைப்படுவதில் தவறொன்றும் இல்லை. ஆனால் அது பேராசையாக மாறும் போதுதான் தீமையான விளைவுகள் தோன்றுகின்றன. ஆசையில்லாத வாழ்வு மனிதர்களுக்குப் பொருத்தமானது அல்ல. முற்றிலும் துறந்த மகான்களுக்கே இது பொருந்தும். மனிதர்கள் பிறக்கும்போது ஆசைகளும் கூடவே வருகின்றன. இவற்றுக்குக் கடிவாளமிட்டு அளவோடு கட்டுப்படுத்தும் போதுதான் வாழ்க்கை சிறப்பானதாகவும், இனிமையானதாகவும் அமையும்.



# டைனோசரின் அழிவுக்கான காரணங்கள்



டைனோசர்களின் அழிவு குறித்து பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன . இவை திடீரென அழிந்து போனதாகக் கொள்ள முடியாது. அவை அழிந்து போக 1 கோடி ஆண்டுகள் காலம் பிடித்திருக்கும். இவற்றின் அழிவுக்கான காரணங்களை பல அறிஞர்கள் தமது மொழிநடையில் கூறியுள்ளனர். அவற்றில் சில.
பெரியதொரு ஆகாயக்கல் அல்லது கோள் பூமியில் விழுந்து மோதியதால் டைனோசர்கள் மடிந்தன.
பூமியில் வெப்ப அதிகரிப்பினால் டைனோசர்கள் தமது ஆண்மையிழந்து இனப்பெருக்கம் செய்ய முடியாது அழிந்தன.
ஆகாயக்கல் பூமியில் மோதியதால் ஏற்பட்ட தூசு துகள்கள் 1000 மீற்றர் தடிப்பில் படிந்தமையால் சூரிய ஒளிக் கதிர்கள் பூமிக்கு வராது தடுக்கப்பட்டன. அதனால் பூமியில் குளிர் நிலவியது. அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் அவை அழிந்தன.

கு.தர்சன், தரம், 10 'டி'
கிளி/இந்துக் கல்லூரி.




## பொது அறிவு

- இலங்கையின் மகளிர் அபிவிருத்திக்காக தம்மை அர்ப்பணித்த முதல் பெண்மணி யார்?
  **விவியன் குணவர்த்தனா**
- சிங்கள மொழித்துறைக்கு அளப்பரிய சேவையாற்றியவர் யார்?
  பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர
- இலங்கையில் நுகர்வோரை பாதுகாக்கும் சட்டம் எது?
  **1979 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்**
- ஏழு வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள இடம் எது?
  **கன்னியா (திருகோணமலை)**
- பலநோக்குத் திட்டங்களை உருவாக்கியவர் யார்?
  டி.எஸ்.சேனநாயக்கா
- கைப்பணிப் பொருள்கள் தயாரிக்கும் இடம் எது?
  லக்சல நிறுவனம்

க.கீர்த்தன், A/L
யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்

# அதிசய பாறை... அசத்தல் ஆர்தர் !



முற்காலத்தில் இங்கிலாந்தை ஆள்வதற்கு ராஜா என்று எவரும் இருந்ததில்லை. ஊர்ப் பெரியவர்கள் சேர்ந்துதான் ஒவ்வொரு பிரதேசத்தையும் நிர்வாகம் செய்து வந்தார்கள். தங்களுக்கு ஒரு வலிமையான ராஜா வேண்டும் என்று மக்களுக்குத் தோன்றியது. வலிமையாக இருந்தால் மட்டும் போதாது. அவர் அறிவாளியாகவும், நேர்மையானவராகவும், மக்கள் நலனில் அக்கறை உடையவராகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவரை எப்படிக் கண்டு பிடிப்பது என்று மக்கள் ஆலோசனை செய்தார்கள்.
இடையில் ஒரு நாள், நகர மையத் தில் ஒரு பாறை திடீரெனக் காட்சி அளித்தது. அதுவரை யாரும் பார்த்திராத பாறை அது. அந்தப் பாறையில் ஒரு வாள் ஊன்றப்பட்டு இருந்தது. அந்த வியப்பான பாறையைக் காண்பதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள்.
இந்தப் பாறை மிகவும் அதிசயமாக இருக்கிறதே! ஒரு வாள் வேறு இருக்கிறதே! இங்கே எப்படி வந்தது? என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள். அந்த வாளை எடுப்பதற்காக முயற்சி செய்தார்கள். ஆனால், அது மிகவும் வலுவாகப் பாறையில் ஊன்றப்பட்டு இருந்தது. நமக்கான ராஜாவைத் தேர்ந்து எடுப்பதற்காக, கடவுளே இந்தப் பாறையையும் வாளையும் உருவாக்கி இருக்க வேண்டும் என்று மக்கள் நினைத்தார்கள்.
பாறையில் ஊன்றப்பட்டு இருக்கும் வாளை இழுத்து எடுப்பவரே அரசர் ஆவதற்குத் தகுதியானவர் என்றும் முடிவு செய்தார்கள். இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது. ராஜாவாகும் எண்ணத்து டன் வாளை உருவப் பலரும் முயன்றார்கள். ஆனால், எவ்வளவுதான் முயன்ற போதும் வாளை அசைக்கக்கூட முடியவில்லை. பலசாலிகளான பலரும் முயற்சி செய்தும் பலன் எதுவும் ஏற்படவில்லை. பாறையும் பாறையில் இருந்த வாளும் எல்லோருக்கும் சவால்விட்டபடி நகரின் மத்தியில் பல மாதங்களாகக் கிடந்தன.
இந்தச் சமயத்தில் ஆர்தர் என்ற பெயருடைய சிறுவன் ஒருவன் அங்கே வந்தான். ஆர்தரின் அண்ணன் ஒரு படை வீரன். வாளைப்பார்த்தபோது ஆர்தர் மகிழ்ச்சி அடைந்தான். அந்த வாளைப் பாறையில் இருந்து பிடுங்கி எடுத்தால் ராஜா ஆகிவிடலாம் என்பது அவனுக்குத் தெரியவே தெரியாது. அவன் எண்ணம் எல்லாம் வேறு ஒன்றாக இருந்தது.
அடடா, எவ்வளவு அருமையான வாள்! இதை எடுத்துச் சென்று அண்ணனுக்குப் பரிசாக அளிக்கலாம். போருக்குப் போகும்போது அண்ணனுக்கு இந்த வாள் மிகவும் உபயோகப்படும் என்று நினைத்தான்.



ஆர்தர், வாளைப் பிடித்து ஒரு முறைதான் இழுத்தான். மிகச் சுலபமாக அவன் கையோடு அது வந்துவிட்டது.
ஹா.... ஹா... ஹா... பிரமாதம்! திடீரென்று அங்கே வெடிச்சிரிப்புக் கேட்டது. மந்திரவாதி மெர்லினுடைய சிரிப்புத் தான் அது. தனது மந்திர வித்தையால் பாறையையும் வாளையும் அங்கே உருவாக்கியது மெர்லின்தான்.
மந்திரவாதி சொன்னான், 'சிறுவனே! நான்தான் இவற்றை இங்கே ஸ்தாபித்தேன். நீ இப்போது செய்த செயலின் மூலமாக, இந்த நாட்டுக்கு ராஜாவாக ஆகி இருக்கிறாய். நீதான் இந்த நாட்டை ஆள்வதற்குத் தகுதியானவன். வா! நான் எல்லா வித்தைகளையும் உனக்குக் கற்றுக்கொடுக்கிறேன்' என்றான்.
ஆர்தர், மெர்லினுடன் சென்றான். மெர்லினும் ஆர்தருக்கு சகல கலைகளையும் கற்றுக் கொடுத்தான். திறமை மிகுந்த சிறுவனான ஆர்தர் அனைத்தையும் வெகு விரைவில் கற்றுக் கொண்டான். சீக்கிரமே அவன் இங்கிலாந்தின் அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.
ஆர்தரின் ஆட்சி தர்ம நியாயத்தின்படி இருந்தது. அவன் ஆட்சியில் மக்கள் சகல நலன்களுடன் வாழ்ந்தார்கள்.
நான் ராஜாவாகவும், நீங்கள் குடி மக்களாகவும் இருந்தாலும், நீங்கள் சகல விடயங்களிலும் என்னுடன் துணை இருங்கள். நாம் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயல்படுவோம்! என்று மக்களிடம் அடிக்கடி சொல்வான் ஆர்தர். புதிய ராஜாவை மக்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது.
எதிரிகளின் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக வலிமை வாய்ந்த ஒரு படை வேண்டும் என்று ஆர்தருக்குத் தோன்றியது. உடனே அவன் வலிமையும் துணிவும் உள்ள ஆட்களைக் கொண்டு ஓர் அமைப்பை உருவாக்கினான். நாட்டை எதிரிகளிடம் இருந்து காப்பாற்றுவது மட்டும் அல்ல, கஷ்டப்படுபவர்களுக்கு உதவுவதும் அந்த அமைப்பின் நோக்கம். அந்தப் படைவீரர்கள் தங்கள் ராஜாவின் சகல கட்டளைகளையும் உடனடியாக நிறைவேற்றினார்கள்.
ஆர்தர் ராஜாவின் வீரப் போராளிகள் என்று புகழ்பெற்ற இவர்களுக்குத் தளபதி என்று எவரும் இல்லை. எல்லோருக்கும் சமமான பதவிகள் அளிக்கப்பட்டு இருந்தன. போர்க்காலத்தில் ராஜாவும் இவர்களில் ஒருவனே. நாட்டைக் காக்கிற ஒரு படைவீரன்!
ஆர்தர், எதிரிகளைத் துரத்தி அடித்தான். துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்தான். மக்களின் விருப்பத்துக்கு ஏற்றபடி அவன் வெகு காலம் ஆட்சி செய்தான். இங்கிலாந்தை ஆட்சி செய்தவர்களில் மிகச் சிறந்த ராஜா அவன்தான்.
நாட்டுக்கு ஆபத்து ஏற்படும்போது, மக்களைக் காப்பாற்றுவதற்காக ஆர்தர் ராஜாவும் அவன் வீரர்களும் இப்போதும் வருவார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள்.

கபோதி

## காண்டாமிருகம்

காண்டாமிருகங்கள் மிகவும் பலசாலிகள். இவற்றின் குட்டையான கால்களில் முன்று விரல்கள் உள்ளன. அகன்ற தோல் இவற்றை இணைத்திருக்கும். தோளின் முன்புறமும் பின்கால்களின் முன்பும் தடித்த தோல் மூன்று மடிப்புகளாகக் கவசம் போல் அமைந்திருக்கும்.
காண்டாமிருகத்தைத் துப்பாக்கிக் குண்டு கூடத் துளைக்காது என்பது தவறு. உயிரோடிருக்கும் போது இத்தோல் மிருதுவாகத்தான் உள்ளது. காண்டா மிருகம் இறந்துவிட்டால் தோல் இறுகி குண்டு துளைக்க முடியாதபடி உறுதியாகிவிடும்.
மூக்கிலிருந்து வளர்ந்திருக்கும் கொம்பு தோலிலிருந்து வளர்கிறது. இது எதிரிகளைத் தாக்குவதற்காக அல்ல. கிழங்குகளைத் தோண்டவே. எதிரிகளைப் பற்களாலேயே கடிக்கும். யானைகளைக் கூடக் கொன்றுவிடக் கூடிய பலம் படைத்த இவை, வெகு வேகமாக ஓடும்.
இவற்றுக்குக் கேட்கும் சக்தி அதிகம், பார்க்கும் சக்தி குறைவு. பிராணிகளைக் கொன்றபோதிலும் புசிப்பது இல்லை. புல் பூண்டு, கிழங்குகளையே சாப்பிடும். தனித்து வாழ்வதையே விரும்பும். இதற்கு சேற்றில் விழுந்து புரள்வதென்றால் கொண்டாட்டம்.
இரவில்தான் இரைதேடும். தடவைக்கு ஒரு குட்டி போடும். அதற்குக் கோபம் வந்தால் உடலெல்லாம் இரத்தம் போல் சிவப்பாக வியர்த்துக் கொட்டும். மூர்க்கத்தனமான இந்த மிருகம் கண்ட இடத்தில் மலம் கழித்து அசுத்தப்படுத்துவது இல்லை. எப்போதும் குறிப்பிட்ட ஓர் இடத்திலேயே மலம் கழிக்கும். புல், அடர்ந்து காடுகளில்தான் இவை வசிக்கும்.



அபிசன்



# வீடு தேடி வந்த விருந்தாளிகள்



இயற்கை எப்போதுமே ஆச்சரியங்கள் நிரம்பியது. எத்தனையோ தொந்தரவுகள், பிரச்சினைகள் இருந்தாலும் சிறிய இடம் கிடைத்தாலும் அந்த இடத்தில் ஒட்டிக்கொண்டு துளிர்ப்பது தான் இயற்கையின் மாறாத தன்மை. தாவரங்கள்தான் என்றில்லை, உயிரினங்களும் இப்படித்தான் எம்மைச் சுற்றிச் செழித்துள்ளன.

இது எப்படிச் சாத்தியம் என்று யோசிப்பவர்கள், உங்களைச் சுற்றிச் சற்று கூர்ந்து நோக்குங்கள். உங்கள் வீட்டிலும், வீட்டைச் சுற்றியும், தோட்டத்திலும், பக்கத்தில் உள்ள பூங்காவிலும் எறும்பு, சிலந்தி, பல்லி, வண்ணத்துப்பூச்சி, தேனீ, மண்புழு, நத்தை, தவளை, அணில், குரங்கு, காக்கை தொடக்கம் எண்ணற்ற வகைப் பறவைகள் என இயற்கையாக வாழும் பல உயிரினங்களைப் பார்க்கலாம். இவை எதுவுமே மனிதர்கள் வீட்டுவிலங்குகளாகப் பழக்கி வளர்த்தவை அல்ல.



**காட்டுவிலங்கும் வளர்ப்புவிலங்கும்**

காடுகளில் இருந்து மனிதர்கள் அழைத்து வந்து பழக்கிய முதல் விலங்கு நாய். அதன் பிறகு பூனை, ஆடு, மாடு, கோழி, குதிரை, கழுதை எனப் பல உயிரினங்கள் வீட்டுவிலங் குகளாகவோ, பண்ணை விலங்குகளாகவோ ஆக்கப்பட்டன.



அவை மனிதர்களின் தேவைகளுக்காக ஆரம்பத்தில் காட்டில் இருந்து பிடித்து வரப்பட்டு வேலை செய்யவும், உணவுக்காகவும் வளர்க்கப்பட்டன. அழகு, பாசத்தை வெளிப்படுத்தியதால் அவற்றில் சில செல்லப் பிராணிகளாகவும் மாறின.

ஆனால், காடுகளில் இருந்து மனிதர்கள் அழைத்து வராமல், தாங்களாகவே ஊருக்குள் வந்து தகவமைத்துக்கொண்டு, எம்முடன் வாழப் பழகிவிட்ட பல உயிரினங்கள் இன்றைக்கும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆரம்பத்தில் காடுகளுக்கு அருகில் இருந்த குடியிருப்புப் பகுதிகளிலும், கொஞ்சம் கொஞ்சமாக நகர்ப் பகுதிகள் வரையும் இவை பரவிவிட்டன. தொடக்கத்தில் மனிதர்களிடம் இருந்து பெரிய தொந்தரவுகள் இல்லாததால், கவலையின்றி அவை எம்மிடையே வாழப் பழகிவிட்டன. இந்த உயிரினங்கள் உடல் ரீதியிலும், நடத்தை முறையிலும் தங்கள் மூதாதையரிடம் இருந்து பல மாற்றங்களைப் பெற்றுள்ளன. அதனால் தான் அவற்றால் எம்மிடையே வாழ முடிகிறது. நவீன வாழ்க்கை தரும் தொந்தரவுகளைத் தாண்டி மனிதர்களை அண்டி வாழ்வதால் சில வசதிகள் கிடைப் பதால்தான், இன்றைக்கும் இந்த உயிரினங்கள் ஊருக்குள் வாழ்கின்றன. அதேநேரம், மனிதத் தலையீடும், பிரச் சினைகளும் அதிகரித்துவிட்டால் இந்த உயிரினங்கள் ஒட்டுமொத்தமாக அருகிப் போகவும் கூடும். முன்பு நகர்ப் புறங்களில் பரவலாகக் கூடு கட்டிச் செழித்திருந்த சிட்டுக் குருவிகள் இன்றைக்குச் சில ஊர்கள், கிராமங்களில் மட்டும் முடங்கிவிட்டதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

> எத்தனையோ தொந்தரவுகள், பிரச்சினைகள் இருந்தாலும் சிறிய இடம் கிடைத்தாலும் அந்த இடத்தில் ஒட்டிக்கொண்டு துளிர்ப்பது தான் இயற்கையின் மாறாத தன்மை. தாவரங்கள் தான் என்றில்லை, உயிரினங்களும் இப்படித்தான் எம்மைச் சுற்றிச் செழித்துள்ளன.

**உயிரினங்களின் பேருதவி**

அதேநேரம் காடுகளில் இருந்து வந்த உயிரினங்கள் பல்வேறு வகைகளில் நமக்கு உதவி வருகின்றன.

வேகமாக இனப்பெருக்கம் செய்து காய்ச்சல் உள்ளிட்ட நோய்கள் பரப்புவதிலும், தானியங்களை அழிப்பதிலும் பூச்சிகளுக்கு முக்கியப் பங்கு உண்டு. ஆனால், பல்லி, தவளை, சிலந்தி போன்றவற்றின் முக்கிய இரை பூச்சிகள்தான். பெரும்பாலான பறவைகளின் முக்கிய உணவும் பூச்சிகள்தான். பறவைகள் இல்லை என்றால் உலகிலுள்ள தாவரங்கள் அனைத்தையுமே பூச்சிகள் அழித்துவிடக்கூடும். ஆந்தைகளும் பாம்புகளும் எலிகளைச் சாப்பிடவில்லை என்றால் எமது தானியங்களும், வயல்களும் பெருமளவில் நாசமாகும். வண்ணத்துப் பூச்சிகள், தேனீக்கள் போன்றவை தாவர இனப்பெருக்கம் நடக்க, மலர்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெற உதவுகின்றன.

மண்புழு பற்றிச் சொல்லத் தேவையில்லை, அது உழவனின் நண்பன். ஆகாயத் தோட்டி' எனப்படும் காக்கை நாம் தேவையற்றது என ஒதுக்கும் கழிவு, இறந்த விலங்குகள் போன்றவற்றைச் சாப்பிட்டு ஊரைச் சுத்தப் படுத்துகிறது. இப்படி உலகைச் செழிக்க வைப்பதில் இந்த உயிரினங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.



பெட்டிச் செய்தியில் பட்டியலிடப்பட்டுள்ள காட்டுயிர்கள், உங்கள் பகுதியில் உள்ளனவா என்று சற்று உற்றுப் பாருங்கள். அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணியுங்கள். அது சுவாரசியங்கள் நிரம்பிய புது உலகம்.

## எண்ண அலைகளின்றி பயத்தைப் பார்க்க முடியுமா?



உண்மையிலேயே எதையும் அறிந்து கொள்ள தீவிர ஆர்வமுடையவராக நான் இருந்தால், ஏன் இத்தனை உணர்வு நிலைப் பயங்களும் ஆழ்மனப் பயங்களும் உள்ளன என்பதைக் கண்டறிய விருப்பம் கொள்வேன். ஏன் இந்தப் பயம் வந்தது, இந்தப் பயத்தின் மையக் காரணி எது? என்ற கேள்விகளோடு சுய விசாரணை செய்வேன். எப்படி விசாரணை செய்வது என்பதை இங்கு உங்களுக்குச் சுட்டிக்காட்ட முயற்சி செய்கிறேன்.

எனது மனம், நான் பயப்படுகிறேன் என்பதை அறிவேன் என்று சொல்கிறது. இருட்டைப் பார்த்தால் பயம், தண்ணீரைப் பார்த்தால் எனக்குப் பயம்; நான் உயரமாய், அழகாய் இருக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் அப்படி இல்லையே- அதனால் பயம். நான் இப்போது அவற்றைப்பற்றி விசாரணை செய்து கொண்டிருக்கிறேன். ஆக, எனக்கு அதிக பயங்கள் உள்ளன. ஆழ்மனப் பயங்களும் மேலோட்டமான பயங்களும் எனக்கு இருக்கின்றன என்பதும் எனக்குத் தெரியும். அவை இரண்டைப் பற்றியும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அவை எப்படி இருப்புக் கொள்கின்றன, அவை எப்படித் தோன்றுகின்றன? அவற்றின் வேராக இருப்பது எது என்பது போன்ற கேள்விகளுக்கு விடை காண முற்படுகிறேன்.

பயத்தைப் பற்றி எப்படி அறிந்துகொள்வது? பயத்தைப் பற்றிய ஆய்வில், ஒவ்வொரு படியாக மெதுவாக ஏறி முன்னேறப் பார்க்கலாம். முதற்படியாக, பயந்துகொண்டு வாழ்வது என்பது மன இறுக்கத்தோடு, பதற்றத்தோடு இருப்பது மட்டுமல்ல, மிகுந்த அழிவையும் அது கொண்டு வருகிறது என்ற உண்மையை மனம் முதலில் பார்க்க வேண்டும். நான் மன இறுக்கத்துடன் இருப்பதையும், அதன் காரணமாக, பதற்றமான செயற்பாடுகள் தொடர்வதையும், அவை அழிவைக் கொண்டு வருவதையும், மனம் பார்க்க வேண்டும். பயந்து போயிருக்கும் மனம், ஒருபோதும் நேர்மையாக நடந்து கொள்ளாது. கெட்டியாகப் பற்றிக் கொள்ள ஏதோ ஒரு அனுபவத்தை அல்லது ஒரு கற்பனையைக் கண்டுபிடித்து, பயந்த மனம் அதைப் படித்துக் கொள்ளும். ஆக, பயம் இருக்கும்வரை, துன்பம் இருக்கும் என்பதை முழுமையாக, தெளிவாக நான் பார்க்க வேண்டும். நீங்கள் அவ்வாறு பார்க்கிறீர்களா? அவ்வாறு பார்த்தல், முதல் தேவையாக இருக்கிறது. அதுவே முதலாம் உண்மையாகவும் இருக்கிறது. பயம் இருக்கும் வரை, இருள் இருக்கும்; இருளில் இருந்துகொண்டு நான் செய்வதெல்லாம் இருளாகவே இருக்கும், குழப்பமாகவே இருக்கும். இவ்வுண்மையைத் தெளிவாக, முழுமையாக நான் பார்க்கிறேனா?

ஏற்றுக்கொள்வதோ, மறுப்பதோ பிரச்சினை இல்லை. நீங்கள் இருட்டில் வாழ்கிறீர்கள் என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா? ஆமோதித்தீர்களென்றால், அதனுடன் வாழுங்கள். நீங்கள் போகுமிடமெல்லாம் இருளைச் சுமந்து செல்கிறீர்கள், இருளில் வாழ்கிறீர்கள், அவ்வளவுதான். அதோடு திருப்தி அடைந்துவிடுங்கள்.



# இணையம் ஹேங் ஆகிறதா?

■ இளையவன்

## இது தான் பிரச்சினையாக இருக்கும்

அன்றாட வாழ்வில் இணையம் எமக்கு முக்கிய பங்கு வகிப்பது மட்டுமல்லாமல், அதன் தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

நாம் இணையத்தில் உலா வருகையில், பல வேளைகளில், பார்க்கின்ற தளம் அப்படியே உறைந்து போகலாம். சில வேளைகளில் அதற்கான error செய்தி கிடைக்கும். பல வேளைகளில் எதுவும் காட்டப் படமலேயே தளம் தொடர்ந்து இயங்காது ஹேங் ஆகும்.

இதுபோன்ற நிலைகளுக்குப் பல காரணங்கள் உள்ளன. நீங்கள் அடிக்கடி பிரவுஸ் செய்திடும் தளத்தைத் திறந்து உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக் கொண் டிருக்கையில், வேறு ஒரு வேலைக்காக கணினி மற்றும் பிரவுசிங்கை விட்டு விட்டு நீங்கள் செல்லலாம்.

மீண்டும் வந்து பார்க்கிற போது Session Expired என்ற செய்தி திரையில் காட்டப்பட்டுக் கொண்டிருக்கும். எந்தவிதமான செயற்பாடும் இன்றி இணையதளத்தைத் திறந்து வைத்திருந்தால் தானாகவே மூடும்படி அந்த தளத்தைத் தயாரித்தவர்கள் வடிவமைத்திருக்கலாம்.

எத்தனை நொடிகள் இவ்வாறு செயலற்று இருந்தால் அந்த தளம் இந்த செய்தியைக் கொடுக்கும் என்பதனைப் பொதுவாக வரையறுக்க முடியாது. இது அந்த தளத்தை வடிவமைத்தவர்கள் செய்த வரைமுறையாக இருக்கலாம்.

சில தளங்கள் தங்களிடம் முறையாகப் பதிவு செய்யாதவர்கள் தளத்தைப் பார்க்க சில நிமிடங்களே அனுமதி தரும். அந்த நேரம் முடிந்துவிட்டால் தானாகத் தளம் மூடப்பட்டு Session Expire- செய்தி கிடைக்கும்.

மேலும் சில தளங்கள் குக்கீஸ் எனப்படும் குறுந் தகவல் தொகுப்புகளை அனுமதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும். அப்போதுதான் அடுத்த முறை நீங்கள் அந்த தளத்தை அணுகுகையில் உங்களைப் பற்றிய தகவலை அந்த தளம் அறிந்து கொண்டு உங்களுடன் தகவல் பரிமாறிக் கொள்ள முடியும்.


எனவே குக்கீஸ் பெறுவதனை நீங்கள் தடுக்கும்படி செட் செய்திருந்தால் மாற்றி விடவும். இதற்கு இணையத்தள எக்ஸ் புளோரரில் Tools, Internet Options சென்று அதில் Privacy டேப் கிளிக் செய்திடவும்.

பின் கிடைக்கும் திரையில் Default என்னும் பட்டனைக் கிளிக் செய்தால் குக்கீஸ் பெறுவது அனுமதிக்கப்படும். கணினியில் பயர்வால் செட்டிங்ஸ் அமைத்திருந்தால் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் இணைய தளம் தானாகவே மூடும் வாய்ப்பு உண்டு. ஏனென்றால் பயர்வால் செட்டிங்ஸ் சில தளங்களை இறக்கம் செய்து பார்க்க விடாது. இதற்கு உடனே பயர்வால் செட்டிங்ஸ் பார்த்து திருத்தவும். நீங்கள் விரும்பிப் பார்க்கின்ற தளங்களை பயர்வால் அனுமதிக்கும்படி பயர்வால் செட்டிங்ஸை மாற்றவும்.

சில வேளைகளில் தவறான நாள், தேதி மற்றும் நேரத்தை உங்கள் கணினி காட்டிக் கொண்டிருந்தால் அதனாலும் Session Expire- செய்தி வரலாம். ஏனென்றால் சில தளங்கள் பின்புலத்தில் உங்கள் கணினியின் நேரத்தோடு இணைந்து சில புரோகிராம்களை இயக்கிக் கொண்டிருக்கலாம்.

மேலே குறிப்பிட்ட எதுவுமின்றி இணையத் தளத்தில் எக்ஸ்பயர் செய்தி வருகிறதென்றால், அதுவும் குறிப்பாக ஒரு தளத்துக்காக வருகிறது என்றால் அந்த தளத்தில் பிரச்சினை உள்ளது என்று பொருள். எனவே உங்கள் கணினியின் செட்டிங்ஸ் சரி செய்வதனால் இது நிவர்த்தி அடையாது. எனவே இந்த செய்தி வரும் பட்சத்தில் பொறுமையாக உடனே அல்லது சில நிமிடங்கள் கழித்து மீண்டும் அதனைப் பெற முயற்சிப்பது தான் சிறந்த வழியாகும்.

தவறான நாள், தேதி மற்றும் நேரத்தை உங்கள் கணினி காட்டிக் கொண்டிருந்தால் அதனாலும் Session Expire- செய்தி வரலாம்.





## சிந்திக்க.....

கண்ணில் பட்ட சிறுமணல் எப்படி இந்த அழகிய உலகத்தைப் பார்க்க முடியாமல் செய்து விடுகிறதோ, அதைப் போல, சிறிய தயக்கம் அல்லது சந்தேகம், இந்த வாழ்வின் பெருமை, அழகு, உங்கள் பலம் அனைத்தையும் மறைத்து விடும். ஒருவர் உடல் துன்பத்தில் இருக்கும் போது, நீங்கள் எதைப் போதித்தாலும் அது அவர்களுக்கு முட்டாள் தனமாகவே படும். கோடிக்கணக்கில் மக்கள் ஒருவருக்கொருவர் தீர்ப்பு சொல்லிக் கொண்டும், சண்டை போட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

சட்டம் என்பது தவறான மனிதனுக்கு உரியது. சரியான மனிதனுக்கு அல்ல. ஏனென்றால், இந்த முழு உலகமும் தவறான மனநிலையில் செயல்படுகிறது. எப்போதாவது ஒரு சரியான மனிதன் வந்தால், அவனை ஒரு அயலான் போலத்தான் பார்க்கிறது.

முழுமை என்று எதுவும் இல்லை. வாழ்வின் முழுமை என்று தோன்றுவது ஒரு பொய்மைதான். ஒரு புத்திசாலி, வாழ்வு என்பது குற்றமற்ற நிறைவானது அல்ல என்று புரிந்து கொள்வான். அது எப்போதும் குறைகள் நிறைந்ததுதான். நாம் எல்லோரும் குறை நிறைந்தவர்கள் தான். ஒருவனிடத்தில், இங்கே அங்கே உங்களுக்குப் பிடிக்காத சில குறைகள் இருக்கலாம். அதே சமயம் அவனிடம் நீங்கள் விரும்பும் சில நிறைவுகளும் இருக்கும். நீங்கள் ஒருவரை விரும்பினால் அவரை மாற்றவேண்டும் என்று அதற்கு அர்த்தம் இல்லை.



# வெனிஸ் நகரின் பாரம்பரிய விழா

உலகில் கொண்டாடப்படும் ஒவ்வொரு திருவிழாவுக்கும் ஏதாவது ஒரு சுவையான பின்னணி இருக்கும். பெரும்பாலான திருவிழாக்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டமாக மட்டும் இல்லாமல், சமூக நல்லிணக்கத்துக்கும் துணை புரிகின்றன. இப்படி கொண்டாட்டமாகத் தொடங்கி, சமூகக் கொடுமையை ஒழிக்கும் நிகழ்வாக மாறிய ஒரு திருவிழா.

வெளிநாட்டினரைக் கவரும் வெனிஸ் திருவிழா. இது வண்ணங்களைப் பூசிக்கொண்டு மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் மக்கள் ஈடுபடும் ஒரு நிகழ்வு ஆகும். முகமூடிகளுக்காகவே அறியப்படும் கார்னிவல் ஒஃப் வெனிஸ் (CARNIVAL OF VENICE) எனப்படும் இந்த வெனிஸ் திருவிழா. இத்தாலியின் மிக அழகான நகரங்களுள் ஒன்றான வெனிஸின் பெருமைக்குரிய அம்சங்களில் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. 9 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வெனிஸ் தனி நாடாக இருந்தபோது, அக்கிலேயா என்ற அண்டை தேசத்துக்கு எதிரான வெற்றியைக் கொண்டாடுவதற்காக இந்த விழா ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பல நூறு ஆண்டுகளாகத் தொடரும் வெனிஸ் திருவிழா, ஐரோப்பிய சீர்திருத்தக் காலத்தின்போது அதிகாரப்பூர்வமான திருவிழாவாக அறிவிக்கப்பட்டது. ஆண்டுதோறும் பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் தொடர்ந்து இரு வாரங்களுக்கு நடக்கும் இவ்விழா, ஈஸ்டருக்கு முந்தைய 40 நாள் தவக்காலம் தொடங்கும் நாளன்று நிறைவடைகிறது. கண்ணைக்கவரும் முக மூடிகளும் வண்ணமயமான ஆடைகளும் இந்த விழாவின் முதன்மையான அம்சங்கள். மக்கள் முகமூடிகளை அணிந்தபடி தெருக்களிலும் பொது இடங்களிலும் கூடுவார்கள். தோல், இறகுகள், விதவிதமான வண்ணங்கள், விலை உயர்ந்த கற்கள் போன்றவற்றைக் கொண்டு இந்த முகமூடிகளை உருவாக்குகிறார்கள். முகங்களுக்கு வண்ணங்களைப் பூசிக் கொள்வதும் உண்டு. இது போன்ற முகமூடிகளுக்குப் பின்னால் பல கதைகள் உள்ளன.



ஒரு காலத்தில் வெனிஸ் நகரத்தில் ஜாதிக் கொடுமைகள் அதிகமாக இருந்ததாகவும், அந்த ஏற்றத் தாழ்வுகளை மறைக்கும் வகையில் பள்ளிகள், வழிபாட்டுத்தலங்கள் போன்றவற்றுக்குச் செல்லும் போது, முகமூடிகளை அணியத் தொடங்கியதாகவும் கூறப்படுகிறது.

தற்காலத்தில் ஒவ்வொருவரும் தங்களது பெயருக்கு ஏற்றபடி முகமூடிகளை அணிந்துகொள்வது வழக்கமாக இருந்து வருகிறது. சிலர் தாங்கள் பார்க்கும் வேலையைப் பிரதிபலிக்கும் வகையிலான முகமூடிகளை அணிகின்றனர்.

வெனிஸ் திருவிழாவில் பயன்படுத்தப்படும் முகமூடிகள் பலவகைப்படுகின்றன. பாட்டா என்ற முகமூடி முகம் முழுவதையும் மறைக்கும்படி அணியப்படுகிறது. இதைப் பெரும்பாலும் ஆண்களே அணிகிறார்கள்.

லம்பினா என்று அழைக்கப்படும் மற்றொருவகை முகமூடி பாதி முகத்தை மட்டும் மறைக்கும்படி உருவாக்கப்படுகிறது. இந்தத் திருவிழாவின்போது, சிறந்த முகமூடி மற்றும் உடையலங்காரம் போன்றவற்றுக்கான போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

17 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் வெனிஸ் நகரப் பெருமையை உலகறியச் செய்ததில் இந்தத் திருவிழாவுக்கு முக்கியப் பங்குண்டு. அன்னியரின் பிடியில் வெனிஸ் சிக்கியபோதும், போர்க் காலங்களிலும் விழா கொண்டாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன்றுவரை சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வரும் இந்த விழா சமூக ஏற்றத் தாழ்வை ஒழிப்பதற்கான நிகழ்வாகவே பார்க்கப்படுகிறது.

# கேட்டலோனிய மக்களின் பாரம்பரியத் திருவிழா

உலகின் பெரும்பாலான திருவிழாக்கள் மதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; சில விழாக்கள் மதத்துடன் தங்களது இனப் பழக்க வழக்கங்களையும் இணைத்துக் கொள்கின்றன. மதம், இன அடையாளம், தேசிய எழுச்சி என பல அம்சங்களைக் கொண்ட ஒரு திருவிழா குறித்த விவரம்.

ஸ்பெயின் நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கிறது கேட்டலோனியா. ஸ்பெயினின் பிற பகுதிகளில் இருந்து முற்றிலும் மாறு[illegible] தனித்தன்மை கொண்ட பண்பாட்டைக் கொ[illegible]க்கும் இந்தப் பிராந்தியம், பல்வேறு திருவிழாக்களுக்குப் பெயர்பெற்றது. இங்குள்ள பார்சிலோனா நகரில் நடக்கும் மிகப் பிரண்டமான கலைவிழாவின் பெயர் லா மெர்சி.

கத்தோலிக்கப் புனிதரான அவர் லேடி ஆஃப் மெர்சி (our lady of mercy)-யின் நினைவைப் போற்றும் வகையில் 1871 ஆம் ஆண்டு முதல் இந்த விழா நடத்தப்பட்டு வருகிறது. கோடைக் காலத்தை வழியனுப்புவதாகவும், குளிர்காலத்தை வரவேற்பதாகவும் இந்தத் திருவிழா அமைந்திருக்கிறது. ஆண்டுதோறும் செப்ரெம்பர் கடைசி வாரத்தில் நடக்கும் லா மெர்சிவிழா வெறும் கலைவிழா மட்டுமல்ல. கேட்டலோனிய மக்களின் தேசிய உணர்வையும் பிரதிபலிக்கும் விழா.



இந்த விழாவின் மிக முக்கியமான நிகழ்வு வாண வேடிக்கை நிகழ்ச்சி. மக்கள் கூட்டமாகத் தெருவில் ஓடியபடி வாணங்களையும் மத்தாப்புக்களையும் கொளுத்தி வீசு வார்கள். சாத்தான்களின் உருவத்தை எரிக்கும் நிகழ்ச்சியும் இதில் இடம்பெறுகிறது. நரகம்போல வடிவமைக்கப்பட்ட கட்டடத்தில் மரபுவழி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சாத்தான்கள் போல வேடமணிந்து பலர் இந்த விழாக்களில் பங்கேற்கிறார்கள். இந்த விழாவில் நெருப்பைக் கக்கும் டிராகன் போன்ற பொம்மைகளும் இடம்பெறுகின்றன.

இந்த விழாவின் மற்றொரு முக்கியமான அம்சம் கேஸ்ட்லர்ஸ் என்ற மனிதக் கோபுரங்களை அமைக்கும் நிகழ்ச்சி. கேட்டலோனிய சமூகத்தின் தனிசிறப்பாகவும், மனித குலத்தின் பழமையான பண்பாட்டு அடையாளமாகவும் இது போற்றப்படுகிறது.

விழாவின் இன்னொரு பிரபலமான நிகழ்வு மிகப் பெரிய மனிதப் பொம்மைகளின் அணிவகுப்பு. அரசர், அரசி, தளபதி, பிரபுக்கள் போன்றோரின் பிரமாண்டப் பொம்மைகள் தெருக்களில் ஊர்வலமாக வரும்போது, மக்கள் நேரில் வாழ்த்து தெரிவிப்பது வழக்கமாக இருக்கிறது. இவை தவிர இசை, நடனம், முப்பரிமாண ஒளிக் காட்சிகள் போன்றவையும் இந்த விழாவைச் சிறப்பாக்குகின்றன.

இந்த விழாவைக் காண உலகம் முழுவதும் இருந்து மக்கள் வருகின்றனர். பல வகையான மத்தாப்புகள் பார்வையாளர்களை நோக்கிப் பறக்கும் என்பதால், அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன. இதற்காக தொப்பிகள், கண்ணாடிகள், நீளமான மேலாடைகளை அணிந்து கொள்ளும்படி பார்வையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். சுற்றுலாப் பயணிகளின் வருகையால் உலகின் மிகப் பிரபலமான திருவிழாக்களில் ஒன்றாக மாறியிருக்கும் லா மெர்சி கொண்டாட்டங்களுக்கு இடையே, ஸ்பெயின் மற்றும் பிரான்ஸிடமிருந்து பிரிந்து தனி நாடாக உதயமாகத் துடிக்கும் கேட்டலோனிய விடுதலைக் குரலும் ஓங்கி ஒலிக்கிறது.

# உணர்வுகள் நிபந்தனைக்கு உட்பட்டவை



வீட்டருகில் இரண்டு வீதி தள்ளியிருக்கும் வீதி, ஆனால் அகலமான சாலை போன்றது. சமீபத்தில் ஒரு முற்பகல் நேரத்தில் சாலையைப் பாதி அடைத்து பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள். திடீர் பந்தல் என்றவுடனே துக்க காரியமாக இருக்கலாமெனத் தோன்றியது. வெள்ளுடைகளில் குவிந்து கொண்டிருந்த கூட்டமும்; அதை மரண வீடென்று வெகு எளிதாக உணர்த்தியது. வாகனங்களாலும் மனிதர்களாலும் அந்தப் பகுதியே நிரம்பிக்கிடந்தது.

எல்லா இறப்புகளையும் நாம் ஒரே மன நிலையோடு ஒரே அளவான துக்கத்தோடு அணுக முடிவதில்லை. கல்யாணச்சாவுகளை, எதிர்பார்த்து காத்திருந்து நிகழும் இறப்புகளை சற்றே நிறைவான, பயம் தணிந்த மனநிலையோடு அணுகுகிறோம். வாழவேண்டிய வயதில் எதிர்பாராத தருணத்தில் நிகழும் அகால இறப்புக்களை துக்கம் விசாரிக்கும் கூட்டம் வெகு பதற்றத்தோடு அணுகுகிறது. யாருடைய சாவாக இருந்தாலும் அகால மரணம் என்பது கூடுதல் துக்கத்தையும், ஒரு கணம் தன்னோடு பொருத்திப் பார்த்து தன் வாழ்க்கைக்கும் உத்தரவாதம் இல்லையென்ற அச்சத்தையும் கொடுத்து விடுகின்றது.

கொளுத்தும் வெய்யிலின் மத்தியில் அந்த வீட் டின் முன்பு நிரம்பியிருந்த கூட்டமும் பரபரப்பும் அது ஒரு எதிர்பாராத சாவு என்பதை உணர்த்தியது. அந்த இடத்தைக் கடக்கும் பொழுது யாரேனும் தெரிந்த முகங்கள் தெரிகின்றனவா எனப் பார்ப்பதும், இறந்தது யாராக இருக்கும் என்று யோசிப்பதுமாக இருந்தேன்.

கடந்து செல்லும் ஒருவீதியில் நிகழ்ந்த இறப்புக் குறித்து இத்தனை பேசவேண்டுமா என்று தோன்றலாம். காரணம் இருக்கின்றது. அடுத்த சில நாள்களில் பந்தல் பிரிக்கப்பட்டது. பந்தல் பிரிக்கப்பட்ட தினத்திலிருந்தே மரணம் குறித்தான நினைவுகள் மறதிக்குள் மூழ்கத் தொடங்கின.

இரண்டு நாள்கள்தான் கடந்திருக்கும். அதே வீட்டின் வாசலில் மீண்டும் பந்தல். கார்கள், கூட்டம், ஆத்மா வாகனம் என இன்னொரு இறப்பை உணர்த்தியது. எந்தத் தொடர்பு மற்றுக் கடந்து போகும் எனக்கே அயர்ச்சியாக இருந்தது. போனவாரம் பந்தல் போட்டிருந்தது உண்மையா? அல்லது கனவா? என்று நொடிப்பொழுதுக்கு சந்தேகம் வந்தது. அதே வீட்டில் அடுத்த மரணமா, அல்லது அந்த வீட்டின் பின்பக்கம், மாடியில் என வேறு வீடுகள் இருக்கின்றதா என்றும் சந்தேகம் வந்தது. யாரையாவது கேட்டுத் தெரிந்து கொண்டேயாக வேண்டும் என்று மனசு பரபரத்துத் தொலைத்தது. எத்தனையோ வீதிகளில் எத்தனை சாவு வீட்டுப் பந்தல்களைப் பார்த்தாலும், இரண்டு நாள் இடைவெளியில் மீண்டும் போடப்பட்ட பந்தல் மனதை விட்டு மறையமாட்டேன் என்றது.

இறப்புக் குறித்து எந்த விதமாய் யோசித்தாலும் தலைக்குமேல் போதிமரமொன்று கிளை விரிப்பதும், மனதுக்குள் பயமேற்படுவதும் ஒருங்கே நிகழ்ந்துவிடுகின்றன. இறப்புக்கு பின்னான வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை அறிய முடியாததே. இறப்பு குறித்த அத்தனை பயங்களுக்கும் காரணமென்று நினைக்கிறேன். அந்தப் பயத்தின் பொருட்டே இறப்பைக் கண்டு மருண்டோடுகிறோம். அது வந்துவிடக் கூடாதென்று எதையெதையோ பற்றுகிறோம். எத்தனை சாமிகளை வேண்டுகிறோம்.

தனக்கு மிகவும் வேண்டப்பட்டவர்களின் இறப்பை அது நிகழும்போது உடனிருப்பதும், நிகழ்ந்த சில நிமிடங்களில் உணர்வதும் தான் உலகின் ஆகக் கடும் கொடுமையாக இருக்க முடியும்.

உயிர் பிரிந்த கணத்தில் உடலிலிருந்து சூடு வெளியேறி குளிர் ஆக்கிரமிக்கும் தருணம் அச்சமும், இவ்வளவு தானா எனும் சந்தேகமும் நிரம்பியது. கண்ணெதிரே சாவு நிகழ்ந்த சில நிமிடங்களில் அந்த உடலை ஏந்தும் ஒரு அவல நிலைக்கு ஒருமுறை தள்ளப்பட்டேன். நான் கைகளில் ஏந்திக் கிடத்தியபோது 'கொரட்' என்ற சப்தம் மட்டும் ஒரேயொருமுறை மெலிதாய்க் கேட்டது. விரல்களை மடக்கியவாறு நெஞ்சில் கை வைத்துவிட்டு, உள்ளங்கை வைக்கும்போது உடலின் கதகதப்பு அப்படியே உள்ளங்கையில் ஒட்டிக்கொண்டது. உடல் குளிரத் தொடங்கியது. உள்ளங்கை சுடத் தொடங்கியது. அந்தச் சூடு அவ்வளவு எளிதில் என்னைவிட்டுப் போய்விடவில்லை.

காலம் கொஞ்சம் கொஞ்சமாக கையைக் குளிரச் செய்துகொண்டிருந்த நாள்களில் அது அக்கினி வெயிலின் ஒரு மதியப்பொழுது. இலக்கற்ற அரட்டையும், எதுவரையிலெனத் தீர்மானிக் காத மென் நடையுமாய் இரண்டு நண்பர் களுடன் அந்த ஏரிக்கரை மீது ஊர்ந்து கொண் டிருக்கிறேன்.

பெயர் சொல்லத் தெரியா மரம் செடி கொடிகள் இரு பக்கத்தி லிருந்தும் கூடி கூடாரம் அமைத்திருக்கின்றன. இருபக்கங்களிலிருந்தும் வளைந்த மரங்கள் கூட்டு வண்டியின் கூரைபோல் குனிந்திருக்கின்றன. காலம் காலமாய் விழுந்த தழை, இழை, காய், கனி, பூ என பாதையெங்கும் மெது மெதுப்பாய். முள் கிடக்கும் சாத்தியங்கள் ஏராளம். மொத்தமான செருப்பு என்பதால் பயமிருக்கவில்லை. அவ்வளவாக நிலத்தைக் கவனித்து எட்டி வைக்கவில்லை. அப்போது ஏனோ பார்க்கத் தோன்றியது. நடக்கும் வழியில் குருவிக்குஞ்சொன்று கீழே கிடந்தது. இறக்கை முளைக்கா பச்சிளம் குருவிக்குஞ்சு. கண்ணில் பாயும் அதன் மென்மை தொடு வதற்கே பயத்தைத் தருகிறது. என்ன செய்ய? அப்படியே விட்டுவிடவா? எடுத்து ஓரமாக வைக்கவா? எதாவது கிளையில் வைக்கவா? எப்படி இங்கு வந்திருக்கும்? கேள்விகளோடு எடுத்து கையில் ஏந்துகிறேன். அதுவரை உணரா ஒரு சூடு. அது வெயிலின் சூடல்ல, நிழலில்தான் கிடந்தது. சூடு உள்ளங்கையில் கொதிப்பாய் ஊடுருவுகிறது. ஒருபோதும் நான் உணர்ந்திராத சூடு. அந்த குருவிக்குஞ்சின் நடுக்கம் போலிருக்கும் துடிப்பு உயிரெங்கும் பரவுகிறது.

சிறுவனாய் இருந்த காலத்தில் மரம் ஏறி கூடுகளிலிருக்கும் முட்டை, குஞ்சுகளைக் கூட பார்த்ததாக, எடுத்ததாக ஞாபகம். சமீபத்தில் என்ன 20-30 ஆண்டுகளாக இப்படி ஒரு குஞ்சைக்கூடப் பார்த்ததில்லை. சுற்றிலும் பார்த்துவிட்டு மேலே அண்ணாந்து பார்த்தால் தலைக்கு மேலே ஒரு குருவிக் கூடு தெரிகிறது. கூட்டிலிருந்து விழுந்திருக்கலாம் என்பது புரிகிறது. கூடு இருக்கிறதே. கூட்டிலையே வெச்சுறலாமா? எனக் கேட்க, கண்ணன் கடுமையாக மறுக்கிறார். அவ்வளோதான் இனிமே தாய்க்குருவி அதைச் சேர்க்காது

ஏனென்று ஆராயவோ விவாதிக்கவோ அப்போது தோன்றவில்லை, நேரமுமில்லை. என்னவோ நடக்கட்டும், கூட்டில வைச்சிடுவோம். சேர்த்தா சேர்க்கட்டும். இல்லை என்றாலும் சரி.. இப்படியே விடவோ, ஓரமாகப் போடவோ வேண்டாம். கூட்டில எனச் சொல்லிவிட்டு எட்டிவைச்சிடுவோம் அந்தக் கிளையைப் பிடிக்க முயற்சிக்கிறேன். எட்டவில்லை. கண்ணனைக் கை நீட்டச்சொல்லி அவர் கையில் கிடத்தி விட்டு. நாலெட்டு ஓடி வந்து குதித்து கிளையைப் பிடிக்கிறேன். கூடு விழுந்துவிடக் கூடாதே என்ற பயம். கிளை ஆடியதில் தாய்க்குருவி பறந்தோடுகிறது. அப்படியே பதமாக வளைத்து வசமான இடம் வந்ததும் கூட்டில் குருவிக்குஞ்சை விடுகிறோம். கூட்டில் இன்னொரு குஞ்சும் இருப்பது தெரிகிறது. சேர்த்துக் கொண்டு கூட்டில் கூட்டமாய் வாழ்வதும், கூடுவிட்டு பறந்தோடுதும் இனி அவர்கள் பாடு. எங்கு துடைத்தாலும் அந்த குருவிக் குஞ்சின் சூடு உள்ளங்கையை விட்டுப் போகவேயில்லை.

குருவிக்குஞ்சுக்காகத் துடித்த என் பெருங்கருணை குறித்து எனக்கே ஆச்சரியமாக இருக்கின்றது. அதே தினத்தில் மதிய சமையலுக்காக வீட்டில் கொடுத்துவிட்டு வந்த கோழிக்கறியிலிருந்து வெளியேறியிருக்கும் உயிர் பற்றி மறந்துவிடும் மனநிலை வாய்த்தமை குறித்தெல்லாம் ஆச்சரியப்படவேயில்லை நான்.

# தூக்கம் குறைவா? உயிருக்கு ஆபத்து!

தூக்கமின்மை தொடர்பாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு தகவல் வெளியிட்டு வருகின்றனர் விஞ்ஞானிகள்.

அந்த வகையில் தூக்கமின்மை தொடர்பாக மனிதர்களிடம் பெரும் அலட்சியப் போக்கு காணப்படுகிறது. அது அவர்களின் உயிருக்கே உலை வைக்கக்கூடிய ஆபத்தாக உருமாறியிருப்பதாக சர்வதேச ஆய்வாளர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், ஹார்வர்டு, மான்செஸ்டர் மற்றும் சர்ரே பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள்தான் இந்தக் கூட்டு எச்சரிக்கையை விடுத்திருப்பவர்கள். மனித உடலின் இயற்கையான செயற்பாடான தூக்கம் மற்றும் விழிப்புத் தன்மையை கட்டுப்படுத்தும் மனித உடலியக்கச் செயற்பாட்டு கண்காணிப்புத் தன்மையை உடல் கடிகாரம்' என்று விஞ்ஞானிகள் அழைக்கிறார்கள்.

கண்ணுக்குத் தெரியாத, ஆனால் மனித உடலின் அடிப்படைத் தேவையான தூக்கம் மற்றும் விழிப்புத்தன்மையை கட்டுப்படுத்தும் இந்த மனித உடல் கடிகாரம் என்பது சுமார் 400 கோடி ஆண்டுகளாக படிப்படியாக உருவான ஒன்று என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஒருநாளின் 24 மணி நேரத்தில் சராசரியாக வெளிச்சமாக இருக்கும் பகல் 12 மணி நேரத்தில் மனித உடல் விழிப்புடனும் துடிப்புடனும் இருப்பதும், வெளிச்சமற்ற 12 மணி நேரமான இரவில் மனித உடல் உறக்கம் கொள்வதுமான நடைமுறை என்பது இன்று நேற்று உருவானதல்ல. அது இன்றைய மனித உடல் உருவாகக் காரணமாக அமைந்த சுமார் 400 கோடி ஆண்டு பரிணாம வளர்ச்சியில் படிப்படியாக உருவாகி மனித உடலுக்குப் பழகிய ஒன்று என்கிறார், ஒக்ஸ்போர்டுட் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரஸ்ஸல் பாஸ்டர்..

இப்படி பல கோடி ஆண்டுகளின் பரிணாமத்தை தன்னுள் கொண்டு அதற்கேற்ப தன்னைத் தகவமைத்துக்கொண்டு வளர்ந்திருக்கும் இன்றைய மனித உடலின் கடிகாரச் செயற்பாட்டில் தற்போது மிகப்பெரிய இடையூறு ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார் அவர்.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் தூங்கிய சராசரி நேரத்தைவிட, இன்றைய மனிதர்கள் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் குறைவாகத் தூங்குவதாகக் கூறும் அவர், இந்தக் குறைவான தூக்கம் மனிதர்களின் உடல் ஆரோக்கியத்தில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக எச்சரிக்கிறார்.

தூக்கமின்மை என்பது வெறும் இரவு நேரப் பணியில் ஈடுபடுபவர்களை மட்டும் பாதிக்கும் பிரச்சினை அல்ல என்கிறார்கள் இந்த விஞ்ஞானிகள். இன்றைய நிலையில் இது ஒட்டுமொத்தமாக மனிதர்கள் அனைவரையும் பாதிக்கிறது என்றும், தொழில்நுட்பம் இதில் முக்கியக் காரணியாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டுகிறார்கள் அவர்கள்.

குறிப்பாக, குறிப்பிட்ட ரக மின்சார விளக்குகளின், நீலநிறம் அதிகமுள்ள வெளிச்சமும், தொடுதிரைக் கணினி மற்றும் தொடுதிரை செல்பேசிகளின் திரைகளில் இருந்து வெளியாகும் நீலம் கலந்த வெண்மையான வெளிச்சமும் மனிதக் கண்களில் தொடர்ந்து மணிக் கணக்கில் படும்போது தூக்கம் பெருமளவு பாதிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள் விஞ்ஞானிகள்.



அதன் விளைவாக மேற்கத்திய நாடுகளில் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்கள் கூட தங்களின் தாத்தா, பாட்டிகளின் தூக்க மாத்திரைகளை சாப்பிடும் அவல நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இந்த விஞ்ஞானிகள் கவலையுடன் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இப்படி முறையான, போதுமான தூக்கமில்லாமல் இருப்பதன் காரணமாக இதய நோய், நீரிழிவு நோய், உடல் பருமன், தொற்று நோய்கள் மட்டுமல்ல, புற்று நோய்கூட ஏற்படலாம் என்பது விஞ்ஞானிகளின் எச்சரிக்கை.

எனவே இரவு நேரத்தில் தொடுதிரைக் கணினி அல்லது தொடுதிரை செல்பேசி திரைகளில் மணிக்கணக்கில் பார்க்கும் பழக்கத்தையும், வீடுகளின் மின்விளக்குகளில் கூடுதல் நீலநிற வெண்மையை வெளியிடும் விளக்கு வெளிச்சத்தில் இருப்பதை தவிர்க்கும் படியும் விஞ்ஞானிகள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் அலட்சியம் ஆபத்தையே தரும் என்பது அவர்களின் கருத்து.

# என்ன பெயர் வைக்கலாம் பிள்ளைக்கு...!

யதீ ரமாமணி சுந்தர்

'பெயரில் என்ன இருக்கிறது?' என்று கேட்டார் ஆங்கில எழுத்தாளர் ஷேக்ஸ்பியர். ஆனால் பலரும் பெயரில்தான் எல்லாமே இருக்கிறது என்பதுபோல் குழந்தை பிறப்பதற்கு முன்பே என்ன பெயர் வைக்கலாம் என்று வீட்டில் பட்டி மன்றமே நடத்துகிறார்கள்.

ஒரு காலத்தில் குழந்தைக்கு ஏதாவது ஒரு தெய்வத்தின் பெயரையோ. அக்குழந்தையின் தாத்தா அல்லது பாட்டியின் பெயரையோ சூட்டுவது வழக்கமாக இருந்தது.

ஆனால் பெரியவர்களின் பெயரைச் சூட்டினால் குழந்தையை பெயர் சொல்லிக் கூப்பிட முடியாது. திட்ட முடியாது என்பதனால் பேபி. பாப்பா. அம்பி என்றெல்லாம் செல்லப் பெயரிட்டு. பிறகு அந்தப் பெயரே நிலைத்து விடுவதும் உண்டு.

அந்தந்தக் காலகட்டத்தில் பிரபலமாக இருந்த திரைப்பட நடிகர்,



நடிகைகளின் பெயர்கள் சூட்டப்பட்ட காலமும் ஒன்று உண்டு. இப்பொழுது இருக்கவே இருக்கிறது. இணைய தளம். வலை வீசி நல்ல பெயரைத் தேடிக்கொள்ளலாம்.

ஆனால் என்னதான் கஷ்டப்பட்டு பெற்றோர் குழந்தைகளுக்குப் பெயர்களைத் தேர்ந்தெடுத்து வைத்தாலும் அவர்கள் பெரியவர்களான் பின்னர். தங்களுக்கு பெற்றோர் சூட்டிய பெயர் பிடிக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

எண் சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் பெயர்களின் உச்சரிப்பு ராசியானதாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார்கள்.

சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில் ஆண், பெண் இருபாலருக்குமே ஒரே மாதிரியான பெயர்களே சூட்டப்படுகின்றன. பெண்ணென்றால் அத்துடன் கௌர் என்ற வார்த்தையும் ஆண் என்றால் சிங் என்ற சொல்லும் இணைக்கப்படும்.

இதற்கான காரணம். சீக்கியர்கள் குழந்தைக்கு வைக்க வேண்டிய பெயரைத் தங்களது புனித நூலான குருகிரந்த சாகிப்பிலிருந்து தேர்ந்தெடுக்கிறார்கள். கண்ணை மூடிக் கொண்டு அந்த நூலைத் திறந்து தாங்கள் கை வைக்கும் இடத்தில் எந்தப் பெயர் உள்ளதோ அந்தப் பெயரையே தெய்வத்தின் ஆணையாக ஏற்றுக் கொண்டு தங்கள் குழந்தைக்குச் சூட்டி விடுவார்கள்.

ஒரு காலத்தில் குழந்தைக்கு ஏதாவது ஒரு தெய்வத்தின் பெயரையோ. அக் குழந்தையின் தாத்தா அல்லது பாட்டியின் பெயரையோ சூட்டுவது வழக்கமாக இருந்தது.
ஆனால் பெரியவர் களின் பெயரைச் சூட்டினால் குழந் தையை பெயர் சொல் லிக் கூப்பிடமுடியாது.

பொதுவாக. திருமணத்துக்குப் பின்னர் பல மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பெண்களுக்கு உண்டு.

திருமணத்துக்குப் பிறகு பெண்கள் தங்கள் பெயருடன் கணவனின் பெயரை இணைத்துக் கொள்வது காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு வழக்கம். ஆனால் இன் றைய சூழ்நிலையில் இது சில பெண்களுக்கு மிகப் பெரிய அடையாளப் பிரச்சினையை உருவாக்குகிறது.

ஒரு பெண் திருமணத்துக்கு முன்பே ஒரு சிறந்த பாடகியாகவோ. எழுத்தாளராகவோ. ஆராய்ச்சியாளராகவோ தங்களுடைய கன்னிப் பருவப் பெயரிலேயே பிரபலமாகி இருக்கலாம். திருமணத்துக்குப் பிறகு கணவனின் பெயரை இணைத்துக் கொள்வதால் இவரேதான் அவர் என்று பலருக்குப் புரியாது.



சமீப காலத்தில் இந்தப் பிர்ச்சினைக்கு ஒரு புதிய தீர்வு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தங்களுடைய பெயருடன் தந்தையின் பெயர். கணவனின் பெயர் இரண்டையுமே இணைத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இதற்கு சமீபத்திய உதாரணம். பிரியங்கா காந்தி வதேரா. ஐஸ்வர்யா ராய் பச்சன். சௌந்தர்யா ரஜினிகாந்த் அஸ்வின் போன்றோர்.

இன்றைய தலைமுறைப் பெண்கள் கணவனைப் பெயர் சொல்லி அழைக்கிறார்கள். அல்லது செல்லப் பெயரிட்டு காதல்மொழி பேசுகிறார்கள். ஆனால் அந்தக் காலத்துப் பெண்கள் கணவன் பெயரை உச்சரிக்கக்கூட மாட்டார்கள். கணவனின் பெயர் உள்ள யாரையாவது பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால்கூட. 'நான் அந்தப் பெயரைச் சொல்ல மாட்டேனே'. அவர் வந்திருக்கிறார்' என்று சுற்றி வளைத்துச் சொல்வதைப் புரிந்து கொள்வதற்குள் எமக்குத் தலையைச் சுற்றும்.

இன்றும் இந்த நாட்டில் எத்தனையோ குடும்பப் பெண்கள் தங்களுடைய பெயரே வெளி உலகுக்குத் தெரியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முத்துசாமி வீட்டம்மா', ஆறுமுகம் பெண்டாட்டி', சுப்பையாவின் மனிசி' போன்று கணவனின் பெயரை வைத்தே அறியப்படும். அழைக்கப்படும். அடையாளப்படுத்தப்படும் அளவுக்கு தங்கள் சொந்தப் பெயரை மட்டுமல்ல. தங்களின் சுயத்தையே இழந்து போய் நிற்கிறார்கள் இந்தப் பெண்மணிகள்.



ABS Gardner Dixon Hall
CMYK

# நம்பிக்கையிருந்தால் என்றும் மகிழ்ச்சி

நமக்கு மகிழ்ச்சி என்பது பொருள்களில் இல்லை. அவற்றைப் பெறுவதில்தான் இருக்கிறது. அதனால்தான் நாம் கடை கடையாக ஏறி, நமக்குப் பிடித்தமானதை வாங்குகிறோம்.
மகிழ்ச்சி எங்கெல்லாம் இருக்கிறது? ஒலிக்கின்ற அருவியில், உலவுகின்ற காற்றில், அழகுப் பூக்களில், கவலை சிறிதுமில்லாத குழந்தையின் முகத்தில் இப்படி எண்ணற்ற இடங்களில் மகிழ்ச்சி பரவிக் கிடக்கின்றது.
சவால் என்பது சாதாரணமானதல்ல. ஒரு சவாலை நீங்கள் எதிர்கொள்கின்றபோது அது உள்ளடக்கிய அதிக பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சவால்கள் வளர்ச்சிக்கு அவசியம். அவற்றை வெல்கின்றபோது நீங்கள் வளர்ச்சி அடைகிறீர்கள் என்று அர்த்தம்.
எம்முடைய ஆற்றலை உறுதியான முறையில் பயன்படுத்துகின்றபோது, எமது வாழ்விலும் அற்புதங்கள் நிகழும்.
நீங்கள் எப்படிச் சிந்திக்கிறீர்கள், எப்படி உணர்கிறீர்கள், நம்புகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்களுடைய வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது.
உங்களுடைய வழக்கமான சிந்திக்கும் முறைதான் வெற்றி அல்லது தோல்விக்கான விதையை உங்கள் மனதில் ஊன்றுகிறது.
வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு, உங்களுக்குள் ஏராளமான திறன்கள் காத்திருக்கின்றன. என்றாலும் அவற்றை இனம் கண்டுகொள்ள வேண்டும். அவற்றைக் கருத்துடன் வளர்க்க வேண்டும். நம்முடைய திறமை யைக் கொண்டு பல

“ வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு, உங்களுக்குள் ஏராளமான திறன்கள் காத்திருக்கின்றன என்றாலும் அதை கண்டு கொள்ள வேண்டும். அதை கருத்துடன் வளர்க்க வேண்டும்.





உன்னதங்களை நாம் நிகழ்த்த முடியும் என்று நம்புங்கள்.
எதுவுமே இல்லாதிருப்பதை விட ஏதாவது ஒன்றைப் பெற்றிருப்பது மேலானது என்பார்கள்.
நம்பிக்கை என்பது விரும்பிய விதத்தில் எண்ணமிடுவது அல்ல, ஒன்றைத் திடமாக நம்புவது. ஒரு எண்ணத்தை, ஒரு திட்டத்தை, ஒரு செயலை உங்களால் உருவாக்க முடியும் பின்னணியில் வலுவான நம்பிக்கை இருந்தால் எதுவும் சாத்தியம்.
ஒரு விதையளவு நம்பிக்கை இருந்தால் போதும். சிறிய விதைதான். ஆனால் அது விதைக்கப்பட்டு விடுகின்றபோது அது செல்வத்தையும், ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவந்து விடுகிறது.



# நல்ல நினைவுகள் விரைவில் மங்குவதில்லை

நாம் வாழ்க்கையில் சில விடயங்களை நீண்ட நாள்களுக்கு நினைவு கொள்கிறோம். சிலவற்றை குறுகிய காலத்தில் மறந்து விடுகிறோம்.
இது எப்படி நடைபெறுகிறது என்பதை விஞ்ஞானிகள் இப்போது கண்டறிந்துள்ளார்கள். மனித குலத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்கவும், எதையும் தாங்கும் வல்லமை கொண்டவர்களாக மனிதர்கள் வாழ்வதற்காகவும் நல்ல நினைவுகள் நீண்டகாலம் நீடித்திருக்கின்றன என்று உளவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
தீய நினைவுகளை விட்டொழித்து நல்ல நினைவுகளைத் தக்க வைத்துக் கொள்வது, வாழ்க்கையில் கசப்பான உணர்வுகள் மற்றும் நிலைமைகளைச் சமாளித்து சாதகமான அம்சங்களை முன்னெடுக்க உதவுகிறது என்று உளவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.
தீய நினைவுகள் விரைவாக மங்குகின்றன என்ற ஒரு கோட்பாடு 80 வருடங்களுக்கு முன்னர் முதல் முறையாக முன்வைக்கப்பட்டது. பின்னர் 1970 ஆம் ஆண்டுகள் தொடக்கம் இதுகுறித்து பல்லின மக்களிடம் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.
இதன் ஒரு பகுதியாகச் சுற்றுலாப் பயணம் தொடர்பான நினைவுகள் குறித்து ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. அதில் தாங்கள் அதில் கழித்த உல்லாசமான நாள்கள், சந்தித்த மக்கள் என்பவை குறித்து அவர்கள் உடனடியாக நினைவு கூர்ந்தனர். அதே நேரம் தாமதமான விமானப் பயணம் போன்றவற்றை அவர்கள் மறந்து விட்டிருந்தனர்.
இதையடுத்து இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ள உளவியல் விஞ்ஞானிகள், மனிதர்களிடையே விரும்பத்தகாத நினைவுகள் மற்றும் கசப்புணர்வுகள் வேகமாக மங்கி வருகின்றன என்று தெரிவித்துள்ளனர்.
எனவே இயற்கையாகவே தீய நினைவுகள் விரைவாக மங்கத் தொடங்குகின்றன என்பது நாடுகளையும் கலாசாரங்களை கடந்த ஒன்றாக உள்ளது என்று ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

“ இயற்கையாகவே தீய நினைவுகள் விரைவாக மங்கத் தொடங்குகின்றன என்பது நாடுகளையும் கலாசாரங்களை கடந்த ஒன்றாக உள்ளது.

# வெய்யிலினால் சருமம் கறுப்பதைத் தடுக்க....

வெய்யில் காலம் வந்துவிட்டாலே, சருமம் கறுத்து விடப் போகிறது என்ற கவலையும் வந்துவிடுகிறது. வெய்யிலின் தன்மை அதிகம் இருக்கும்போது சருமம் வாடுகிறது.
இதனால் கறுமையான நிறமும் தோன்றுகிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு இருக்கும்போது எதற்காகக் கவலைப்பட வேண்டும்.
வெய்யிலினால் தொடரும் அச்சத்தைத் துரத்துங்கள். இதோ இதற்குத் தீர்வுகள் உள்ளன.
மாறிவரும் உலகில் பெண்கள் வெளியில் செல்லாமல் இருப்பது கடினம். எனினும் காலை பத்து மணி முதல் பிற்பகல் நான்கு மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது சருமத்தை வெய்யிலின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும்.
வெய்யில் நேரடியாக சருமத்தில்படாத அளவுக்குக் குடை பிடிக்க வேண்டும்.
சூரியக் கதிர்களின் தாக்குதலால் சருமம் கறுத்துப் போகாமல் இருக்க சன் ஸ்கிரீம் உபயோகப்படுத்தும் பெண்கள் முதலில் தங்கள் சருமம் எந்த வகையானது என்பதை உறுதி செய்து பின் அதற்கு ஏற்ற சன் ஸ்கிரீமைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்தவேண்டும்.
எண்ணெய்த் தன்மை கொண்ட சருமம் என்றால் ஜெல் வடிவிலான சன் ஸ்கிரீமை பயன்படுத்துங்கள்.
பொதுவான வகை சருமம் கொண்டவர்கள் மேட் பினிஷ் வகையை உபயோகப்படுத்த வேண்டும்.



தற்போது உஷ்ணம் மிக அதிகமாக இருப்பதால் பெண்கள் வெளியே செல்வதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்பே சன் ஸ்கிரீமை முகத்தில் பூசிக்கொள்ளவேண்டும்.
அவசர அவசரமாக பூசிவிட்டு வெளியே சென்றால், அதிகம் வியர்க்கும்போது பெரும்பாலும் சன் ஸ்கிரீம் நீங்கிவிடும். அதனால் வெளியில் செல்வதற்கு 10-15 நிமிடங்களுக்கு முன்பே பூசிவிடுவது நல்லது.